இந்தியமக்களின் சரித்திரச் சுருக்கம்

முதற் புத்தகம்: பூர்வீக இந்தியா

இயற்றியவர்
எச். ஜி. ராலின்ஸன்

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

Annas 14

India Makkalin Charitira Churukkam
Muthar Putthakam: Purveeka India

(*A Concise History of the Indian People. Book I: Ancient India*)

By H. G. RAWLINSON
Translated into Tamil by A. V. Sundaresan

முதற் பதிப்பு 1941

முகவுரை

தொல்பொருட் கலை ஆராய்ச்சியின் மூலமாக நாளது வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதிய விஷயங்களடங்கியும், இந்தியாவின் வரலாற்றைத் தற்காலம் வரையில் விவரிக்கப்பெற்றும் உள்ள ஓர் இந்துதேச சரித்திரச் சுருக்கத்தின் அவசியம் வெகுநாளாக இருந்து வந்திருக்கிறது. இந்தியாவைப்பற்றிய ஆராய்ச்சிகளில் முதலில் புகுந்தவரான காலஞ்சென்ற டாக்டர் வி. ஏ. ஸ்மித்தின் மேன்மையான நூல்கள் விஷயங்களிலும், பொது நோக்கத்திலும் பழையனவைகளாகப் போய்விட்டபடியால், இந்துதேச சரித்திரத்தை மறுபடியும் புதிய முறையில் ஒழுங்குபடுத்திக் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது. மேற்கூறிய குறைவுபாட்டை நீக்குவதே இப் புத்தகத்தின் நோக்கம். இது முக்கியமாய் இந்தியப் பல்கலைக் கழகங்களின் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குச் செல்லும் மாணவர்களின் உபயோகத்திற்காக எழுதப்பட்டிருக்கிறது. இந்தியாவைப்பற்றி ஆங்கிலேயப் பொது மக்கள் மிக அதிகமான சிரத்தை காட்டிவருவதால், இத் தேசம், இதன் பல்வேறு இனத்தினர், இவைகளைப்பற்றி சுலபமாகவும், பொதுவாகவும் இருக்கும் வர்ணனையைப் படிக்க விரும்பும் ஆங்கிலப் பொது வாசகர்களுக்கு இது உகந்ததாயிருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டன் **எச். ஜி. ராலின்ஸன்**

1938

மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு

மிஸ்டர் எச். ஜி. ராலின்ஸன் இயற்றிய 'இந்திய மக்களின் சரித்திரச் சுருக்கம்' அவருடைய முகவுரையில் கண்டபடி, நாளதுவரையில் தொல்பொருட் கலையின் உதவியால் ஆராய்ந்தறியப்பட்டிருக்கும் புதிய விஷயங்கள் அடங்கப்பெற்றதுமல்லாமல், நமது தேச சரித்திரத்தைச் சுலபமான முறையில் மிகத் தெளிவாகவும், கோர்வையாகவும் கூறியுள்ளதாயிருக்கிறது. மன்னர்களின் வரலாறுகளையே விவரிக்கும் சாதாரண புத்தகங்களைப் போலல்லாமல், அவ்வக் காலங்களில் பொது மக்கள் இருந்த நிலைமையையும் வர்ணித்திருப்பது இப்புத்தகத்தின் விசேஷ அமிசமாகும். ஆகையால் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் பயன்படுமாறு இப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட முன்வந்த ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்ஸின் இவ்வரிய சேவை பாராட்டுதற்குரியது. ஆயினும் சென்னை கல்வி இலாகா எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையின் ஏ வகுப்பு இந்துதேச சரித்திரப் பாடத்திற்கு வகுத்திருக்கும் பாடதிட்டத்திற் குகந்ததாயிருக்குமாறு, மூல நூலினின்று சில பகுதிகளை நீக்கியும், சில விபரங்களைக் குறுக்கியும் மொழிபெயர்க்கவேண்டியதாயிற்று. கூடுமானவரையில் புத்தக கர்த்தாவின் கருத்துகளை உள்ளபடி அமைத்தும், அவர் சொல்வன்மை குன்றுமலும், எளிய நடையில், சாதாரணமாக நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் உபயோகத்திலிருக்கும் கலைச்சொற்களைப் பின்பற்றி மொழிபெயர்த்துள்ளேன். இப்புத்தகத்தில் 15, 17, 23-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கும் ஆங்கிலச் செய்யுள்களின் மொழிபெயர்ப்பாகிய தமிழ்ப் பாட்டுகளை வித்வான் ஸ்ரீ எஸ். நாகராஜ அய்யர் (சேலம், ஸெயின்ட் மேரி மத்தியதரப் பெண்பாடசாலையின் தமிழ்ப்

B

பண்டிதர்) இயற்றி உதவியுள்ளார். அவருக்கு என்னுடைய நன்றியும் பிரசுர கர்த்தாக்களின் நன்றியும் உரியதாகும். மொழிபெயர்ப்பைப் பார்வையிட்டு அது சிறப்புறும் வகையில் உரிய யோசனைகள் கூறிய கம்பெனி பார்வையாளருக்கும் நான் நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்

சேலம் ஏ. வி. சுந்தரேசன்

2. 2. 1941

பொருளடக்கம்

படங்களின் அட்டவணை

முதற் புத்தகம்

பூர்வீக இந்தியா

அத்தியாயம் I

இந்தியாவின் பூமி அமைப்பும் சரித்திரக் காலத்திற்கு முற்பட்ட நாகரீகமும்

இந்தியா. இந்தியா என்னும் சொல் கிரேக்க பாஷையைச் சார்ந்தது. இதன் பொருள் சிந்துநதிப் பிரதேசம் எனப்படும். முதலில் கிரேக்கர்கள் ஒரு காலத்தில் பஞ்சாபின் பகுதியை ஆண்டுவந்த பாரசீகர்களின் மூலமாக ஆரியர்களைப்பற்றி அறியலானார்கள். ஆகவே பிற்காலத்தில் மேல்நாட்டார் தங்களுக்கு வெகு நன்றாகத் தெரிந்த ஒரு பாகத்தின் பெயரையே நாடு முழுவதற்கும் வழங்கியதால் இங்கு வசிப்பவர்கள் ஹிந்துக்கள் அல்லது இந்தியர்களென்று அழைக்கப்படலாயினர். வட இந்தியா முழுவதையும் ஆண்டுவந்ததாகப் புராணத்தில் கூறப்பட்டிருக்கும் பரதனின் நாடு என்று பொருள்படும் '**பாரத வர்ஷம்**' என்னும் சொல்தான் ஸம்ஸ்கிருத பாஷையில் '**இந்தியா**' என்னும் சொல்லிற்குச் சற்றேறக்குறைய சமமானதாகும்.

பல மதத்தைச் சார்ந்தும் பல பாஷைகளைப் பேசுகிறவர்களுமான பல்வேறு இனத்தினர்கள் வசிக்கப்பெற்ற இந்நாட்டை ஒரு தேசமென்று கருதக்கூடாது. ஒரு கண்டமென்றே கொள்ளல்வேண்டும். தென்வடலாகவும் கிழக்கு மேற்காகவும் மிக விசாலமான பாகத்தில் இதன் நீள அகலங்கள் முறையே சற்றேறக்குறைய 2,000 மைல். இதன் பரப்பு 17½ லக்ஷம் சதுரமைல். இது பிரிட்டிஷ் தீவுகளைப்போல் இருபதுமடங்கு பெரியது. இதன் ஜனத்தொகை இங்கிலாந்தின் ஜனத்தொகையைக்காட்டி

லும் ஏறக்குறைய பதின்மடங்கு அதிகமானது. உலக ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்கு.

மதங்கள், இனங்கள், பாஷைகள். ஐரோப்பியர்கள், பார்ஸிகள் நீங்கலாக ஏனைய இந்திய மக்களுள் ஹிந்துக்களும் முகமதியர்களும் முக்கியமான பிரிவினராவார்கள். இந்நாட்டின்மீது படையெடுத்த முகமதியர்களுள் பெரும்பாலோர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்களாயினும், பாரசீகமே அவர்களுடைய அரசாங்க பாஷையாக இருந்தது. பிற்காலத்தில் இப்பாஷை ஹிந்தியுடன் கலப்புற்று, 'ராணுவ முகாங்களில் வழங்கும் பாஷை' என்று பொருள்படும் உருது பாஷையாக மாறிற்று. ஹிந்துக்களில் அநேக ஜாதிகளும், உட்பிரிவுகளும் இருந்தபோதிலும், அவர்களுள் எல்லோருக்கும் பொதுவான சில மதக்கொள்கைகளும், பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. அவர்கள் ஆரியர்கள், திராவிடர்கள் என்ற முக்கியமான இரு பிரிவுகளைச் சார்ந்தவர்கள். ஆரிய பாஷைகளனைத்தும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து தோன்றியவை. ஆனல் திராவிடபாஷைகள் ஆரிய பாஷைகளினின்றும் முற்றிலும் வேறுபட்டவை.

இயற்கை அமைப்பு. இந்தியாவின் இயற்கை அமைப்புப் படத்தைப் பார்த்தால் முக்கோண வடிவமான இத்தேசத்தின் இருபக்கங்களிலிருக்கும் அகன்ற கடல்களும், வடக்கிலிருக்கும் உன்னதமான மலைச்சுவர்களும் இந்நாட்டின்மீது அன்னியர்கள் படையெடுக்காவண்ணம் பாதுகாத்து வந்திருக்கின்றன என்பது விளங்கும். ஆனல் வடக்கு மலைத்தொடர்களின் வடமேற்கு மூலையிலிருக்கும் பல கணவாய்களுள் முக்கியமாய் கைபர், போலன் கணவாய்களின் வழியாக ஆதிகாலம் தொடங்கி பதினெட்டாம் நூற்றுண்டின் மத்தியகாலம் வரையில் ஆரியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள் முதலான எண்ணிறந்த அன்னியர்கள் சமுத்திர அலைகள்போல் ஒருவர் பின் ஒருவராக இந்நாட்டின்மீது படையெடுத்து வந்தார்கள். ஆகவே இந்துதேச சரித்திரம் அநேகமாக வடமேற்கு கணவாய்களின் வழியாக ஏற்பட்ட படையெழுச்சிகளின் வரலாறுகள் என்றே கூறலாம். படத்தை



இயற்கை அமைப்பு. 300 மைலுக்கு ஒரு அங்குலம்
உயரம் அடியிலும், ஆழம் பாதமிலும்.

மறுபடியும் கவனித்தால் இந்தியாவை வடமேற்கு இந்தியா அல்லது பஞ்சாப், ஹிந்துஸ்தானம், தக்ஷிணம், தென்னிந்தியா என நான்கு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாமென்பது புலப்படும். இவை ஒவ்வொன்றிலும் ஒரு நதிக் கூறு இருப்பது கவனிக்கத்தக்கது. ஸிந்து நதியும் அதன் உபநதிகளும் பாயும் பிரதேசமாகிய பஞ்சாப் மிக்க நீர்வளம் பொருந்தி யிருப்பதால், இதன் மீது மத்திய ஆசியாவில் வசித்துவந்த காட்டுமிராண்டி ஜாதியினருக்கு எப்பொழுதும் தடுக்கமுடியாத மோகம் இருந்துவந்தது. ஆகையால்தான் இப்பிரதேசம் தொன்றுதொட்டு கடுமையான போர்கள் நடந்து வந்த யுத்தகளமாக இருந்து வந்திருக்கிறது. ஆதிகாலத்தில் **'ஆரியவர்த்தம்'** என்று அழைக்கப்பெற்ற ஹிந்துஸ்தானம் வடக்கே இமயபர்வதங்களுக்கும் தெற்கே விந்திய மலைகளுக்கும் இடையே கங்கையும் அதன் உபநதிகளும் பாயப்பெற்ற ஒரு விசாலமான வண்டல்மண் நிறைந்த சமவெளி. ஆரியர்களின் நாகரீகம் பூர்ணமாக மேம்பாடடைந்ததும் பிற்காலத்தில் ஹிந்துக்கள், முகமதியர்கள் இவர்களின் ஸாம்ராஜ்யங்கள் சிறப்புற்று விளங்கி வந்ததும் இங்குதான். வங்காளத்தில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் முதலில் கங்காநதி தீரத்தைத் தங்கள் வசமாக்கிக்கொண்டு, பிறகு இராஜ்யத்தை வியாபிக்கும் மார்க்கத்தில் இறங்கினதேயாகும். விந்திய சாத்பூரா மலைக்காடுகளுக்கும் கிருஷ்ணை நதிக்கும் இடையே பெரும்பாலும் காடடர்ந்தும், மேடுபள்ளங்கள் நிறைந்தும், நிர்மானுஷ்யமானதுமான பிரதேசம் 'தக்ஷிணம்' அல்லது தக்ஷிணபதமெனச் சொல்லப்படுகிறது. அதன் மத்திய பாகத்தில் இருக்கும் செழுமை வாய்ந்த அகன்ற சமநிலத்தில் வசிக்கும் மாராத்தியர்கள், வடநாட்டிலிருந்து வந்த அன்னியர்களுக்கும், ஏற்கனவே இங்கு வசித்துவந்த குடிகளுக்கும் விவாக சம்பந்தம் ஏற்பட்டுக் கலப்புற்ற ஜாதியார்களின் சந்ததியார்களாவர் என்று கருதப்படுகிறது. எல்லா மலைவாசிகளைப் போல் இவர்களும் சிக்கனம், வலிமை, சுயேச்சை முதலிய குணங்கள் பொருந்தியவர்கள். இப்பிரதேசத்தில்

காணப்படும் குன்றுகளின் முடிகளும், இவைகளின் சாரல்களில் உள்ள கடக்கமுடியாத காடுகளும் மராத்தியர்களுக்குத் தங்களை ஜெயிக்க வந்த விரோதிகளை எதிர்த்துப் போர் புரிய எக்காலத்திலும் உதவி புரிந்து வந்தன. சமுத்திரக் கரையை ஒட்டினாற்போல் தக்ஷிணபீடபூமிக்கு மேற்கு எல்லையாயும், படிப்படியாக உயர்ந்து செல்வது மான மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் சமுத்திரத்திற்கும் மத்தியில் தென்மேற்குப் பருவக்காற்றால் ஏராளமான மழையைப்பெறும் குஜராத், கொங்கணம், மலையாளம் என்ற நாடுகள் இருக்கின்றன.

கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் இருக்கும் தமிழ்நாடு எனப்படும் திராவிட நாட்டில் வசிக்கும் திராவிடர்கள் ஆரியர்களினின்றும் வேறுபட்ட வமிசத்தினின்று உதித்து, சுயேச்சையாகத் தங்கள் வழியிலேயே மேம்பாடடைந்தவர்கள். இப்பிரதேசம் இயற்கைத்தடைகளினால் வட இந்தியாவினின்றும் பிரிக்கப்பட் டிருப்பதால், எக்காலத்திலும் இங்கு பிரத்தியேகமான நாகரீகம் வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. ஹிந்துஸ்தானத்தைப் போலல்லாமல் இதற்கு நீண்ட சமுத்திரக்கரை அமைந்திருப்பதால், ஆதிகாலம் தொடங்கியே மேற்கு தேசங்களிலிருந்து வர்த்தகர்கள் இங்கு ஏராளமாய்ப் பயிராகும் பல்வகை வாசனைத்திரவியங்களுக்காக இக்கரைப்பிரதேசங்களுக்கு வருவதுண்டு. பிற்காலத்தில் கப்பல்களை அமைப்பதிலும் கப்பலோட்டுவதிலும் அபிவிருத்திகள் ஏற்பட்ட பின்னர் ஐரோப்பியர்கள் இங்கு வரத் தலைப்பட்டனர். கி. பி. 1498-ல் கள்ளிக்கோட்டைக்கு வந்த போர்ச்சுகீஸியர்களே இந்நாட்டைக் கைக்கொள்ள கடல் மார்க்கமாய் முதன் முதலாக வந்த ஐரோப்பியர்களாவர். இவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித்தான் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும், பிரஞ்சுக்காரர்களும் இந்தியாவிற்கு வந்தனர். இவ்வைரோப்பியர்களின் வருகையினால் நமது நாட்டின் சரித்திரத்தில் ஒரு புதிய ஆட்டம் ஆரம்பமாயிற்றென்றே சொல்லவேண்டும்.


ஆதிகாலக் குடிகள். ஆதிகாலம் தொடங்கியே இந்தியாவில் மக்கள் வசித்து வந்திருக்கின்றனர். உலோகங்

களின் உபயோகத்தையே அறியாமல் கற்கருவிகளை உபயோகித்து வந்த நமது நாட்டின் பழைய குடிகள் புராதன கற்காலம், நவீன கற்காலம் என்று சொல்லப் படும் காலங்களில் வசித்துவந்த னர். பழைய கற்காலத்தின் கருவிகள் காடுமுரடாகச் செதுக் கப்பட்டிருந்தன. புதிய கற்கால மக்களுக்கு மட்பாண்டங்கள் செய்யத்தெரியும். சிறிது காலத் திற்குப் பிறகு, இவர்கள் குயவன் சக்கரத்தின் உபயோகத்தையும் கற்றுக்கொண்டார்கள். புதிய கற்கால மக்கள் சவங்களை இடு காடுகளில் புதைத்து அச்சமாதி களின்பேரில் பெரிய கற்பாறை களைச் சமாதிக்கல் நாட்டுகளைப்போல் நிறுத்திவைத்தனர்.



சவப்பானை (திருநெல்வேலி)

சரித்திர காலத்திற்கு முற் பட்ட காலத்திய சின்னங் கள் பெல்லாரி, திருநெல்வேலி ஜில்லாக்களிலும், ஐக்கிய மாகாணத்திலுள்ள மிர்ஸா புரத்திலும் கண்டெடுக்கப் பட்டு, காக்ஷிசாலைகளில் வைக் கப்பட்டிருப்பதைக் காண லாம். நாளடைவில் கற்கால மனிதர்கள் உலோகங்களினால் ஆயுதங்களைச் செய்யக் கற்றுக்கொண்டார்கள். முதலில் தாமிரத்தையும் பிறகு இரும்பையும் உபயோகப்படுத்தி



தாமிரக் கோடரி (கெல்டிக்)



தாமிர எறியீட்டி

ஞர்கள். வெள்ளீயம், தாமிரம் இவைகளின் கலப்பு உலோகமாகிய வெண்கலம், ஸிந்து நதிச் சமவெளியைத் தவிர மற்ற இடங்களில் உபயோகத்திலிருந்ததாகக் காணப்படவில்லை.

கற்கால மக்களின் சந்ததியார்கள் விந்தியமலைக் காட்டுப் பிரதேசங்களில் எஞ்சியிருக்கும் உட்புகமுடியாத உள்நாட்டு வனங்களில், தற்காலம் வசித்து வருகிறார்கள். இவர்களில் முக்கியமான ஜாதியார்கள் கல்கத்தாவிற்கு மேற்கே வசிக்கும் சந்தாலர்களும் (Santals) ஒரிஸா மலைப் பிரதேசங்களில் வசிக்கும் காண்ட்



பழங்குடிகளின் சந்ததியார்களான மலைச் சாதியார்கள்

(Khonds) ஜாதியாரும் மத்திய இந்தியாவில் காணப்படும் கொண்டர்களும் (Gonds) ஆவார்கள். இவர்கள் பேசும் பாஷைகள் ஆரிய திராவிட பாஷைகளினின்றும் முற்றிலும் மாறுபட்டும் முண்டா பாஷைகளினின்றும் தோன்றியதுமான பிரதேச பாஷைகளாகும். இவர்கள் இன்னும் அநாகரீகமான நிலைமையிலேயே இருக்கிறார்கள்.

ஸிந்துநதிச் சமவெளி நாகரீகம். பழையகால வரலாறுகளை ஆராயும் கலைஞர்களுடைய ஆராய்ச்சிகளின் பயனாக கி. மு. 4000 வருஷத்திற்கு முன்னால் ஸிந்து நதிச் சமவெளியில் ஒரு மேன்மைவாய்ந்த நாகரீகம்

விளங்கி வந்ததாகத் தெரியவருகிறது. இதைப்பற்றி சில வருஷங்களுக்கு முன்புவரையிலும் ஒன்றும் தெரியாமலிருந்தது. பஞ்சாப் மாகாணத்தில் மாண்ட்காமரி ஜில்லாவிலுள்ள **ஹரப்பாவும்,** ஸிந்து மாகாணத்தில் லார்க்காணுவிற்குச் சமீபத்திலுள்ள **மொஹெஞ்சொதாரோவும்** இந்நாகரீகத்தின் முக்கிய ஸ்தானங்கள். மொஹெஞ்சொதாரோவில் பூமிக்கடியில் புதைந்துகிடந்த ஓர் நகரத்தைக் கண்டுபிடித்திருக்கிறுர்கள். இது செங்கலினுல் கட்டப்பட்டு, நேராகவும் அகலமாகவும் உள்ள



மொஹெஞ்சொதாரோவில் பூமியின்கீழ் புதைந்துகிடந்த வீடுகளும் தெருவும்

சாலைகளுடனும், மிகப் பிரயாசைப்பட்டு ஏற்படுத்திய சாக்கடைத் திட்டத்துடனும் விளங்கிவந்ததாகத் தெரியவருகிறது. பல கற்றூண்கள்கொண்டு கட்டப்பட்ட ஓர் பெரிய மண்டபமும், பொது ஸ்நான கட்டமும் இந்நகரத்தின் முக்கியமான அமிசங்கள். இங்கு வசித்த ஜனங்கள் கற்களினுலும் தாமிரத்தினுலும் செய்யப்பட்ட கருவிகளை உபயோகித்து வந்தமையால், இவர்கள் **கல்-தாமிர** காலத்தைச் (*chalcolithic*) சார்ந்தவர்களாவர். இவர்கள் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பெற்ற


தங்க மாலைகளையும், வெள்ளி மாலைகளையும் ஆபரணங்களாக அணிந்து வந்தனர். சக்கரத்தின் உதவியால் நேர்த்தியான மட்பாண்டங்களை சித்திரவேலைப்பாட்டுடன் இவர்கள் செய்துவந்திருக்கின்றனர். மண்ணினால் குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்களையும் செய்துவந்ததாகத் தெரியவருகிறது. இவர்கள் விசேஷ சித்திரக்கலைஞானம்பெற்றவர்கள் என்பதை இங்கு கிடைத்திருக்கும் மிக அழகுவாய்ந்த சில விக்கிரகங்கள் நிரூபிக்கின்றன. ஆயினும் இங்கு கண்டெடுக்கப்பட்ட



மொஹெஞ்சொதாரோவின் பொது ஸ்நான கட்டம்

வைகளில் மிகவும் விசேஷமானவை, ரிஷபம், யாளி முதலிய மிருகங்களின் உருவங்களை மாக்கல்லில் செதுக்கப்பெற்ற முத்திரைகளாகும். நாளதுவரையில் இம்முத்திரைகளின்பேரில் இருக்கும் வார்த்தைகள் எந்த லிபியைச் சார்ந்தவையென சரித்திர நிபுணர்களால் கண்டுபிடித்து வாசிக்க முடியவில்லை. சிந்துநதிச் சமவெளியில் வாழ்ந்துவந்த இம்மக்கள் மெசொபடோமியா தேசத்தில் வசித்துவந்த **சுமேரியர்களுடன்** ஒருவாறு சம்பந்தப்பட்டவர்களென்று யூகிக்க இடமிருக்கிறது. எப்பொழுது,

எவ்வாறு இவர்கள் அழிவுற்றார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இவர்கள் யுத்த ஆர்வமில்லாமல் சமாதானத்தை நாடியிருந்தமையால், மலைகளிலிருந்து படையெடுத்து வந்த காட்டுமிராண்டி ஜாதியினர் இவர்களை இருந்த இடம் தெரியாமல் நாசமாக்கி யிருக்கலாம்; அல்லது ஒருகால் சிந்து நதியின் 'போக்கு மாறியதாலோ, அல்லது மலேரியா விஷஜுரம் பரவியதின் காரணமாகவோ, இந்



மொஹெஞ்சொதாரோவில் வெட்டியெடுக்கப்பட்ட சிற்பவேலையும்
உருவங்களைப் பதிப்பிக்கும் முத்திரைகளும்

நாடு க்ஷீணித்துப் போயிருக்கலாம். ஆரியர்கள், சைவாகம பூஜையையும், எழுத்துக் கலையையும் இவர்களிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கவேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். ஆயினும், இதற்குமேல் நிச்சயமாக நாம் ஏதேனும் கூறப்புகுமுன், இவ்விஷயமாக இனிக் கண்டெடுக்கக் கூடியவைகளை எதிர்பார்த்துக் காத்திருத்

தல் அவசியமாகும். நமது நாட்டின் தற்கால நகரங்களைக்காட்டிலும் பல துறைகளிலும் வெகு மேன்மையடைந்திருந்த நகரங்கள் ஸிந்து மாகாணத்தில் 5,000 வருஷங்களுக்கு முன்னர் இருந்து வந்தனவென்பது மிக்க வியப்பைத் தருகிறது.

திராவிடர்கள். சரித்திரகால ஆரம்பத்திற்கு முன் யாதோ ஒருகாலத்தில் திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் யார், எந்த ஆதி இனத்தைச் சார்ந்தவர்கள் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியாமலிருக்கிறது. சிலர் இவர்கள் முதன் முதலாக பலுசிஸ்தானத்தினின்று போலன் கணவாயின் வழியாகவாவது அல்லது கரையோரமாகவாவது இந்நாட்டிற்கு வந்திருக்க வேண்டுமென்று நினைக்கின்றனர். இவ்வித அபிப்பிராயத்திற்குக் காரணம் யாதெனில் பலுசிஸ்தானத்தின் எல்லைப்பிரதேசத்தில் வசிக்கும் **பிராஹுயர்கள் (Brahuis)** என்னும் கூட்டத்தினர் பேசும் பாஷை திராவிட பாஷையினின்றும் தோன்றியதாக அறிஞர்கள் கூறுவதேயாகும். இவர்கள் முதலில் ஹிந்துஸ்தானத்தில் வசித்து வந்து, பிறகு தென் திசையை நோக்கி ஆரியரால் துரத்தப்பட்டிருக்கலாம். ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே திராவிடர்கள் தென்னிந்தியாவில் குடியேறியிருந்தனர் என்று மற்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். தற்பொழுது அவர்கள் வசிக்கும் பிரதேசத்திற்கு வந்து குடியேறியபின் அவர்களுக்கும் அவ்விடத்திய பழங்குடிகளுக்கும் விவாக சம்பந்தமும் ஏற்பட்டிருக்கலாம். கருப்பு மேனி, கருவிழிகள், அகன்ற மூக்கு, அடர்த்தியான கூந்தல் இவை திராவிடர்களின் முக்கியமான இலக்ஷணங்களாகும். அவர்கள் தற்காலத்தில் பேசும் நான்கு முக்கியமான பாஷைகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பனவாம். இவை ஆரிய பாஷைகளினின்றும் முற்றிலும் வேறுபட்டவை. ஆதிகாலத்திலேயே அவர்கள் சுயமாகத் தங்களது நாகரீகத்தை விருத்தி செய்திருந்தனர். மேலும் அவர்கள் பிரபல இராஜ்யங்களை நிறுவி, எகிப்து, மேற்கு ஆசியா முதலிய வெளிநாடுகளுடன் லாபகர

மான கப்பல் வியாபாரத்தையும் நடத்தி வந்தனர். முன்னொரு காலத்தில் ஆரிய மதப்பிரசாரகர்கள் தென்னாட்டிற்குவர, திராவிடர்கள் ஆரியர்களின் தெய்வங்களையும், மதச் சடங்குகளையும் ஒருவாறு ஏற்றுக்கொண்டதல்லாமல் சில மாறுதல்களுடன் ஜாதிப்பிரிவினைகளையும் கைக்கொண்டனர்.

இந்திய ஆரியர்கள். இவர்கள் மத்திய ஆசியாவில் ஆக்ஸஸ், ஸிர்டாரியா என்னும் நதிகளுக்கு மத்தியிலிருக்கும் புல்தரைப் பிரதேசங்களில் ஆதிகாலத்தில் வசித்துவந்த கூட்டங்களினின்றும் உதித்த கிளை ஜாதியார்களாவர். இவர்கள் உயரமாகவும் அழகாகவும் நீண்ட நேரான மூக்குடனும் கம்பீரமான தோற்றத்துடனும் விளங்கி வந்தனர். அவர்கள் பேசிவந்த பாஷை லத்தீன், கிரீக், கெல்டிக், டியூடானிக், ஸ்லவானிக் முதலிய ஐரோப்பிய பாஷைகளை யொத்ததான ஒரு பாஷை. மேய்ச்சல் தரைகள் காய்ந்துபோனதினாலோ, அல்லது தங்கள்பேரில் படையெடுத்து வந்த அன்னியர்களின் நெருக்கடியினாலோ, அவர்கள் தெற்கு நோக்கிச் செல்லலாயினர். அவர்களில் ஒரு பகுதியினர் ஈரான் தேசத்திற்குள் நுழைந்தனர். மற்றொரு கூட்டத்தினர் ஆரியர்கள் அல்லது 'உறவினர்கள்' என்ற பெயர் பூண்டு, ஹிந்துகுஷ் மலையைக் கடந்து, ஆப்கானிஸ்தானத்தை அடைந்தனர். பிறகு ஆப்கானிஸ்தானத்தினின்றும் பெருகி, காபூல், கூமால், குர்ரம் முதலிய கணவாய்களின் வழியாகப் பஞ்சாபிற்கு வந்துசேர்ந்தனர். இவர்கள் அலைகள்போல் அடுத்தடுத்துக் கூட்டங்கூட்டமாக இந்தியாவில் குடியேறும் நோக்கத்துடன் தங்கள் மனைவிமக்களுடனும் ஆடுமாடுகளுடனும் வந்தார்களே யல்லாமல், படையெடுக்கப் புகும் சைன்னியங்களைப்போல் வரவில்லை. இவ்வன்னியர்கள் பஞ்சாபில் அதிக காலம் தங்கி யிருக்கவில்லை. ஜனத்தொகை அதிகரிக்கவே, இவர்களில் சிலர் யமுனைக்கும் கங்கைக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தையடைந்தனர். இவர்கள் இங்கிருந்து மேன்மேலும் முன்னேறிக்கொண்டு வருகையில், இப்பிரதேசங்களில்

வசித்துவந்த பழங்குடிகள், இவர்களை வெகு தீவிரமாக எதிர்த்து வந்தனர்.

ஆரியர்கள், குளிர்ந்த சீதோஷ்ண நிலைமை பொருந்திய வடக்குப் பிரதேசங்களிலிருந்து வந்தவர்களாகையால், வன்மையும் ஊக்கமும் வாய்ந்தவர்களாய் இருந்தனர். ஆனதுபற்றி அவர்கள், தஸ்யூக்கள் என்று அழைத்துவந்த தங்கள் விரோதிகளாகிய ஆதிக்குடிகளை எளிதில் தோற்கடிக்க முடிந்தது. ஆயினும் ஆரியர்கள் இந்த தஸ்யூக்களை நிர்மூலமாக்காமல் அவர்களுடன் விவாகக் கொள்வினை, கொடுப்பினை ஏற்படுத்திக்கொண்டனராகையால், இவர்களின் பிற்கால சந்ததியார்கள் இத்தஸ்யூக்களது பழக்கவழக்கங்களிலும் தெய்வங்களிலும் பலவற்றை ஏற்றுக்கொண்டனர். ஆரியர்கள் இந்தியாவின் மீது படையெடுத்துவந்த காலம் இதுதான் என்று நிச்சயமாகக் குறிப்பிட முடியாமல் இருக்கிறதாயினும், சரித்திர நிபுணர்கள் இது கி.மு. 2000 வருஷத்திலிருந்து கி.மு. 1500 வருஷங்களுக்குட்பட்ட காலத்தில்தான் நிகழ்ந்திருக்கவேண்டுமென்று நினைக்கின்றனர்.

அத்தியாயம் 2

ஹிந்து இந்தியாவின் அஸ்திவாரம்: வேத காலம்

வேதங்கள். இந்திய ஆரியர்களுடைய இலக்கியங்களில் மிகப் பழமைவாய்ந்த ரிக், யஜுஸ், ஸாமம் என்ற வேத தோத்திரப்பாடல்களினின்று ஆரியர்களைப்பற்றிய எல்லா விஷயங்களையும் நாம் அறிகிறோம். யஜுர் வேதமும் ஸாமவேதமும் ரிக்வேதத்தை வைதீகச் சடங்குகளுக்காகத் திருத்தி யமைத்ததினால் ஏற்பட்டவை. அதர்வ வேதம் என்ற நான்காம் வேதம் பெரும்பாலும் மந்திரங்களும் உச்சாடன வித்தைகளும் அடங்கியுள்ளது.

இந்திய ஆரியர்களின் சமூக வாழ்க்கை. ரிக் வேதத்திலிருந்து இந்திய ஆரியர்களுடைய சமூக வாழ்க்கையைப்பற்றிய விஷயங்கள் யாவற்றையும் சித்திரத்தில்

காண்பதுபோல் அறியலாம். இவர்கள் கபடமில்லாமலும் திடகாத்திரர்களாகவும் இருந்தனர். தங்கள் ஆடு மாடுகளை வைத்துக்கொண்டு கிராமங்களில் வசித்து வந்தனர். கால்நடைகள்தான் இவர்களுடைய பிரதான செல்வம். எருதுகளைக்கொண்டு நிலத்தை உழுது வந்தார்கள். இரதங்களை இழுத்துச்செல்ல குதிரைகளை உபயோகித்து வந்தனர். வேட்டையாடுவதற்கு நாய்கள் உதவி வந்தன. இவர்கள் வாற்கோதுமையைப் பயிரிட்டு வந்தார்களே யல்லாமல் நெல், கோதுமை முதலிய தானியங்களைப் பயிராக்கவில்லை. வாற்கோதுமை மாவால் செய்யப்பட்ட ரொட்டி, பால், நெய் இவைகளே இவர்கள் சாப்பிட்ட முக்கிய ஆகார வகைகள். வேட்டையில் கொல்லப்பட்ட மிருகங்களின் இறைச்சியையும் சாப்பிட்டனர். வாற்கோதுமையிலிருந்து இறக்கப்பட்ட ஸுரா என்னும் சாராயத்தை இவர்கள் குடித்தனர். இந்திய ஆரியர்கள் எல்லாக் கலைகளிலும் வெகு முன்னேற்றமடைந்திருந்ததாகவும், அவர்களில் குயவர்கள், நெசவுக்காரர்கள், தச்சர்கள், தட்டான்கள், கருமான்கள் முதலான தொழிலாளிகள் இருந்ததாகவும் ரிக் வேதத்திலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் தாமிரத்தையும் தங்கத்தையும் உபயோகித்து வந்தார்கள். வெள்ளியையாவது இரும்பையாவது உபயோகப்படுத்தியதாகத் தெரியவில்லை. இரதங்களை ஓட்டுவதில் போட்டியிடுவதும், மல்யுத்தம் செய்வதும், நடனமாடுவதும், அவர்கள் அதிகமாய் விரும்பிய பொழுதுபோக்குகளாகும். ஆதிகாலத்திலும், பிற்காலத்திலும், புலவர்கள் பலர் தோன்றி, பல்வேறு குடும்பத்தினரின் மூதாதையர்களின் தீரச்செயல்களைப்பற்றிப் பாடியிருக்கிறார்கள். அவர்கள் மதிமயங்கி ஈடுபட்டிருந்த தீப்பழக்கம் பாய்ச்சிகளைக் கொண்டு ஆடும் சூதாட்டம்தான். விவாகம், இல்லற வாழ்க்கை, இவைகளின் புனிதத்தன்மையைக் குறித்து வேதங்கள் வற்புறுத்துகின்றன. இல்லாளே இல்லத்தின் தலைவியாவாள். அவள் பிற்காலத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகமான சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்தாள். விவாக காலத்தில் மணமகளைக் குறித்துப் பாடப்பட்டு

வந்த கீழ்கண்ட ஒரு பாசுரம் எவ்வளவு அழகாய் இருக்கிறது பார்!

வெம் பார்வைக் காளாகா, வேட்டாலுல் துன்பமுரு
தம் பசுக்கள் மேலன்பு தாங்கா—அம்புவிழி
அருளும், ஊக்கமும் ஆழ்ந்து விராராம்
வெருளும் மக்களை ஈன்று விழைந்து விண்ணவர்
ஆழ்கவும், அன்புடை ஆன்மா
வாழ்கவும், களித்து வாழிய பெரிதே.

ஜாதிப் பிரிவினை. வேதங்களில் ஜாதிப்பிரிவினையின் ஆரம்பம் காணப்படுகிறது. முதன்முதலாக ஜாதிப்பிரிவினை நிற பேதத்தினுல் ஏற்பட்டது. சிவப்பாக இருந்த ஆரியர்கள் கருத்த மேனியையுடைய தஸ்யூக்கள் என்று சொல்லப்பட்ட பூர்வீகக் குடிகளை இழிவாகக் கருதினுர்கள். அவ் வாதிகாலங்களில் தொழில் பரம்பரையாக ஏற்பட்டு வந்தது. அதாவது, தகப்பன் செய்துவந்த தொழிலைத்தான் மைந்தர்கள் பின்பற்றி வந்தார்கள். பிரம்மதேவனின் மக்களாகிய ரிஷிகளின் சந்ததியார்களாகக் கருதப்படும் பிராம்மணர்கள் தெய்வங்களை வழிபடுவதில் ஈடுபட்டிருந்தனர். அதற்கடுத்தபடியாக யுத்த வீரர்களின் ஜாதியாகிய ராஜன்யர்கள் அல்லது க்ஷத்திரிய ஜாதியாகும். வியாபாரிகளான வைசியர்கள் மூன்ருவது ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வர்த்தகர்களாகவும், மளிகைக் கடைக்காரர்களாகவும், தட்டான்களாகவும், நெசவுக்காரர்களாகவும், குயவர்களாகவும், பலவகைத் தொழில்கள் புரிந்து வந்தார்கள். நான்காவது வருணத்தார்கள் சூத்திரர்கள் எனப்படுவோர். இவர்கள் தோட்டிகளாகவும், தெருக் கூட்டுபவர்களாகவும் ஊழியத்தொழில் புரிந்து வந்தனர்.

அரசியல் அமைப்பு. தகப்பன் வழியைப் பின்பற்றி அமைக்கப்பெற்று, கிராமங்களில் வசித்து வந்த குடும்பங்கள் அல்லது குலங்கள் பல சேர்ந்து ஒரு கூட்டமாகும். அக்கூட்டத்திற்குத் தகப்பன்போல் அரசன் தலைமை வகித்து வந்தான். அரசு உரிமை சாதாரணமாக பரம்பரைப் பாத்தியத்தையைப் பின்பற்றியதாயினும், சில சமயங்களில் அரசனைத் தெரிந்தெடுப்பதும்

உண்டு. அவ்விதம் தெரிந்தெடுக்கப்பட்ட அரசன் பிராம்மணர்களால் முடி சூட்டப்படுமுன், ஜனங்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். அரசன் யதேச்சாதிகாரம் பெற்றவனல்ல. தன்னுடைய செயல்களை அங்கீகரிப்பதற்கும், அக்கூட்டத்தின் மகாநாட்டைக் கூட்டவும், பெரியோர்களின் யோஜனைகளைக் கேட்கவும் அரசன் கடமைப்பட்டவனாவான். மேலும் அவன் கூட்ட வழக்கம் அல்லது சட்டம் வழங்குதலில், குடும்பப் புரோகிதர், இதர கற்றறிந்த பிராம்மணர்கள், இவர்களின் ஆலோசனையைப் பின்பற்றி வந்தான்.

போர். பஞ்சாபில் வசித்து வந்த ஆரியர்கள் தங்களை **புருக்கள், பரதர்கள், அனுஸுக்கள், த்ருஹ்யூக்கள், யாதுக்கள்** என்ற **'ஐவகைக் குடிகள்'** என்று சொல்லி வந்தனர். அவர்கள் பராக்கிரமசாலிகள்; தங்களுக்குள் அடிக்கடி உடன்படிக்கை செய்துகொண்டு, தங்களுக்குள்ளாவது தஸ்யூக்களிடமாவது சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். போர்க்களத்தில் ஒவ்வொரு கூட்டத்தாரும் அவரவர்களுடைய அரசர்களின் கீழ் அணிவகுத்து நின்று சண்டைக்குத் தயாராயிருந்தனர். பாமர ஜனங்கள் வில், கத்தி, ஈட்டி, பரசு முதலிய ஆயுதங்கள் ஏந்தி பாதசாரியாகப் போர் புரிந்தனர். பிரபுக்கள் கவசங்கள் அணிந்து இரதங்களில் ஏறி யுத்தம் செய்தார்கள். ஒவ்வொரு இரதத்திலும் ஒரு யுத்த வீரனும் ஒரு தேர்ப்பாகனும் இருந்தார்கள். இரண பேரிகைகளும் வாத்தியங்களும் முழங்கச் சேனைகள் போருக்குச் சென்றன.

மதம். இதர இந்தோ-ஜெர்மானிய இனங்களைப்போல் ஆரியர்களின் மதம், இயற்கைச் சக்திகள், ஆகாயத்தில் காணப்படும் கிரகங்கள், நக்ஷத்திரங்கள், வானம், பூமி முதலியவைகளை வழிபடுவதாகும். இத்தேவதைகளில் மிகவும் முக்கியமானவர் புயல்காற்றுக் கடவுளாகிய இந்திரன். ஏனென்றால் இவர்தான் கோடைகாலத்திற்குப் பிறகு காய்ந்துபோயிருக்கும் நிலத்திற்குப் புத்துயிரளிக்கும் பொருட்டு வெகு ஆவலாய் எதிர்பார்க்கப்பட்டு வரும் மழையைக் கொண்டுவருபவர். நெருப்பு

தேவதையான அக்கினிக்கு மூன்று உருபங்கள் உண்டு. வானுலகில் அவர் சூரியனுகவும், மின்னலாகவும் இருக்கிறுர். பூமியில் புரோகிதர்களின் தீ உண்டாக்கும் கட்டைகளினின்று வெளிப்படும் ஹோமகுண்ட நெருப்பாகத் தோன்றி, தேவர்களுக்கு அளிக்கப்படும் நைவேத்தியங்களைப் பலிபீடத்தினின்று எடுத்துக்கொண்டுபோய் அவர்களுக்குக் கொடுக்கிறுர். பிராம்மணர்கள் மட்டுமே செய்ய உரிமை பெற்ற யாகங்களே மனிதர்களுக்கும் தெய்வங்களுக்கும் ஏற்பட்ட இணைப்புகளாகும். இந்த யாகங்களுக்குக் கைம்மாருகத் தெய்வங்கள் தங்களை வணங்கியவர்களுக்குக் காலாகாலத்தில் மழை, ஏராளமான ஆடு, மாடு, மந்தைகள் முதலிய நன்மைகளை அளித்து, அவர்களைக் கொடிய பஞ்சம், நோய் முதலியன அணுகாவண்ணம் காப்பாற்றி வந்தன.

வேதங்களின் ஒழுக்கபோதம். வேத பாசுரங்களில் நன்மையைப்பற்றியும், நேர்மையைப்பற்றியும், பரிசுத்தம் வாய்ந்த வாழ்க்கையைப்பற்றியும் சிறந்த கருத்துகள் அடங்கி யிருக்கின்றன. மேன்மையான பாசுரங்களில் சில வருணனைத் தோத்திரம் செய்பவைகளாகும்.

வானுலகாளும் வலிபெறு வருணன்
தன்னரசாட்சியாம் தாரணி தன்னை,
அருகிருந்தாளும் அரசன் போல்வான்.
கருத்திற் களங்கம் கருதிவினை செயின்
அறிவன். நடத்தல், ஊர்தல், ஒதுங்கல்,
அறியா முறையில் அடங்க லேனை
இழி தொழில் புரியும் இடும்பர் தம்மை,
அழிக்கும் செயலில் ஆற்றல் உடையன்
தனித்தோ சேர்ந்தோ தாம்செய் சதியைக்
குனித்துக் கொல்லும் கொற்றவன் தானே
அடங்கா வெல்லை ஆழிசூழ் உலகும்
முடங்கா வானமும் முடிய,
ஆளும் அண்ணல் அவனே யாமென்.

மற்ளுெரு பாசுரம் கீழ்க்கண்டவாறு உலக சிருஷ்டியை வர்ணித்திருக்கிறது.

இருத்தல் இலாமை இல்லாதிருந்த,
வொருக்கால் நாம் காண் ஒளி பெருவானம்
பாவு போல் விளங்கிப் பரந் திருந்ததில்,
தாவுதல் உடைத்தாய் தங்கிய தாமெது?
பொருள்கள் யாவையும் புலனுக் காதெது?
அரிதாம் அளவிடல் ஆற்று ஆழியின்
விரித்த தளமாய் வீற்றிருந்த தாவிது?
மரித்தலில் லெதுவும் மரிக்கவு மில்லை.
நிலைபே றுடைத்தாய் நின்றது மில்லை.
கலைத்தலு டைப்பகல் கங்கு லென்பதில்லை.
தனியாம் ஒருவன் தருக்குடன் சுவாசம்
தினையள வின்றித் திகழ்ந்தான் எங்கும்
கடல் போல் நிறைந்த காரிருளதனுள்
முடியப் பொருள்கள் மூழ்கிக் கிடந்தன
நெல்லினுள் மணியென நிறைந்த அடி உயிர்
எல்லின் இயற்கை எழுச்சியால்
வெளியா யிற்றே வெப்பத்தாலென்.

முற்காலத்து ரிஷிகள், எல்லாத் தெய்வங்களும் ஒரே கடவுளின் அமிசங்கள்தான் என்று போதித்து வந்தனர். ஞானிகள் கடவுளுக்குப் பல பெயர்கள் அளித்த போதிலும் உண்மையான கடவுள் ஒன்றே ஒன்றுதான் என்றும், மாறுமலும் ஒரு மயிரிழை கூடப் பிசகாததும், தேவதைகளாலும் கூட மாற்ற முடியாததுமான **'ருதம்'** என்ற ஒழுக்கச்சட்டம் அவருக்குப் பின் பலமாக இருந்து வந்ததென்றும் நினைத்தனர்.

அத்தியாயம் 3

புராண காலம்: சமண மதம், பௌத்த மதம் இவைகள் தோன்றிய வரலாறு

புராண காலம். காலம் செல்லச்செல்ல இந்திய ஆரியர்கள் தொடர்ச்சியாக எண்ணிக்கையில் பெருகிவந்தனராகையால், அவர்கள் புதிய புல்தரைகளைத் தேடிக்கொண்டு கிழக்கே மேன்மேலும் சென்று குடியேறினார்கள். ஒருகால் வடமேற்கிலிருந்து புதிய கூட்டத்தினர் வந்ததின் காரணமாக இடப்பெயர்ச்சி துரிதப்பட்டிருக்கலாம். வேதங்கள் இயற்றிய காலத்தில் அவர்கள், அம்பாலா ஜில்லாவைத் தாண்டிச் செல்லவில்லை. ஆனால் அடுத்தாற்போல் அவர்கள் இமயமலைக்கும் இராஜபுதன பாலைவனத்திற்கும் மத்தியிலுள்ள கணவாய் போன்ற குறுகிய பிரதேசத்தின் வழியாகக் கிழக்கே முன்னேறி, யமுனைக்கும் கங்கைக்கும் இடையிலுள்ள செழிப்புற்ற மத்திய தேசத்தில் குடியேறினார்கள் என்று கேள்விப்படுகிறோம். இக்காலத்தில் பஞ்சாப் முற்றிலும் மறக்கப்பட்டுவிட்டது. சிந்து நதிக்குப் பதிலாக கங்கை நதி, புனித நதியாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்விடத்திலிருந்து ஆரியர்களின் கூட்டங்கள், தைரியம் வாய்ந்தவர்களின் தலைமையில் கங்கை நதிச் சமவெளி முழுவதிலும் நாளடைவில் பரவின. பரதவம்சத்துச் சரித்திரத்தைக் கூறும்படியான மஹாபாரதம், இராம சரித்திரத்தைக் கூறும்படியான இராமாயணம் என்ற இவ்விரு இதிகாசச் செய்யுட்களிலிருந்துதான் முதன்மையாக இக்காலத்து விஷயங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

மகாபாரதமும் இராமாயணமும். உலகத்திலேயே மிகப் பெரிய காவியமாகிய மகாபாரதம் பரதகுலத்திலிருந்து உதித்த இரு போட்டிக் கிளை வம்சத்தினர்களாகிய பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்த யுத்தத்தின் வரலாறாகும். மகாபாரதத்தில் மூல கதையைத் தவிர பெயர்போன உபாக்கியானங்கள் எனப்படும் கிளைக்கதைகளும் இருக்கின்றன. இவைகளில் முக்கிய

மானவை நளன்-தமயந்தி, சாவித்திரி-சத்தியவான் என்னும் கதைகளாகும். சண்டைக்கு முன் கிருஷ்ணன் அர்ஜ்ஜுனனுக்கு யுத்தவீரனின் கடமையைக் குறித்துச் செய்த உபதேசங்கள் மிக நேர்த்தியானதும் ஆழ்ந்த வேதாந்தக் கொள்கைகளடங்கிய செய்யுட்களில் ஒன்றுகியதுமான தெய்வலோகக்கீதை என்று பொருள்படும் பகவத்கீதையில் அடங்கி யிருக்கின்றன. இராம சரிதமாகிய இராமாயணம் வால்மீகி முனிவரால் இயற்றப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. வேதங்களுக் கடுத்த படியாக ஸம்ஸ்கிருத பாஷையில் மிகப் பிரசித்திபெற்ற இலக்கியங்கள் இவ்விரண்டு இதிகாசங்களாகும். வேதங்கள் பிராம்மணர்களுக்காக மட்டும் ஏற்பட்டன. ஆனல் இவ்விதிகாசங்களோ பாமர ஜனங்களனைவரும் படித்துக் களிக்க வல்லதாயிருக்கின்றன. இராமர், இலக்ஷ்மணர், பீமன், அர்ஜ்ஜுனன் இவர்கள் எப்படி ஆண்மக்களால் தங்கள் இலக்ஷியமாகக் கருதவேண்டிய வீரர்களோ, அப்படியே திரௌபதி, சீதை, சாவித்திரி, தமயந்தி முதலிய பெண்மணிகளும் இந்திய ஸ்திரீகளின் இலக்ஷியங்களாக விளங்குகிறார்கள். இவ்விதிகாசங்கள், நாடகக் கர்த்தாக்கள், கவிவாணர்கள், கதாசிரியர்கள் முதலியோர் அடிக்கடி உபயோகப்படுத்தும் பொக்கிஷங்கள் நிறைந்த சுரங்கம் போன்றவை.

அரசாங்க சமூக நிலைமை. இதிகாச காலத்தில் ஆரியர்கள் யமுனை, கங்கை இவைகளின் கரைகளிலும், இவைகளின் உபநதிகளின் கரைகளிலும் பரவி, பல சிறிய இராஜ்யங்களை ஏற்படுத்தியிருந்தனர். இவைகளில் முக்கியமானவை பாரதநாடும் அதற்கு வடக்கே யிருந்த பாஞ்சாலமும், கிழக்கே கோசலமும், விதேகமும், யமுனைக்கு மேற்கே மத்ஸ்யமும், அதற்குத் தெற்கே சூரசேனமும், பின்னல் கிழக்குப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அங்கமும் மகத ராஜ்யமுமேயாம். இக்காலத்திய ஆரியர்கள் பராக்கிரமசாலிகள். வேதகாலத்து ஆரியர்களைப்போலவே தங்களுக்குப்பின் அடிக்கடி உடன் படிக்கை செய்துகொண்டு போர்புரிந்து வந்தனர். நான்கு ஜாதிகள் வரவர மிகத் தெளிவாக வரையறுக்கப்



பூர்வீக இந்தியாவின் முக்கியமான நாடுகள்

பட்டு வந்தன. பிற்காலத்தில் ஏற்பட்ட ஸாம்ராஜ்யங்கள் இன்னும் தோன்றவில்லையாகிலும் அரசர்களுடைய பலம் பெருகிக்கொண்டுவந்தது. அரசன் தன்னுடைய மந்திரிகள், ஆலோசனையாளர்கள் இவர்களுடைய யோசனைப்படி நடந்துவந்தான். தனது கடமையைச் செலுத்தத் தவறிய அரசனை ராஜபதவியினின்று நீக்கக்கூடும்; அல்லது அவனைக் கொல்லவும் கூடும். அரசன் யுத்தத்தில் தன்னுடைய சேனையின் தலைமையை வகித்து நடத்துவான். அவன் கொல்லப்பட்டால், அவனுடைய படைகள் கட்டுப்பாடழிந்து நாலாபக்கம் சிதறி ஓடிவிடும். அரசன், பிரபுக்கள், யுத்தவீரர்கள் இவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள், குடியானவர்களும், ஊழியர்களும், அடிமைகளுமாவர். நகர வாழ்க்கையை அக்காலத்து ஜனங்கள் அறிவார்கள். வரிகள் வெள்ளி, தங்க நாணயங்களாகவும், பண்டங்களாகவும் செலுத்தப்பட்டு வந்தன.

வீரர்கள் காலமாகிய இக்காலத்தில் சமூக வாழ்க்கையைப்பற்றிய விஷயங்கள் பலவற்றை இதிகாசங்கள் அறிவிக்கின்றன. அரசன் தனது அரண்மனையில் பிரபுக்களாலும் நடனமாதர்களாலும் சூழக் கொலுவீற்று வாழ்ந்துவந்தான். போர்புரிதல், வேட்டையாடுதல், குடித்தல், சூதாடுதல் இவைகள்தான் அரசனின் பிரியமான அலுவல்கள். பிரபுக்களும் இவ்விதமே வாழ்ந்து வந்தனர். விருந்தோம்பலும், அதிதிகளை உபசரிப்பதும் கடவுளுக்குத் திருப்தி அளிக்கும் கடமைகளாகக் கருதப்பட்டன. பிறருடைய உதவியையாவது அல்லது அவரிழைக்கும் அவமதிப்பையாவது மறவாமலிருத்தலும், சண்டையிடவும், சூதாட்டப் பந்தயத்தில் கலந்துகொள்ளவும் அழைப்பு வருமாயின், அவைகளை மறுதளிக்காமல் ஏற்றுக்கொள்ளுதலும், மிகக் கௌரவம் வாய்ந்த காரியங்களென்று அக்காலத்தினர் நினைத்தார்கள். ஒரு யுத்தவீரன் மற்றொருவனால் தோற்கடிக்கப்பட்டாலும், புறங்காட்டி ஓடினாலும், தஞ்சம் புகுந்தாலும், நிராயுதபாணியா யிருந்தாலும் அவனைத் தாக்குவது யுத்த தர்மத்திற்கு விரோதமானது என்று கருதப்பட்டது. அவ்விதமே சண்டையில் உயிர் மிஞ்சிய ஒரு தனியனை

தேர்ப்பாகன், பெண்டிர்கள், குழந்தைகள், வயோதிகர்கள், இவர்களையும் தாக்குவது தர்மமல்ல என்பது அவர்களது கொள்கை. சமூக வாழ்க்கையில் பெண்கள் உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்தனர். க்ஷத்திரிய ராஜகுமாரிகள் புஜபல பராக்கிரமச் செயல்களும் யுத்த வீரர்களின் போட்டிப் பந்தயங்களும் நடைபெற்ற சுயம் வரங்களில் தங்கள் கணவர்களை வரித்தனர். மனைவி, புருஷனின் பாதி என்றும், எக்காலத்திலும் நேர்மை, சந்தோஷம், ஐசுவரியம், இவைகளை ஊற்றுப்போல் அளிக்கக்கூடியவளென்றும், தனிமையாய் இருக்கையில் தோழியைப்போலும், புத்திமதி கூறுவதில் தகப்பனைப்போலும், கஷ்டங்கள் நிரம்பிய வாழ்க்கை என்னும் காட்டின் கண் செல்லுங்கால் ஓய்வளிப்பவளுமாக இருக்கிறாள் என்றும் மஹாபாரதத்தில் கூறப்படுகிறது. இராமர் வனவாசம் செய்யவேண்டுமென்று ஆஞ்ஞைபிறந்த காலத்தில், சீதை இராமருடன் செல்லத் தனக்கும் உரிமையுண்டென்பதை கீழ்க்கண்டவாறு எடுத்துக் கூறியிருக்கிறாள்:

வெண்பா

கணவன் அருகிருக்கக் காட்டில் விடுத்தால்
மணாளன் தனன்பிற்கு மாறேன்-கணவனெதிர்
தேரும் பரியும் திரள்பொனரண் மற்றவைகள்
ஓரும் பொழுது தவா வாம்.

மணம் பெற்ற மங்கையர் மாறுநிழலின்
குணம் பெற்று வாழ்வரால் கூடிக்-கணமும்
பிரியாரொன் றென் பெற்றோர் பேசுவர் உடல்தான்
தரியாதெனுந் தன்மைத் தால்.

இந்து மதத்தின் ஆரம்பம். இதிகாசங்கள் இயற்றப்பட்ட காலத்தில் மதத்தில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இக்காலத்தில் முக்கியமான தெய்வங்கள் மும்மூர்த்திகளாகிய **பிருமா, விஷ்ணு, சிவன்** என்று சொல்லப்படும், ஆக்கும் கடவுள், பரிபாலிக்கும் கடவுள், அழிக்கும் கடவுள் என்பனவாம். மதப்பற்றுள்ள ஹிந்துக்கள், தற்காலத்தில் சிவனையாவது **விஷ்ணு**

வையாவது வழிபடுவார்களாவர். **சிவன் அல்லது மஹா தேவன்** என்று அழைக்கப்படும் சிறப்புற்ற கடவுள், உக்கிரமும், பயங்கரமுமானவர். அவருடைய தர்மபத்தினி **பார்வதி தேவி.** யானைமுகக் கடவுளாகிய கணேசர் அவருடைய தனயன். ஆனல் **விஷ்ணுவோ** சாத்துவிகமும் கருணையும் வாய்ந்தவர். அவர், அவ்வப்பொழுது மனித வர்க்கத்தைக் காக்கும்பொருட்டு பூலோகத்தில் பல தடவை அவதாரம் செய்திருக்கிறார். அவருடைய இரண்டு முக்கியமான அவதாரங்கள், கோடிககணக்கான ஹிந்துக்கள் வணங்கிவரும் இதிகாச வீரர்களான இராமரும் கிருஷ்ணருமாவர். உலக சிருஷ்டியைப்பற்றிய பாமர ஜனங்களின் கட்டுக்கதைகளையும், தெய்வங்கள், அவைகளின் பல அவதாரங்கள் முதலியவற்றைப்பற்றிய கதைகளையும், இதர அதிசயக் கதைகளையும் **புராணங்கள்** அல்லது 'பழைய கதைகள்' என்று சொல்லப்பட்ட புத்தகங்களாகத் தொகுக்கப்பட்டன. புராணங்கள் பதினெட்டு இருக்கின்றன. ஆனல் அவைகளெல்லாம் பின்னல் வெகுகாலம் வரை எழுத்தால் வரையப்படவில்லை.

கலைஞானமும் கல்விப்பயிற்சியும். காலம் செல்லச் செல்ல புரோகித பாடசாலைகளின் பலம் அதிகரித்து வந்ததால், ஒவ்வொரு பிராமணனும் யாதேனும் ஒரு பாடசாலையைச் சேர்ந்திருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டது. வேதங்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு பிராம்மணங்கள், உபநிஷத்துக்கள் என்ற உரைகள் மாணவர்களுக்காக இயற்றப்பட்டன. பழைமையான வேத பாஷை அக்காலத்தில் ஜீவியபாஷையாக இல்லாமலிருந்ததால், மதசம்பந்தமான கிரந்தங்களை அர்த்தம் செய்துகொண்டு சரியாகப் பிற்காலச் சந்ததியார்களுக்கு அளிக்கும்பொருட்டு, இலக்கணம், யாப்பு, சொல்லியல் முதலிய சாஸ்திரங்களைப் பயிலவேண்டியது அவசியமாயிற்று. இம்மாதிரியே மதச்சடங்குகளை நக்ஷத்திரங்களின் உதயாஸ்தமனத்தைப் பொருத்து நிர்ணயித்தமையால், நக்ஷத்திரங்களைப்பற்றிய ஆராய்ச்சியிலிருந்து வானசாஸ்திரம் உண்டாயிற்று. கல்விப்பயிற்சி சாதாரணமாய் பிராம்மணர்களுக்கு மட்டும்தான் ஏற்பட்டிருந்

தது. ஆனால் த்விஜர்கள் (இரு பிறப்புடையவர்கள்) எனப்படும் மூன்று மேல் ஜாதியார்கள் கல்வி கற்கும் பொருட்டு ஓர் ஆசிரமத்திற்கு குறிப்பிட்ட சில வருஷங்கள் செல்லக் கடமைப்பட்டவர்களாவர். மதக்கொள்கைகள் சூத்திரர்களிடத்தில் பரவாமலிருக்கும்பொருட்டு, கல்விப்பயிற்சி வாய்மொழியாகவே இருந்தது.

பிராம்மண மதத்திற்கு விரோதமான கிளர்ச்சி. வைதிக மதமென்பது ஒரு சிலருக்கே தெரிந்த மொழியில் புரோகிதர்கள் செய்துவந்த சடங்குகள் நிறையப்பெற்றதாகிவிட்டது. இக்காரணம்பற்றி, முக்கியமாய் க்ஷத்திரியர்கள் பிராம்மணப் புரோகித வர்க்கத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தனர். இத்துடன் அநேக புதிய கொள்கைகளும் தோன்றலாயின. சாங்கிய முறையை ஸ்தாபித்தவரான **கபிலர்** என்னும் தத்துவ ஞானி கடவுள் இல்லவேயில்லை என்று நாஸ்திக வாதம் செய்ததாகத் தெரிகிறது. இதர ஞானிகள் ஆத்துமா திரும்பத் திரும்ப பிறக்கும் என்னும் தத்துவத்தைப் போதித்து வந்தனர். ஆத்துமாவிற்கு அடிக்கடி மறுபிறப்பு உண்டு. முற்பிறப்பில் ஒருவன் நேர்மையாக வாழ்ந்திருந்தானேயாகில், அவனுடைய ஆத்துமா பூலோகத்திற்குத் திரும்பி வந்து மேல் ஜாதிகளொன்றில் பிறக்கிறது. அவன் வாழ்வு பாபங்கள் நிறைந்ததாகில், அவனுடைய ஆத்துமா நாய், பன்றி, சண்டாளன் இவைகளில் ஏதேனும் ஒன்றாகப் பிறக்கிறது. மறு பிறப்பினின்றும் விடுதலை பெறுவதே **மோக்ஷம்** என்று சொல்லப்படுவது. அதைத் தபசினாலோ அல்லது மனதை 'இணைத்தல்' அல்லது '**யோகம்**' என்று சொல்லப்படும் மத ஒழுங்கின் மூலமாகவோ அடையலாம் என்று போதிக்கப்பட்டு வந்தது. இக்கொள்கைகள் உபநிஷத்துக்கள் என்று சொல்லப்படும் பழைமையான வசனக் கிரந்தங்களில் முதன் முதலாகக் காணப்படுகின்றன. இவ்வுபநிஷத்துக்கள் குருவால் சில தேர்ந்தெடுத்த சிடர்களுக் கருளிய அந்தரங்க உபதேசங்களாகும்.

ஜைனமதம், பௌத்தமதம், இவைகள் தோன்றிய வரலாறு. பிரமாணப் புரோகித வர்க்கத்தின் செல்வாக்

கிற்கு விரோதமான மேற்கூறிய கிளர்ச்சியை ஆறுவது நூற்றுண்டில் இரண்டு க்ஷத்திரிய மதாசாரியர்கள் மிக உன்னத நிலைமைக்குக் கொண்டுவந்தனர். அரசகுடும்பத்தைச் சேர்ந்த இருவரும் தற்காலத்திய பீஹாரின் தென்பாகமாகிய மகத நாட்டில் வசித்தவர்கள். ஜைன மதத்தை ஸ்தாபித்த மகாவீரர் லிச்சாவி வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரபுவின் குமாரர். இவர் பாடலிபுரத்திற்குச் சமீபத்திலிருந்த வைசாலியில் கி. மு. 550-ல் பிறந்தார். தாய் தந்தையர்களை சிறு வயதிலேயே இழக்கவே, இவர் துறவிகளின் கூட்டமொன்றில் சேர்ந்து



மகாவீர வர்த்தமானர்

கொண்டு மிகக் கடுமையாகத் தபசு செய்துவந்தார். ஆனல் அவர் மிக ஆவலுடன் விரும்பிய மனத்திருப்தி அவருக்குக் கிட்டவில்லை. பிறகு அவருக்கு ஞானோதயம் உண்டாகி, சந்நியாசிகள், சந்நியாசினிகள் அடங்கிய வர்க்கம் ஒன்றை அவர் புதிதாக ஏற்பாடு செய்தார். அவர் இறக்கும் சமயத்தில் அவருக்கு 14,000 சீடர்கள் இருந்தார்கள். அவர் '**ஜீனர்**' அல்லது 'ஜயித்தவர்' என்று அழைக்கப்பட்டார். அவரைப் பின்பற்றியவர்கள் 'ஜீனரை அநுசரித்தவர்கள்' என்று பொருள்படும்படி 'ஜைனர்கள்' என்ற பெயரைப் பெற்றனர்.

'புத்தர்' அல்லது 'ஞானோதயம் பெற்றவர்' என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட **கௌதமர்** சாக்கிய வமிசத்தைச் சேர்ந்த ஒரு பிரபுவின் குமாரர். அவர் தகப்பனுர் நேபாள தேசத்து எல்லையிலிருக்கும் **கபிலவாஸ்துவின்** அரசர். சாவு, வியாதி, துன்பம் இவைகளைப் பார்த்து மனக்கிலேசமடைந்தும், சோம்பல் மிகுந்த பயனற்ற அரண்மனை வாழ்க்கையில் வெறுப்புற்றும் இருந்த இந்த அரசிளங் குமாரர், எல்லாவற்றையும் துறந்து, தனிமையாக உண்மையை நாடிச்செல்லத் தீர்மானித்தார். இதுதான் அவருடைய சிறப்பு வாய்ந்த தியாகம். வெகுகாலம் அவர் பலவிதத் தபசுகள் செய்தார். ஆனுல் இதன் மூலமாக அவருடைய லக்ஷியம் சிறிதளவாகிலும் கிட்டவில்லை.



கௌதம புத்தர்

கடைசியில் அவர் ஒரு அரசமரத் தடியில் உட்கார்ந்து, தான் நாடிச்சென்ற ஞானத்தை அடைந்தார். உடனே அவர் காசிக்கருகாமையில் **சாரனுத்** என்னும் இடத்தில் உள்ள **மான் உத்தியான வனத்**திற்குச் சென்று அங்கு முதன் முதலாக மதப்பிரசங்கம் செய்தார். இங்கு அவரிடம் ஐந்து சிஷ்யர்கள் சேரவே, அவர் சங்கம் என்னும் வர்க்கத்தை ஸ்தாபித்தார். கௌதமரும் அவருடைய சீடர்களும் பீகார், அயோத்தி முதலான இடங்களில் கிராமம் கிராமமாகச் சென்று, ஜனங்களுக்கு 45 வருஷ காலம் மதபோதனை செய்துவந்தனர்.

பௌத்தமதச் சங்கத்தை நிறுவுதல். புத்தர் கி. மு. 483-ல் நேபாளத்தில் குசி நகரத்தில் ஒரு சாதாரண சீடன் அளித்த கெட்டுப்போன உணவை அருந்தியதால் வயிற்றுக்கடுப்பு மேலிட்டு இறந்துபோனார். அவர் சாகும் தருவாயில் அவருக்கு வயது 80. அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டு அதன் சாம்பல், அவரது பிக்ஷாபாத்திரம் முதலிய சின்னங்கள் அவருடைய சீடர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. பிறகு இவைகள் **ஸ்தூபிகள்** அல்லது **தகாபாக்கள்** என்று சொல்லப்பட்ட மேடுகளின்கீழ் புதைக்கப்பட்டன. தங்கள் குருவின் போதனைகளைச் சீர்கெடாமல் பாதுகாக்கவும் காலக்கிரமத்தில் அவைகள் மறக்கப்படாமலும் அல்லது அறைகுறையாக ஞாபகத்திலிருக்காமலிருக்கவும், 500 சந்நியாசிகள் **இராஜக்கிருஹம்** என்னுமிடத்தில் கூடினர். அச்சபையில் அவர்கள் அவருடைய உபதேசங்களனைத்தையும் ஒருங்கு சேர்த்து மனப்பாடமாக்கி ஒப்பித்தார்கள். அச்சபையில் வழங்கிய பாஷை மகத தேசத்தில் முன்காலத்தில் வழங்கி வந்த பாலி பாஷையாகும். பௌத்தர்களின் சத்திய வேதமான மதக்கிரந்தங்கள், பீதகங்கள் அல்லது கூடைகள் என்று பிரிக்கப்பட்டிருந்தன. அவைகளில் **வினயம்** என்பது சங்கத்தின் ஒழுக்கத்தை விளக்குகிறது. **ஸத்த்ராஸ்** என்பது குருநாதரின் மொழிகளையும் அவர் வாழ்க்கைச் சம்பவங்களையும் கூறுகிறது. **அபிதம்மா** என்பதில் தத்துவப் பிரச்னைகளடங்கியிருக்கின்றன. பௌத்தமதக்கொள்கை மிகவும் சுலபமானது. அது கீழ்க்கண்ட மூன்று உறுதிமொழிகளில் அடங்கியிருக்கின்றன.

நான் புத்தரிடத்தில் சரணமடைகிறேன்.
நான் தம்மத்தில் சரணமடைகிறேன்.
நான் சங்கத்தில் சரணமடைகிறேன்.

ஜைன பௌத்த மத உபதேசங்கள். மஹா வீருடைய உபதேசத்திற்கும் புத்தருடைய உபதேசத்திற்கும் அதிகமான ஒற்றுமையுண்டு. இருவரும் வேதங்களின் அதிகாரத்தையும், மதச் சடங்குகளைச் செய்ய அதிகாரம்

பெற்றவர்கள் பிராம்மணர்கள்தான் என்ற கொள்கையையும் மறுத்தார்கள். இருவரும் புரோகிதர்களின் பாஷையாகிய ஸம்ஸ்கிருதத்தை உபயோகிக்காமல் பாமர ஜனங்களின் பாஷையாகிய பிராகிருதத்தில் போதித்தனர். இருவரும் எல்லா ஜாதியைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் சிஷ்யர்களாகச் சேர்த்துக்கொண்டார்கள். இருவரும் மிருக பலியை எதிர்த்தனர். இருவரும் வினைப்பயன் (கர்மா) அல்லது முன்ஜன்மங்களில் செய்த வினைகளின் ஒருமித்த விளைவு என்ற தத்துவத்தைத் தங்கள் போதனைகளின் முக்கிய அமிசமாகக் கொண்டனர். வினைப்பயனால் ஆத்மா பன்முறை பிறவிக்குள்ளாகிறது. நேர்மையான வாழ்க்கையாலும், பரிசுத்தமான எண்ணத்தாலும் ஒருவன் தன் வினைப்பயனை அகற்றக்கூடுமாகில், அவன் நிருவாண நிலைமையை அடைந்து பிறவாமலேயிருப்பான். நிர்வாணத்தை யடைய விரும்பும் மக்கள் மனது, வாக்கு, காயம் இவைகளைப் பரிசுத்தமாக வைக்கப் பழகவேண்டும்; ஜீவவதை செய்யக்கூடாது; திருடக்கூடாது; பரஸ்திரீ கமனம் செய்யக்கூடாது. பொய்யையும், பொருளாசையையும், குற்றங்கண்டுபிடிப்பதையும், சிற்றின்ப ஆசைகளையும் அறவே ஒழிக்க வேண்டும். கொல்லாமை, திருடாமலிருத்தல், அசுத்தமான காரியங்களைச் செய்யாதிருத்தல், பொய் பேசாதிருத்தல், சமயத்திற்குத் தகுந்தபடி பேச்சுகளை மாற்றுமலிருத்தல், துர்பாஷைகளை உபயோகிக்காமலிருத்தல், வெளிப்பூச்சாக இனிய மொழிகளைப் பேசாதிருத்தல், பொருளாசைக் கொள்ளாதிருத்தல், கோபங்கொள்ளாதிருத்தல், தர்ம விரோதமான அபிப்பிராயங்களைக் கொள்ளாதிருத்தல் என்ற இவைகளே பௌத்த மதத்தின் **பத்து கட்டளைகள்.** இரு மதாசாரியார்களும் மதச் சடங்குகளின் மூலம் முக்தியடைய முடியாதென்றும், நேர்மையான ஒழுக்கமும், உண்மையான ஞானமுமே முக்தி மார்க்கங்களென்றும் வற்புறுத்தினார்கள். இரு மதங்களும், பிராமணர்களைப்போல் ஜாதி ஒழுங்கிற்குட்படாமலிருந்த வியாபார வகுப்பினர்களின் மனதைக் கவர்ந்தன. இரு மதத்தினரும் இவ்வுலகம் தீமைவாய்ந்த

தென்று கருதியதால், சந்நியாசிகளின் சமாஜங்கள் நிறு வப்படுவதை ஆதரித்து வந்தனர். அவ்வித சமாஜங் களைச்சேர்ந்த சந்நியாசிகள் மலைகளின் சாரல்களிலுள்ள குகைகளில் மடங்களை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் வாசஸ்தலமாகவும், பிரார்த்தனை, மதபோதனை முதலிய காரியங்களுக்கும் பயன்படுத்தியும் வந்தனர். ஆனால் ஜைனர்கள் வெகு கடுமையாகத் தவம் புரிவதை ஆதரித்து வந்தமையால், உயிரை மாய்த்துக்கொள்ளுவதும் கூட புண்ணியகரமான செயல் என்று கருதினார்கள். பௌத் தர்களோவெனில் இவ்விஷயத்தில் மிதக் கொள்கையைக் கைக்கொண்டு 'நடுப்பாதை'யைப் பின்பற்றினார்கள். இவ்வாறே சில ஜைனர்கள், உலக வஸ்துக்களிடத்தில் பற்றேயில்லாமலிருக்க வேண்டுமென்ற விருப்பத்தின் காரணமாக ஆடைகளைக் களைந்து, திகம்பரர்களாக (நிர் வாணமாக) இருந்தனர். ஆனால் பௌத்தர்கள் இவ்வாறு நடந்துகொள்ளவில்லை. இருமதத்தினர்களும் உயிருள்ள பிராணிகளைக் கொல்வது பாபமென்று கருதினார்கள். ஆனால் ஜைனர்கள் தங்களுடைய கொள்கைகளை வெகு கடுமையாக வாழ்க்கையில் கையாண்டு வந்தனர். ஒரு சிறு புழு, பூச்சியையுங்கூட கொல்லாமலிருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தங்கள் தினசரி வாழ்க்கையில் முன்னேற்பாடுகளுட னிருந்தனர். மகாவீரரும் புத்த ரும் மதப்பிரிவுகளை ஸ்தாபித்தார்களேயன்றி புது மதங் களை நிறுவவில்லை. ஆனால் ஜைன மதத்தைவிட அதிக கவர்ச்சி வாய்ந்த பௌத்த மதம் ஆசியா கண்டத்து ஜனங்களில் பெரும்பாலோரின் மதமாகிவிட்டது. புத்த ரும், மகாவீரரும் காலக்கிரமத்தில் சாதாரண மதபோத கர்களைக்காட்டிலும் சிறந்தவர்களாகக் கருதப்பட்டு, தெய் வீகத் தன்மை வாய்ந்தவர்களென வணங்கப்பட்டனர். பௌத்த மதம் இந்தியா உலகத்திற்கு அளித்திருக்கும் மிகச்சிறந்த நன்கொடை யென்பதைப் பின்வரும் பாடங் களைப் படித்து நாம் அறியலாம். மேற்கு தேசங்களை எவ்வாறு கிருஸ்தவ மதம் நாகரீகமாக்கி யிருக்கிறதோ, அவ்விதமே பௌத்த மதம் கிழக்கு நாடுகளை நாகரீகப் படுத்தக் காரணமாயிருந்து வந்திருக்கிறது.

அத்தியாயம் 4

மகத ஸாம்ராஜ்ய ஸ்தாபனம்

கி. மு. ஏழாவது நூற்றுண்டில் இந்தியாவின் நிலைமை. கி. மு. ஏழாவது நூற்றுண்டிலும் ஆரியர்கள் கிழக்கே பரவி வந்தனர். ஆனால் இவர்கள் முக்கியமாக இதிகாசச் சம்பவங்கள் நடந்த மத்ய தேசத்திலிருந்து தற்காலத்திய தென் பீகாரான மகத தேசத்தைச் சுற்றிலும் குடியேறிக்கொண்டே போனார்கள். இக்காலத்திலும் தேசத்தில் அநேக சிறு இராஜ்யங்கள் இருந்தன. சில முடியரசர்களாலும், சில குடியரசுகளாலும் ஆளப்பட்டு வந்தன. குடியரசாட்சியைப் பெற்றிருந்தவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் லிச்சாவிகள், சாக்கியர்கள் (புத்தருடைய உறவினர்கள்), விதேஹர்கள், மல்லர்கள் என்பவர்களேயாம். முடியரசுகளில் முக்கியமானவை கோசலம், மகதம், அவந்தி.

மகத ராஜ்யத்தின் ஆதிகால வரலாறு. நாம் திட்டமாக அறியும் மிகப் பழைய நாடு அயோத்தியைத் தலைநகராகக்கொண்ட **கோசல தேசமே யாகும்.** ஆனால் சரித்திரக்காலத்தில், அடுத்திருந்த தென் பீஹாராகிய **மகத தேசம்** இதைவிட அதிக முக்கியம் வாய்ந்ததாகி வந்தது. ஆதியில் மகத நாட்டின் தலைநகர் இராஜக்கிருஹம். சுமார் கி. மு. 650-ல் **சிசுநாகன்** என்னும் அரசர் அரசாண்டு வந்தார். அவர் சைசூநாக வமிசத்தை ஸ்தாபித்தார். இவ்வமிசத்திய ஐந்தாவது அரசர் **பிந்துசாரர்.** இவர் கோசலநாட்டு அரசகுமாரியை மணந்தார். தற்காலம் **பஹல்பூர்** ஜில்லாவாகவும் மகத நாட்டை அடுத்தும் இருந்த **அங்க** நாட்டைக் கைப்பற்றினர். கௌதம புத்தரும் ஜைன மதத்தை ஸ்தாபித்த **மகாவீரரும்** இவர் காலத்திலும் இவர் குமாரராகிய **அஜாதசத்துரு** காலத்திலும் இருந்தார்கள். அஜாதசத்துரு தன் தகப்பனைக் கொன்றதாகவும் புத்தர் அவரைக் கண்டித்ததாகவும் ஒரு கதையில் கூறப்பட்டிருக்கிறது. கங்கையும் சோணநதியும் சேருமிடத்தில் அவர் ஒரு கோட்டையைக்

கட்டினர். அதுதான் பிறகு புதிய தலைநகராக ஏற்பட்டு **பாடலிபுத்திரம்** என்ற பெயருடன் விளங்கிற்று. அவர் அரசாண்ட காலத்திலோ அல்லது அவருக்குப் பின் வந்த அரசர்கள் காலத்திலோ கோசல நாடு மகத இராஜ்யத்தின் ஆட்சிக்குட்படவே, மகத இராஜ்யம் கிழக்கு இந்தியாவில் முதன்மை பெற்றது. இது நிற்க, பாரஸீக அரசனை **டரியஸ்** சுமார் கி. மு. 500-ல் பஞ்சாபைக் கைப்பற்றினர். சைசுநாக வமிசத்தின் கடைசி அரசனைக் கீழ்ஜாதியில் பிறந்த **நந்தன்** என்பவன் தோற்கடித்துச் சிம்மாசனத்தைக் கைப்பற்றி, **நவநந்தர்கள்** பரம்பரையை ஸ்தாபித்தான். இவ்வமிசத்தைக் குறித்த விஷயங்கள் சிறிதும் நமக்குத் தெரியவில்லை.

சந்திரகுப்த மௌரியன். சந்திரகுப்தன் என்ற வாலிபன் (அரசவம்சத்தைச் சார்ந்தவனுக இருக்கலாம்.) கி. மு. 325-ல் நந்த அரசனை **மகாபத்மநந்த**னல் பாடலிபுத்திரத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு பஞ்சாபிற்கு ஓடி, அங்கு அவன் அக்காலத்தில் இந்தியாவின்மீது படையெடுத்த கிரேக்க வீராகிய **மகா அலெக்ஸாண்டரை**ச் சந்தித்தான். அலெக்ஸாண்டர் இறந்தபின், அந்நாட்டு ஜனங்களை அன்னியநாட்டு அதிகாரிகளுக்கு விரோதமாகக் கலகம்செய்ய ஏற்பாடு செய்தான். இதற்குச் சிறிது காலத்திற்குப்பின் அவன் பாடலிபுத்திரத்திற்குத் திரும்பி வந்து, சுமார் கி. மு. 322-ல் அங்கு கலகம் விளைவித்து, ஜனங்களால் வெறுக்கப்பட்ட நந்த அரசனைத் தோற்கடித்தான். சந்திரகுப்தன் தைரியம் வாய்ந்தவன்; ஆனல் பழிக்கஞ்சாதவன். அவன் மிக நிருமாண சாமர்த்தியம் வாய்ந்தவன். பல சிறிய இராஜ்யங்களையும், குடியரசு நாடுகளையும் வென்று, வட இந்தியா முழுவதும் வியாபித்த மிகப் பெரிய ஸாம்ராஜ்யத்தை முதன் முதலாக ஸ்தாபித்து பாடலிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டுவந்தான்.

சிரியா தேசத்து அரச பதவியை வகித்தவனும், மகா அலெக்ஸாண்டரின் தளகர்த்தர்களில் ஒருவனுமான **ஸெல்யூகஸ்** தன் தலைவரின் வீரச்செய்கைகளைப் பின்பற்றி கி. மு. 305-ல் இந்தியாவின்மீது படையெடுக்க

எண்ணினன். ஆனால் 600,000 வீரர்கள் அடங்கிய சேனையைத்தவிர, அநேக இரதங்களையும், யானைகளையும் சந்திரகுப்தன் வைத்திருந்தமையால், அவன் ஸெல்யூகஸை வெகு எளிதில் தோற்கடித்தான். தோல்வியுற்ற ஸெல்யூகஸ் மகிழ்ச்சியுடன் சந்திரகுப்தனோடு சமாதானம் செய்துகொண்டான். தற்காலம் **பலுசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம்** என்று சொல்லப்படும் இரண்டு மாகாணங்களும் சந்திரகுப்தனிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. மேலும் ஸெல்யூகஸ் தன்னுடைய மகளைச் சந்திரகுப்தனுக்கு மணம் செய்வித்தான். இதற்குப் பதிலாக சந்திரகுப்தன் தன்னுடைய மாமனுக்கு 500 யானைகளைக் கொடையாக அளித்தான். யானைகளை மேற்கு தேசத்தார் அதுவரையில் பார்த்ததில்லை யாகையால், அவை சண்டையில் விரோதிகளிடத்தில் மிகுந்த பீதியை உண்டாக்கின. இது காரணம்பற்றி ஸெல்யூகஸ் தனது இராஜ்யத்தை யடுத்த நாடுகளுடன் தொடுத்த யுத்தங்களில் அவை மிகவும் உதவியாயிருந்தன.

மெகஸ்தனீஸ். ஸெல்யூகஸ், **மெகஸ்தனீஸ்** என்னும் தன் தூதனைப் பாடலிபுத்திரத்தில் சந்திரகுப்தனின் சமஸ்தானத்தில் இருந்துவரும்பொருட்டு அனுப்பினன். **மெகஸ்தனீஸ்** அங்கு பல வருஷங்கள் தங்கி, அக்காலத்து இந்தியாவைப்பற்றி எழுதியிருக்கும் மதிப்பு வாய்ந்த குறிப்புகள் நமது நாட்டின் அக்காலத்து நிலைமையை விளக்கும் மிக முக்கியமான மூலநூலாக இருந்துவருகிறது. எனினும் சந்திரகுப்தருடைய மந்திரியாகிய **கௌடில்யர்** இயற்றிய **'அர்த்தசாஸ்திரம்'** என்ற சம்ஸ்கிருத நூலிலிருந்தும் சில விவரங்களைச் சேகரஞ்செய்து நாம் தெரிந்துகொள்ளுகிறோம். இதர விவரங்கள் சந்திரகுப்தனின் பேரனை அசோகரின் சாசனங்களில் காணப்படுகின்றன.

அரசாட்சிமுறை: **(1) மாகாணங்கள்.** சந்திரகுப்தனின் ஸாம்ராஜ்யம் அதிகார வர்க்கத்தினரால் நிருவகிக்கப்பட்டிருந்தது. அவருடைய இராஜ்யம் ஐந்து மாகாணங்கள் அல்லது இலாக்காக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மத்திய மாகாணம் தலைநகரி லிருந்தவண்ணம் சக்

கிரவர்த்தியால் ஆளப்பட்டுவந்தது. இதர மாகாணங்கள் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த அரச குமாரர்களான இராஜப்பிரதிநிதிகளால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. முறையே வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மாகாணங்களின் தலைநகர்களாயிருந்த **தக்ஷசீலம், உஜ்ஜயினி, தோசலி, ஸுவர்ணகிரி** * என்ற பட்டணங்கள்தான் இராஜப்பிரதிநிதிகளின் இருப்பிடமாக இருந்தன. மிக்க கவனத்துடன் படிப்படியாக வகுக்கப்பட்டும், விசாரணை அதிகாரிகள், ஜில்லா உத்தியோகஸ்தர்கள், காரியதரிசிகள், குமாஸ்தாக்கள் முதலியோரடங்கியதுமான உத்தியோகவர்க்கங்கள் இராஜப்பிரதிநிதிகளின்கீழ் வேலை செய்து வந்தன.

(2) **மத்திய அரசாங்கம்.** மத்திய அரசாங்கம் சக்கிரவர்த்தியின் சொந்த மேற்பார்வையில் இருந்து வந்தது. அரசன் யதேச்சையாக அதிகாரம் செலுத்தி வந்தான். ஆனால் பிரஜைகள் சுலபமாக எந்த சமயத்திலும் அவனை அணுகி தங்கள் குறைகளையோ அல்லது அதிகாரிகளின் நீதியற்ற செயல்களைக் குறித்தோ தாராளமாக எடுத்துக்கூறலாம். சக்கிரவர்த்திக்குதவியாக அமைச்சர்களின் சபை ஒன்று இருந்தது.

நீதிபரிபாலனம். பொருள் வழக்கு, குற்ற வழக்குகளைக் குறித்த முறையீடுகள் எல்லாவற்றிற்கும் சக்கிரவர்த்தியே முடிவாகத் தீர்ப்பளித்தார். ஏகாதிபத்திய முழுவதிலும் நீதிமன்றங்கள் இருந்தன. அநியாய நடவடிக்கைகளுக்காகக் குற்றஞ்சாட்டப்படும் நீதிபதிகளும் விசாரிக்கப்பட்டு வேலையினின்று நீக்கப்பட்டார்கள். குற்றவியவகாரங்களில், கடும் பரீக்ஷைமூலம் குற்றத்தைக் கண்டுபிடிக்கும் முறையும், குற்றஞ்சாட்டப்பட்டவனைத் துன்புறுத்துவதும், வழக்கத்திலிருந்ததுமல்லாமல் வெகு சாதாரணக் குற்றங்களுக்கும், கசையடி, அங்கச்சேதனம் போன்ற கொடூரமான தண்டனைகள் விதிக்கப்பட்டும்

* தோசலி ஒரிஸ்ஸாவில் இருந்தது. ஸுவர்ணகிரி எங்கிருந்ததென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. இது நிஜாம் இராஜ்யத்திலிருக்கும் மஸ்கியாக இருக்கலாம்.

வந்தன. குற்றச் சட்டம் வெகு கடுமையாகவும், கொடூரமாகவும் இருந்தது.

நகரபரிபாலன ஏற்பாடு. தலைநகரும், அநேகமாக ஏகாதிபத்தியத்தின் இதர நகரங்களும், நகரவிசாரணையாளர்களடங்கிய ஆறு சபைகளால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இச்சபைகள் கைத்தொழில், சந்தைகள், படிகள், நிறைகள், விலை, ஜனன மரணப் பதிவு, நகரத்திற்கு வரும் அன்னியர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுத்தல், சுங்கம், வரிகள் இவைகளை வசூலித்தல் முதலியவைகளைக் கவனித்துவந்தன. நகரம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தெருக்கள் நேராகவும், இரு ஓரங்களிலும் சாக்கடைகள் அமைக்கப் பெற்றவைகளாயும் இருந்தன. இச்சாக்கடைகள் கழிவு நீரை நகரத்தைச் சுற்றியிருந்த அகழியில் வெளிப்படுத்தின. தெருக்களில் குப்பை கூளங்களை எறிவது தண்டனை விதிக்கக் கூடிய குற்றமாகும். வீடுகள் மரங்களினுல் கட்டப்பட்டு வந்ததால், தீ அணைக்கும் படை ஒன்று நகரில் இருந்தது. நெருப்பணைக்கும் முறையைக் குறித்துக் கண்டிப்பான உத்தரவுகள் இடப்பட்டிருந்தன.

வருமானம். இந்தியாவில் வழக்கமாயிருந்து வருவது போல், நிலத்தின் மூலமாகத்தான் முக்கியமாக வரி வசூலிக்கப்பட்டது. வியவசாயநிலம் அரசனின் சொத்தாகப் பாவிக்கப்பட்டது. நிலத்தின் விளைவில் ஆறில் ஒரு பாகம்முதல் நாலில் ஒரு பாகம் வரையில் அரசாங்கத்தாரின் பாகமாகும். இதைப்போல் இறக்குமதி வரிகளும், சுங்கங்களும், இதர வரிகளும் விதிக்கப்பட்டு வந்தன. இவைகளைத் தவிர இதர வரிவசூல் முறைகளும் இருந்தன. வியாபாரம் ஆதரிக்கப்பட்டுவந்தது. பாடலிபுத்திரத்திலிருந்து வடமேற்கெல்லைக்குச் சென்ற ராஜபாதை, இடையிடையே பிரயாணிகளுக்குச் சத்திரங்கள் முதலிய சௌகரியங்கள் அமையப்பெற்று, நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது. சந்திரகுப்தனின் ஏகாதிபத்தியம் வெகு மேன்மையுற்றிருந்தது.

சீனு, மத்திய ஆசியா, பர்மா, சையாம் முதலிய தூர கிழக்குநாடுகளிலிருந்தும், தென்னிந்தியா, மேற்கு

தேசங்கள் முதலியவைகளினின்றும் வியாபாரப்பொருள் கள் பாடலிபுத்திரத்திற்கு வந்து குவிந்துகொண்டிருந் தன.

சேனே. சந்திரகுப்தனின் மாபெரும் சேனை, **ரத, கஜ, துரக, பதாதிகள்** என்ற நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. சைன்னிய இலாகா, அரசாங்க இலாகா வைப்போலவே வெகு விரிவாக நிறுவப்பட்டிருந்தது. தலைநகரமாகிய பாடலிபுத்திரத்தைச்சுற்றி, சுமார் 600 கோபுரங்களுடனும் வாயில்களுடனும் கூடிய மதில் சுவ ரும், அதற்கப்பால் ஆழமும், அகலமுமான ஒரு அகழி யும் இருந்தன. சந்திரகுப்தனே ஜனங்கள் உயர்பதவி யடைந்த அற்பனென்றும், அவனுடைய ஆட்சி மிதமிஞ் சிக் கடுமையாக இருந்ததாகவும் கருதியதால், அரசன் எச்சமயத்திலும் விரோதிகள் தன்னைக் கொலை செய்யக் கூடும் என்ற பயத்தினல், எல்லாவித பாதுகாப்புக ளுடன் இருந்தான். அவன் எண்ணிறந்த வேவுகாரர் களை வேலையிலமர்த்தியிருந்தான். ஒரே அறையில் இரண்டு நாள் சேர்ந்தாற்போல் அவன் படுத்தது கிடை யாது. அவன் எங்கு சென்றாலும் அவனுடன் சென்ற ஸ்திரீகளின் படை வேடிக்கை பார்ப்பவர்களைப்போல் சற்று தூரத்தில் அவனைச் சூழ்ந்துநின்று, காவல்புரிந்தது.

அசோகர். சந்திரகுப்தர் கி. மு. 298-ல் இறந்தார். அவருக்குப்பின் அவர் குமாரர் பிந்துசாரர் பட்டத்திற்கு வந்தார். அவரைப்பற்றி நாம் ஒன்றும் அறியமுடிய வில்லை. பிந்துசாரர் கி. மு. 273-ல் இறக்கவே அவருடைய குமாரரான அசோகர் சிம்மாசனம் ஏறினர். பாறைகளி லும், கற்றூண்களிலும் செதுக்கப்பெற்று அசோகருடைய அரசாங்கமுறையைக் கூறும்படியான அநேக சாசனங் கள் நமக்குக் கிடைத்திருக்கிறபடியால், அவருடைய சரித்திரத்தை அதிக நிச்சயத்துடன் எழுத சாத்தியமா யிருக்கிறது.

அசோகரின் மதமாற்றம். அசோகர் தன் ஆட்சியில் முதல் இருபது வருஷம் வரையில் தன் தகப்பனரும், பாட்டனரும் அரசாண்டவாறே ராஜ்யபாரம் செய்து வந்தார். பிறகு தற்காலத்தில் **ஒரிஸ்ஸா** எனப்படும்

கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். இக் கொடிய யுத்தத்தில் சிறைப்படுத்தப்பட்டவர்கள் 100,000. இதைவிட பன்மடங் கதிகமான ஜனங்கள் பசியாலும், பிணியினாலும் இறந்தனர். இந்த யுத்தத்திற்குப் பிறகு அசோகர் பௌத்த மதத்தை தழுவினார். இதுமுதற் கொண்டு அசோகர் புத்தரால் ஏற்படுத்தப்பட்ட தருமசீலச் சட்டத்தின் விதிகளை அனுசரித்து அரசாளத்



பாடலிபுத்திரத்தில் வெட்டியெடுக்கப்பட்ட மௌரிய காலத்திய இரதத்தின் சக்கரம்

தீர்மானித்ததால் இது உலக சரித்திரத்திலேயே மா பெரும் முக்யம் வாய்ந்த சம்பவமாகும். இதன் பிறகு ஒருகாலத்திலும் அசோகர் பிறநாடுகளைத் தாக்கிப் போர் புரியவில்லை. தன்னுடைய ஆயுளின் மீதி காலத்தை அவர் தன் விசாலமான ஏகாதிபத்யத்தின் மக்களை மேன்மை படுத்தும் தொண்டில் கழித்தார்.

புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை. அசோகர் பௌத்த மதத்தைத் தழுவிய உடனே '**உபாஸகர்** என்ற லௌகீக சந்நியாசியானார். பிறகு தன்னுடைய குருவாகிய **உபகுப்தர்,** தன் மனைவி, மகள் இவர்களுடன் பௌத்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றார். புத்தர் பிறந்த இடத்தைக் குறிக்க ஒரு ஸ்தூபியையும் அவர் நாட்டினார். விவாதத்திலிருந்த பௌத்தமதக் கொள்கைகளில் சில விஷயங்களைத் தீர்மானிக்கும்




பாடலிபுத்திரத்தில் வெட்டியெடுக்கப்பட்ட மௌரிய காலத்து மரச்சுவற்றின் சின்னங்கள்

பொருட்டும், மதக்கிரந்தங்களை, பரிசோதித்துத் திருத்தும்பொருட்டும், அவர் பாடலிபுரத்தில் கி. மு. 240-ல் ஒரு சபையைக் கூட்டினார்.


அசோகர் தன் பிரஜைகளின் தந்தை. அசோகரின் நடத்தையில் மிகவும் சிறப்பு வாய்ந்த அமிசம் அவர் தன் பிரஜைகளிடத்தில் கொண்ட அன்பேயாகும். அவருடைய வாழ்நாள் முழுதும் அவர்களை மேன்மைப்படுத்தும் முயற்சிகளில் கழிக்கப்பட்டது. இதன் பொருட்டு

அவர் தன் அரசாங்கத்தாரும் பிரஜைகளும் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்ற கொள்கைகளை விளக்கித் தன் விசாலமான ஏகாதிபத்தியத்தின் நாலாபக்கங்களிலும், கற்பாறைகளின் மீதும் கற்றூண்களின் மீதும் கல்வெட்டுகளைச் செதுக்கி வைத்தார். எங்கெங்கு ஜனங்கள் கூட்டம் கூடுவது வழக்கமோ, அவ்விடங்களில் சாத்தியமான வரையில் ஏராளமான ஜனங்கள் படிப்பதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கும் பொருட்டு, இந்த சாசனங்கள் நிறுவப்பட்டன. அவைகளி லெல்லாவற்றிலும்



ரும்மின்டேய் ஸ்தூபியின்மேல் காணப்படும் அசோகரின் கல்வெட்டுகள்

அசோகர் தன்னை '**தன் பிரஜைகளின் தகப்பனார்**' என்று கூறுகிறார். அவர் அதிகாரிகளிடத்தில் நம்பிக்கை வைத்து, கௌரவங்கள், தண்டனைகள் இவைகளை வழங்க அவர்களுக்கு அதிகாரம் அளித்திருந்தார். அசோகர் எந்த இடத்திலும், எந்நேரத்திலும் தன் பிரஜைகளின் முறையீடுகளையும், குறைகளையும் விசாரிக்க ஆவல் கொண்டு தன்னை எளிதில் காணும்படியாக ஏற்பாடு செய்திருந்தார்.



லௌரியா நந்தன்கரில் கல்வெட்டுடன் காணப்படும் அசோகரின் ஸ்தூபி

அசோகரின் சமயக்கோட்பாடு. எல்லோரும் பொதுவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அசோகர் விரும்பிய சமயக்கோட்பாடு மிகவும் சுலபமானது. இதில் அவர் கர்மம், நிருவாணம் இவைகளைப்பற்றியாவது அல்லது பாமர ஜனங்கள் அறிந்துகொள்வது கஷ்டமாயிருக்கும் இதர கொள்கைகளைப்பற்றியாவது யாதொன்றும் கூறவில்லை. அடிமைகளையும், பணியாட்களையும் சரியாக நடத்துவதும், தாய் தகப்பன் சொற்படி நடப்பதும், சிநேகிதர்கள், தோழர்கள், சுற்றத்தார்கள், தபசிகள், பிராம்மணர்கள் இவர்களுக்குத் தருமம் செய்வதும், உயிருள்ள பிராணிகளை யாகங்களில் கொல்லாமலிருப்பதுமே **தர்ம சீலச் சட்டம்** அல்லது **தம்மம்** என்பதில் முக்கியமாக அடங்கியுள்ள போதனைகள் என்று வற்புறுத்தியிருந்தார்.

அசோகர் பௌத்த மதத்தை அனுஷ்டித்தபோதிலும் இதர மன்னர்களைப்போல் பிறமதங்களின்பால் துவேஷம் கொள்ளவில்லை. பிறர் உரிமையில் தலையிடாமல் தத்தமக்கு இஷ்டமான தெய்வத்தை வழிபட எல்லோரும் பூர்ண சுதந்திரம் பெற்றவர்கள் என்ற கொள்கையைப் பின்பற்றி எல்லா மதப் பிரிவுகளுக்கும் பக்ஷபாதமின்றி மானியம் அளித்தார். பிராணிகளைக் கொல்வதைத் தடுக்க அவர் விசேஷ முயற்சிகள் செய்தார். பிராணிகளைக் கொல்வது முற்றிலும் தடுக்கப்பட்டிருந்தது. அவர் பட்டத்திற்கு வந்த காலத்தில் அரண்மனையில் தேவையாயிருந்த இறைச்சிக்காகத் தினந்தோறும் ஏராளமான பிராணிகளைக் கொன்று வந்தார்கள். அசோகர் காலக்கிரமத்தில் இதை நிறுத்திவிட்டார். இந்திய அரசர்களுக்கு மிகவும் பிரியமாயிருந்த பொழுதுபோக்காகிய வேட்டையாடுதலையும் விட்டுவிட்டார். புழுதிநிறைந்த ராஜபாட்டைகளில் கடுமையான வெயிலில் செல்லும் மனிதர்கள், மிருகங்கள் இவைகளுக்குச் சௌகரியங்கள் அளிக்கும் பொருட்டு, நிழல்தரும் மரங்களை வைத்தும், இடையிடையே கிணறுகளை வெட்டியும், இளைப்பாற விடுதிகளை அமைத்தும் ஏற்பாடுகள் செய்திருந்தார். மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் வேண்டிய மூலிகைகளு

டனும் ஔஷதங்களுடனும் வைத்தியசாலைகளை ஏற்படுத்தினர்.

சந்திரகுப்தனின் குற்றச்சட்டம் எவ்வளவு கொடூரமாகவும், கடுமையாகவும் இருந்ததென்பதை நாம் பார்த்தோம். ஆனால் அசோகர் அதன் கொடூரத்தை வெகுவாகத் தணித்தார்.

வருஷத்திற்கொருமுறை சிறைச்சாலைகளைத் திறந்து, சிறையாளிகளை விடுதலைசெய்தார். அசோகர் மரண தண்டனையை நீக்கவில்லையாயினும், குற்றவாளியைக் கொல்வதற்குமுன் அவனுக்கு மூன்று நாள் அவகாசம் கொடுத்து, அந்த இடைக்கால தினங்களில் பக்திமான்கள் அவனைச் சந்தித்து அவன் மனதைச் சீர்திருத்தம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். அசோகர் தன் இராஜ்ய முழுவதையும் சுற்றிப்பார்த்து, தன் விருப்பங்களைச் சரிவர நிறைவேற்றுவதற்காக, **தர்ம மஹா மாத்திரர்கள்** என்ற மேற்பார்வையாளர்களை நியமித்தார். நாகரீக மற்றும், தனிப்பட்டும், வனங்களில் வசித்துவந்த எல்லைப் பிரதேசவாசிகளை அன்புடன் நடத்தவேண்டுமென்று அவர்களுக்குப் பிரத்தியேகமாகக் கட்டளையிட்டிருந்தார்.

மதத் தூதுகள். அசோகர் முதன் முதலில் '**சன்மார்க்கச் சட்டத்தை**'ப் போதிக்கும் பொருட்டு பௌத்த மதப் பிரசாரகர்களை அனுப்பினர். இம்மதப் பிரசாரகர்களில் சிலரை **சிரியா** தேசத்தரசனை தன்னுடைய நண்பன் **ஆண்டியோகஸ்,** எகிப்து நாட்டின் அரசனை **டாலெமி** முதலான இதர கிரேக்க அரசர்களிடத்தில் அனுப்பினர். மற்றும் சிலரைத் தென்னிந்தியா, பர்மா, சிம்மளம் முதலிய நாடுகளுக்கும் அனுப்பினர். சிம்மளத்திற்கு **மஹிந்தர்** கி. மு. 250-ல் சென்று பௌத்த மதப்பிரசார வேலையிலீடுபட்டு தனது ஆயுட்கால முழுவதையும் அங்கேயே கழித்தார். மஹிந்தர் அசோகச் சக்கிரவர்த்தியின் குமாரரென்றும், இதர வரலாறுகளின்படி, இவருடைய சகோதரரென்றும் சொல்லப்படுகிறது. அவருடைய முயற்சிகளால்தான் பர்மா, சீயாம், சிம்மளம் முதலிய தேசங்கள் இன்று பௌத்த நாடுகளாக இருக்கின்றன.

'அசோகரின் மதப்பிரசாரத் தூதுகள் உலக சரித்திரத்தில் நாகரீகப்படுத்தும் சிறப்புவாய்ந்த தூண்டுகோலாக இருந்தன' என்று கே. ஜே. சாண்டர்ஸ் 'புத்த மதத்தின் வரலாறு' என்ற நூலில் கூறியிருக்கிறார்.

நாட்டின் சுபிக்ஷம். அசோகரின் சாம்ராஜ்யம் மிகப் பெரியது. கல்வெட்டுகளும், தூண்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களிலிருந்து அது காஷ்மீரம், நேபாளம், இந்நாடுகளிலும் இந்தியாவில் அஸ்ஸாம் நீங்கலாக மைசூரின் வட எல்லை வரையிலும் இச்சாம்ராஜ்யம் வியாபித்திருந்ததாகத் தெரிகிறது. அசோகருடைய ஆட்சியின் பின் முப்பது வருஷங்களில் இருந்தமாதிரி, அநேகமாக இதற்கு முன்னாவது, பின்னாவது ஜனங்கள் அவ்வளவு இன்பமுற்று வாழ்ந்து வந்திருக்கமாட்டார்கள் என்றே சொல்லலாம். உள்நாட்டு வியாபாரமும் அயல்தேச வியாபாரமும் நன்கு விருத்தியடைந்திருந்தன. பௌத்த வியாபாரிகள் இந்துக்களைப்போல் ஜாதிக் கோட்பாடுகளால் தடுக்கப்படாமலிருந்தமையால், தைரியம் வாய்ந்த மாலுமிகளாகி, **அலெக்ஸாண்டரியா** வரையிலும் சென்றனர். வியாபாரத்தை ஒழுங்காக நடைபெறச் செய்து, அதன்பேரில் வரி விதித்து வந்தனராகையால், அரசாங்க வருமானத்தில் பெரும் பாகம் இவ்வழியாகக் கிடைத்தது. வியாபாரச் சங்கங்கள் விருத்தியடைந்து வந்தன. தலைநகரிலிருந்த கடைகளில் வெள்ளி தங்கம் இவைகளால் செய்யப்பட்ட சாமான்களும் வாசனைத்திரவியங்களும், தென்னிந்தியாவிலிருந்து வந்த அலங்காரப் பூச்சுகளும், சிம்மளத்திலிருந்து வந்த முத்துக்களும், பர்மா, சீனா, தூர கிழக்கு நாடுகள் இவைகளிலிருந்து வந்த மஸ்லின்கள், பஞ்சு ஆடைகள், பட்டு ஆடைகள் முதலியனவும் காணப்பட்டன. ஆனால் விசித்திரமாக அக்காலத்தில் வழங்கி வந்த நாணயங்கள் வேலைப்பாடில்லாமல் துவாரமிடப்பட்ட வகையைச் சேர்ந்தவைகளாகையால், கிரேக்க நாணயங்களை ஜனங்கள் அதிகமாய் விரும்பினார்கள்.

கல்வி. எல்லா பௌத்த நாடுகளில்போல் கல்வி நாடெங்கும் பரவியிருந்ததைக் காட்ட பல சின்னங்கள்



அசோகரின் சாம்ராஜ்யம்
கி. மு. 250
இந்திரப்பிரஸ்தம்
வடமதுரை
பாடலிபுத்ரம்
சம்பா
சோப்பாரா
சென்னைப்பட்டினம்
வங்காளக் குடாக்கடல்
கொடுங்கோளூர்
கன்னியாகுமரி
தாமிரவர்ணி
பாறையிற் பொறித்த ஆணை
சிறு பாறையிற் பொறித்த ஆணை
கல்தூணில் பொறித்த ஆணை
மைல்கள்
0 100 200 300

காணப்படுகின்றன. இக்கல்விப்பரப்பு அதிகமாக மடங்களிலுல் ஏற்பட்டது. கடிதப் போக்குவரவு நடைபெற்றதாகத் தெரியவருகிறது. கணக்கெழுதும் முறைப்பிரகாரம் அரசாங்கக் கணக்குகள் எழுதப்பட்டு வந்தன. படித்தவர்களின் பாஷை ஸம்ஸ்கிருதமாகவும், பாமர ஜனங்கள் பேசிவந்த பாஷை பிராக்ருதமாகவும் இருந்து வந்தது. மகாவீரரும் புத்தரும் அக்காலத்தில் அரசாங்க பாஷையாயிருந்த மகதி பாஷையில் தங்கள் மதங்களை உபதேசித்தார்கள். தற்கால **தேவநாகரலிபிக்கு** மூலமானதும், இடது பக்கத்திலிருந்து வலப்பக்கமாக படிக்கப்பட்டும் வந்த **பிரம்மலிபியும்**, வடமேற்கு மாகாணத்தில் மாத்திரம் வழங்கிவந்ததும் வலப்பக்கத்திலிருந்து இடதுபக்கமாக வாசிக்கப்பட்டதுமான **கரோஷ்திலிபி**யும் உபயோகத்திலிருந்தன. மொஹெஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் செதுக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களின் பொருளை நாம் அறியாமலிருப்பதால், அவைகள் நீங்கலாக அசோகரின் கல்வெட்டுகள் தான் இந்திய பாஷையில் எழுதப்பெற்று நமக்குக் கிடைத்திருக்கும் தஸ்தாவேஜுகளில் மிகப் பழமையானவை.

சிற்பக் கலையும் கட்டடக் கலையும். வேதகாலத்துப் புரோகிதர்கள் எவ்விதமான கோவில்களையும் உபயோகப்படுத்தவில்லை என்று படித்திருக்கிறோம். ஆனல் பௌத்தர்கள் **ஸ்தூபங்கள்** அல்லது **தகோபாக்கள்** என்ற செங்கல் கட்டட மேடுகளில் தங்கள் குருநாதரின் ஞாபகச்சின்னங்களைப் புதைத்தார்கள். அன்னியர்கள் அணுகாவண்ணம் இவைகளைச் சுற்றிக் கிராதிகள் அமைக்கப்பட்டிருந்தன. போபால் சமஸ்தானத்திலுள்ள **சாஞ்சியில்** அசோகரால் முதலில் கட்டப்பட்டு பிற்காலத்தில் கற்களால் மூடப்பெற்ற ஸ்தூபக்கூட்டம் ஒன்றை இப்பொழுதும் காணலாம்.* நேர்த்தியான வாயில்களாகிய தோரணங்கள் பிற்காலத்தில் தக்காண ஆந்திரர்களால்

* 95-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்

சேர்க்கப்பட்டன. இக்கிராதிகளிலும் வாயில்களிலும் புத்தருடைய வாழ்க்கைச் சம்பவங்களைச் செதுக்கப் பெற்ற பல நேர்த்தியான சித்திரங்கள் நிரம்பியிருக்கின் றன. மேலும் அவைகள் அக்காலத்து வாழ்க்கையைப் பற்றிய பல விஷயங்களை அறிவதற் கேதுவாகவும் இருக் கின்றன. அவைகள் அழகாகவும், ஆடம்பரமற்றும் நிறு வப்பட்டிருப்பதால் அவை அக்காலத்தில் திருப்தியாக வும், சுக வாழ்வுடனுமிருந்த ஜனங்களைப்பற்றிய மனோ



சங்கா கல்வெட்டுடன்கூடிய பாருத் ஸ்தூபியும் வாயிலும் கிராதியும்
(கி. மு. இரண்டாவது நூற்றாண்டின் பிற்பகுதி)

கரமான காட்சியைத் தருகின்றன. அசோகர் புத்தர் பிறந்த இடம், இறந்த இடம் முதலியவற்றைக் குறிக்க உயரமான ஸ்தூபங்களையும் நாட்டினர். இத்தூண்களில் பத்து தற்காலத்திலும் காணப்படுகின்றன. அவைகளில் மிக உன்னதமானவை பூமிமட்டத்திலிருந்து 40 அடி உயர முள்ளதாக விருக்கின்றன. இத்தூண்கள் ஒரே கல்லால் செய்யப்பட்டு வெகு நேர்த்தியாகத் தேய்க்கப்பட்டிருப்ப தால் உலோகத்தால் ஆக்கியவைபோல் பளபளப்பாயிருக்

கின்றன. ஒரே கல்லான இப்பெரிய கற்றூண்களைக் கற் சுரங்கங்களினின்று கொண்டுவந்து வெகு தூரமான இடங்களில் நாட்டியது சிற்பத்தொழிலின் பெரிய விநோதமாகும். அசோகரின் வேலையாட்கள் செதுக்கு தல், துலக்குதல் முதலிய கலைகளைப் பாரசீகர்களிட மிருந்து கற்றுக்கொண்டார்கள்போலும்.

மௌரியர்களின் முடிவு—சங்கர்களும், கண்வர்களும். அசோகர் கி. மு. 232-ல் இறந்தார். ஆனால் அவர் மரணத் தைக்குறித்து யாதொரு விபரமும் அறியக் கிடைக்காம லிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. அவர் இறந்தபின், மௌரிய ஸாம்ராஜ்யம் சீர்குலைய ஆரம்பித்தது; பாக் டிரியா தேசத்திலிருந்து கிரேக்கர்கள் பஞ்சாபைக் கைப் பற்றினர். கலிங்கநாடும் தனிப்பட்டுப்போயிற்று. **பிரு ஹத்ரதன்** என்ற மௌரிய அரசனை அவன் சேனாதிபதி யாகிய **புஷ்யமித்திரன்** கி. மு. 185-ல் கொன்று சங்கவமி சத்தை ஸ்தாபித்தான். புஷ்யமித்திரன் மதப்பற்று வாய்ந்த பிராம்மணனாகையால் அவன் பௌத்தர்களுக் குச் சிறிதும் தயவுகாட்டவில்லை. தான் பட்டத்திற்கு வந்ததைக் கொண்டாட அவன் அஸ்வமேதயாகம் செய் தான். **மீனாண்டர்** என்னும் கிரேக்க அரசன் மத்திய இந்தியாவைச் சூறையாடி பாடலிபுத்திரத்தைத் தாக்க இருந்தான். ஆனால் **சாகர்கள்** பஞ்சாபின்மீது படை யெடுத்தமையால், அவன் திரும்பிச் செல்லவேண்டிய தாயிற்று. சங்கவமிசத்துக் கடைசி அரசன் கி. மு. 73-ல் பட்டத்தை யிழந்து கொலையுண்டான். அதன் பிறகு சித றுற்ற மகதராஜ்ஜியத்தைக் கொஞ்சகாலம் **கண்வ** வமி சத்தார்கள் ஆண்டார்கள். இவர்களை கி. மு. 28-ல் ஆந்தி ரர்கள் தோற்கடித்தனர்.

அத்தியாயம் 5

முற்காலத்தில் வடமேற்கு இந்தியாவின்மீது படையெடுத்த அன்னியர்கள்

பாரசீகர்களின் படையெடுப்பு. நீர்வளம், நிலவளம் பொருந்திய பஞ்சாப் சமவெளியின்பேரில் பக்கத்திலிருக்கும் தேசத்தார்கள் எக்காலத்திலும் மோகமடைந்திருந்தார்கள் என்பதை நாம் முன்னமேயே படித்திருக்கிறோம். இந்தோ-ஆரியர்களின் பந்து ஜனங்களாகிய ஈரான் தேசத்து பாரசீகர்கள் மேற்கு தேசங்களில் ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்திருந்தார்கள். அதன் அரசர்களில் ஒருவரான **டீரியஸ்** (தர்யுஷ்) தன்னிடம் சம்பளம் பெற்று வேலை செய்துவந்த கிரேக்க உத்தியோகஸ்தனை **ஸ்கைலாக்ஸ்** என்பவனை கி. மு. 516-ல் பஞ்சாபைச் சுற்றிப்பார்த்து வரும்படி அனுப்பினர். ஸ்கைலாக்ஸ் மலைகளைக் கடந்து,* காந்தார நாட்டை அடைந்து, பிறகு படகுகளை அமைத்து அவைகளைச் சிந்து நதியின் வழியாக அதன் முகத்துவாரத்திற்குச் செலுத்தி, கடல் மார்க்கமாக பாரசீகத்திற்குத் திரும்பினர். இதற்குப் பிறகு டீரியஸ் பஞ்சாபைக் கைப்பற்றிக்கொண்டு ஸிந்து மாகாணத்தைப் பாரசீக ஸாம்ராஜ்யத்தின் ஓர் பாகமாக்கினர்.

மகா அலெக்ஸாண்டர். மாஸிடோனியா தேசத்து அரசனாகிய மகா அலெக்ஸாண்டர் உலகத்தில் தோன்றிய சிறந்த வெற்றிவீரர்களில் ஒருவர். அவர் கிரேக்க நாட்டிற்கு அதிபதியாகி கிரேக்கர்களின் பரம்பரை விரோதிகளாகிய பாரசீகர்களைப் பல சண்டைகளில் தோற்கடித்தார். டீரியஸ் என்ற கடைசி பாரசீக அரசனும் கொல்லப்பட்டார். அதன் பிறகு அலெக்ஸாண்டர் கி. மு. 327-ல் ஹிந்துகுஷ் மலையைக் கடந்து காபூலைத் தன் மூலஸ்தான

* காந்தாரம் என்பது தற்காலத்திய பெஷாவர், ராவல்பிண்டி, காபூல் ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசத்திற்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். அது இன்னும் காண்டகார் என்னும் பெயரில் இருந்து வருகிறது.

மாக்கிக்கொண்டு இந்தியாவின்மீது படையெடுத்தார். அவர் தன்னுடைய சேனைகளுடன் **அட்டாக்கிற்குப்** பன்னிரண்டுமைல் தூரத்திலுள்ள **ஓஹிண்டு** என்னுமிடத்தில் ஸிந்து நதியைக் கடந்தார். வட பஞ்சாபின் தலைநகராயிருந்த **தக்ஷசீலத்தில்** அரசுபுரிந்து வந்த **அம்பி** என்னும் அரசன் மிக புத்திசாலித்தனமாக அலெக்ஸாண்டரை எதிர்கொண்டழைத்து அவருடன் சமாதானம் செய்து கொண்டார். கிரேக்கர்கள் தக்ஷசீலத்தில் சிறிதுகாலம் சிரமபரிகாரம் செய்து கொண்டார்கள். அலெக்ஸாண்டருடன் வந்திருந்த சரித்திராசிரியர்கள் அந்நகரம் அக்காலத்தில் பல்கலைக்கழகப் பட்டணமாக இருந்ததென்றும், அவ்விடத்திற்கு உயர்வகுப்பு மக்கள் தங்கள் குமாரர்களைக் கல்விகற்கும் பொருட்டு அனுப்பி வந்தார்களென்றும், இங்கே மூன்று வேதங்களும், சட்டமும், வைத்திய சாஸ்திரம் முதலிய கலைகளும் போதிக்கப்பட்டுவந்தன வென்றும் எழுதிவைத்திருக்கிறார்கள்.



மகா அலெக்ஸாண்டர்

ஹைடாஸ்பஸ் சண்டை. அடுத்த நாட்டின் அரசர் **போரஸ்** (பௌரவன்) என்போன் தக்ஷசீலத்து அரசனாகிய அம்பியிடத்தில் விரோதம்கொண் டிருந்ததால், கிரேக்கர்களுக்குத்தான் பணியவோ அல்லது அவர்களைத் தன்னுடைய நாட்டின் வழியாகப்போக அனுமதிக்கவோ அவருக்கு விருப்பமில்லை. ஆகையால் அவர் ஜீலம் நதி

யைக் கடக்க ஏற்பட்டிருந்த துறையின் கரையில் தன் சேனையை அணிவகுத்து நிறுத்தி, கிரேக்கர்களை எதிர்க் கத் தயாராயிருந்தார். ஜீலம் நதியில் பிரவாகம் மேலிட் டிருந்தது. பகைவன் எதிர்க்கரையில் காத்துக்கொண் டிருக்கையில் கிரேக்கர்கள் நதியைக் கடக்க எத்தனிப் பார்களாகில் தோல்வியடைவது நிச்சயம். ஆகையால் சில வேவுகாரர்களின் மூலமாக நதியில் சுமார் 16 மைல் எதிர்நோக்கிச் சென்றால் அங்கு சில தீவுகளினால் நதியின் வேகம் குறைவுபட்டிருக்கும் ஓரிடம் இருக்கிறதென்றும், அங்கே ஒருவர் கண்ணிலும் படாமல் நதியைக் கடக்கக் கூடும் என்றும் அறிந்த அலெக்ஸாண்டர் இடி மின்ன லுடன் மழைபெய்துகொண்டிருந்த நள்ளிரவில், தன்



போரஸ் பதக்சம்

னுடைய சைனியங்களுடன் நதியைக் கடந்து, போரஸின் படைகளைத் திடீரென்று தாக்கினார். இந்தியர்கள் மிக்க பராக்கிரமத்துடன் போர்புரிந்தார்களாயினும், கிரேக்க குதிரைவீரர்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இந்தி யர்களுடைய இரதங்கள் சேற்றில் புதைந்துபோயின. யானைகள் தங்கள் காயங்களின் வலியைப் பொறுக்க மாட்டாமல் வெருண்டு, இந்தியப் படைவீரர்களையே மிதிக்கத் தொடங்கின. சிறிது நேரத்திற்குள் இந்திய சைனியங்களில் எங்கும் கலவரம் ஏற்பட்டு, ஏராள மான போர்வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் போரஸ் காயங்களிலிருந்து இரத்தம் வழிந்து களைத்துப் போகும் வரையில் சண்டையிட்டார். அவர் தோல்வி

யடைந்தபோதிலும், அலெக்ஸாண்டர் அவருடைய பராக்கிரமத்தை மெச்சி அவருடைய இராஜ்யத்தைத் திருப்பிக்கொடுத்தார். அதன்பின் அவரும் அலெக்ஸாண்டரின் உண்மையான துணைவராக இருந்துவந்தார்.

பிறகு அலெக்ஸாண்டர் தென் கிழக்கு திசையை நோக்கிச் சென்று, அங்கு தன்னை எதிர்த்தவர்களனைவரையும் தோற்கடித்து, **ஹைபாஸிஸ்** அல்லது **பீயாஸ்** நதிக் கரையை அடைந்தார். மகத இராஜ்யத்தைப்பற்றியும் கங்கைச் சமவெளியின் செல்வத்தைப்பற்றியும் அவர் கேள்வி யுற்றிருந்ததால், அங்கு சென்று அப்பிரதேசங்களை ஜயிக்கத் தீர்மானித்திருந்தார். ஆனால் பீயாஸ்ஸில் யுத்தவீரர்கள் கலகம் செய்து, மேற்கொண்டு ஓடிகூடவைக்க மறுத்தனர். ஆகையால் அலெக்ஸாண்டர் அங்கேயே தன் விஜயத்தின் கிழக்கு எல்லையைக் குறிப்பிடும் பொருட்டு பன்னிரண்டு பெரிய பலிபீடங்களைக் கட்டினார். அதன்பின் மிக்க மனவருத்தத்துடன் சிந்து நதிக்கரையோரமாகப் பிரயாணம் செய்து, கி. மு. 325-ல் அக்டோபர் மாதத்தில் அதன் முகத்துவாரத்தை யடைந்தார். அவருடைய கப்பற்படை **நியார்க்கஸ்** என்பவரின் தலைமையில் சமுத்திர மார்க்கமாக பாரசீக வளைகுடாவின் வழியாக டைக்ரிஸ் நதியின் முகத்துவாரத்திற்குச் சென்றது. அலெக்ஸாண்டர் பாலைவனத்தின் வழியாய் பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு பிரயாணம் செய்யவேண்டியதாயிற்று. அதன் காரணமாக வழியில் வெயிலாலும் தாகத்தாலும் அநேகர் இறந்தார்கள். பாபிலோனை அடைந்த அலெக்ஸாண்டர் கி. மு. 323-ல் தமது 32-வது வயதில் இறந்தார். அவர் இளமைப் பருவத்தில் இறந்தபோதிலும், அக்காலத்தில் நாகரீகம் பெற்றிருந்த உலகத்தின் பெரும்பாகத்தை அவர் ஜயித்திருந்தார். அலெக்ஸாண்டருடைய மரணத்திற்குப்பின் அவருடைய ஸாம்ராஜ்யம் சிதறத் தலைப்பட்டது. முன் அத்தியாயத்தில் விவரித்தவாறு அன்னிய காவற் சேனைகளை நாட்டைவிட்டுத் துரத்தும்பொருட்டு சந்திரகுப்தர் பஞ்சாபில் கலகம் விளைவித்தார். கலகத்தை அடக்க அலெக்ஸாண்டருக்குப்பின் அவர் பதவியை ஏற்ற ஸெல்

யூகஸ் பஞ்சாபின்மீது படையெடுத்தபொழுது, அவர் சண்டையில் தோற்கடிக்கப்பட்டார். அதுமுதல் பஞ்சாப் அசோகர் இறக்கும் வரையில் மௌரியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

பாக்டிரியா தேசத்து கிரேக்கர்கள். இந்துகுஷ் மலைக்கும் ஆக்ஸஸ் நதிக்கும் இடையிலுள்ள செழிப்புவாய்ந்த பிரதேசத்தில், அலெக்ஸாண்டர் அவரது போக்குவரவு மார்க்கங்களைக் காத்துவரும்பொருட்டு பலமான காவற் படை ஒன்றை ஏற்படுத்தியிருந்த பால்க் எனப்படும் பாக்டிரியாவில், நாளடைவில் ஒரு கிரேக்க நாடு முன்னேற்ற மடைந்திருந்தது. சுமார் கி. மு. 175-ல் **பால்கி**லிருந்து பாக்டிரியா கிரேக்கர்கள் பஞ்சாபின்மீது படையெடுத்து, அங்கு தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். தங்கள் நாட்டாருடன் சம்பந்தமே யில்லாமல் தனிமையாக இருந்தமையால், அவர்கள் வெகு சீக்கிரத்தில் இந்தியர்களின் பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டனர். மிகப் புகழ்பெற்ற அவர்களுடைய அரசன் **மிஞண்டர்** தற்காலம் **சியால்கோட்** எனப்படும் **சாகாலா** என்ற இடத்தைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டு வந்தார். ஏறக்குறைய பஞ்சாப் முழுவதும் அவருடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது மன்றி, அவருடைய இராஜ்யம் காபூல் முதல் கத்தியவார் வரையில் வியாபித்திருந்தது. மிஞண்டர் பௌத்த மதத்தைத் தழுவினர். பௌத்த நூல் ஒன்றில் காணப்படும் அவருடைய தலைநகரின் வர்ணனையிலிருந்து அவர் பலமும் சிறப்பும் வாய்ந்த அரசர் என்று தெரியவருகிறது.



மிஞண்டரின் நாணயம்

மிஞண்டர் மகதராஜ்யத்தை ஜயிக்கவும் முயற்சி செய்தார். மதுரையைக் கைப்பற்றி, தலைநகராகிய பாடலிபுத்திரத்தையும் எதிர்க்க இருந்தார். சங்க அரசகுமாரனை **அக்னிமித்ரன்** அஸ்வமேதயாகம் செய்வதற்காக ஏற்படுத்தியிருந்த புனிதக் குதிரையைக் கொண்டுபோக அவருடைய குதிரைப்படை எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தது. ஆனல் அதேசமயத்தில் மத்திய

ஆசியாவிலிருந்து **சாகர்கள்** என்ற **சிதியர்கள்** பஞ்சாபின் மீது படையெடுத்து வந்ததால், அவர் திரும்பிச்செல்ல நேரிட்டது. அதன்பிறகு சிறிது காலத்திற்குள் அவர் கொல்லப்பட்டார். அநேகமாய் படையெடுத்தவர்களுடன் நடந்த சண்டையில் அவர் இறந்திருக்கலாம். பௌத்தர்கள் அவரை ஒரு பெரிய மகானாகக் கருதி அவர் உடலைத் தகனம்செய்து சாம்பலை வெவ்வேறு இடங்களில் ஸ்தூபங்களின் கீழ் புதைத்துவைத்தார்கள்.

சாக்கியர்களும் பார்த்தியர்களும். ஏறக்குறைய இக் காலத்தில் அநேக சாக்கிய, பார்த்திய கூட்டத்தினர் பஞ்சாபிற்கு வந்து, தக்ஷசீலத்திலும், மாளவம், கத்தியவார், குஜராத் முதலிய தூர நாடுகளிலும் இராஜ்யங்களை ஏற்படுத்தினார்கள். அவர்கள் **ஸாட்ரப்** (க்ஷேத்திரபதி) என்ற பாரசீக பட்டத்தை வகித்துவந்தார்கள். **கொண்டோபெர்னிஸ்** என்ற பார்த்திய அரசரின் இராஜ்யத்தில் கிருஸ்துவின் சீடரும் கிருஸ்தவ மதபோதகருமான அர்ச்சியசிரேஷ்டர் தாமஸ் என்பவர் மத வேற்றுமையின் காரணமாகக் கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. மற்றொரு வரலாற்றின்படி அர்ச் தாமஸ் சென்னைக்கருகில் மயிலாப்பூரில் தன் மதத்திற்காக உயிரைத் தியாகம் செய்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.



கொண்டோபெர்னெஸின் நாணயம்

குஷானர்கள். யூசிகள் மேற்கு சைனாவிலிருந்து துரத்தப்பட்டு, நாளடைவில் பாக்டிரியாவிற்கு வந்த நாடோடிக் கூட்டத்தார்களாவர். இக்கூட்டத்தின் ஒரு பகுதியினரான குஷானர்கள் ஹிந்துகுஷ் மலையைக்கடந்து சுமார் கி. பி. 48-ல் **முதல் காட்பிஸீஸ்** தலைமையில் பஞ்சாபிற்கு வந்தார்கள். அவருடைய குமாரர் **இரண்டாவது காட்பிஸீஸ்** தன் இராஜ்யத்தை விஸ்தரித்து சாக க்ஷேத்திரபதிகளில் அநேகரைத் தனக்குக் கீழ்ப்படுத்தினார். சாக ஆப்தமாகிய கி. பி. 78-ம் வருஷம் உண்மையில் இரண்டாவது காட்பிஸீஸின் மகுடாபிஷேகத்தைக்

கொண்டாடும்பொருட்டு ஏற்பட்டதென்று சிலர் கருது கின்றனர். அவர் மத்திய ஆசியாவில் அநேக நாடுகளை ஜயித்து, அதன் காரணமாக சீனர்களுடன் ஏற்பட்ட சண்டையில் தோல்வியுற்றார். குஷான அரசர்களில் மிகச் சிறந்தவர் **கனிஷ்கர்**. கனிஷ்கருடைய தலைநகர் **பெஷாவர்**. ஆனால் அவருடைய ஆட்சி கிழக்கே பாடலி புத்திரம், புத்தகயை இவைகள் வரையில் பரவியிருந்தது. அவர் மத்திய ஆசியாவிற்கு அனுப்பிய படைகள், கோடன், யார்க்கண்டு, காஷ்கர் என்ற ஊர்களைக் கைப் பற்றின. பாக்டிரியாவின் தலைநகராகிய **பாக்ட்ரா** என்ற இடத்திலிருந்து காஷ்கருக்கும், காஷ்கரிலிருந்து சைன விற்கும் சென்ற மத்திய ஆசியா வியாபாரமார்க்கம் இவ ருடைய ஆதீனத்திலிருந்தமையால், இவருக்கு ரோமர் களுடன் தொடர்பு ஏற்பட்டது. ரோம் சாம்ராஜ்யத் தில் ஏராளமாகத் தேவையாயிருந்த சீன தேசத்துப் பட்டு இவ்வழியாகக் கொண்டுபோகப்பட்டதால், இம் மார்க்கம் மிக முக்கியம் வாய்ந்ததாக இருந்தது. கனிஷ் கர் ரோமர்களிடத்தில் மிக நேசங்கொண்டு பல தூதுகளை ரோமிற்கு அனுப்பினர். ரோமில் வழங்கிவந்த **ஆரேய்** என்ற ரோம நாணயங்களைப்போல் தங்க நாணயங்களை இவர் அச்சடித்தார். ஸீஸர் என்ற பட்டத்தையும் வகித் தார் என்றும் கருதப்படுகிறது.

பௌத்த மதத்தின் முன்னேற்றம். ஆதியில் குஷானர் களின் மதக்கொள்கைகள் எத்தன்மை வாய்ந்தவை என்று சொல்வது கஷ்டம். கனிஷ்கருடைய நாணயங் களில் பல தெய்வங்களின் உருவங்கள் காணப்படுகின் றன. அவைகளில் அநேகம் ஸொராஸ்டிரிய தெய்வங் களின் உருவமாகும். கிரேக்க-ஹிந்து தெய்வங்களின் உருவங்களும் அவருடைய நாணயங்களில் காணப்படு கின்றன. இவைகளைக் கவனிக்குங்கால் இவர் பல்வேறு மதங்களை அனுசரித்துவந்த கலப்பு ஜனங்களை அர சாண்டுவந்தார் என்று தெரிகிறது. மினண்டரைப் போலவே இவரும் பின்னல் பௌத்தமதத்தைத் தழுவிய வர். பௌத்தமதம் புதியதாகச் சேர்ந்தவர்களிடத்தில் ஜாதிவித்தியாசம் பாராட்டாமல் இருந்ததினல், பஞ்சா

பில் குடியேறியிருந்த அன்னியர்களால் பிரியத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனால் பௌத்த மதம் இக்காலத்தில் மாறுதல்கள் அடைந்துவந்தது. அசோகரின் மதப்பிரசாரகர்கள் பரப்பிவந்த சுத்தமான பௌத்தமதக் கொள்கைதான் சிம்மளம், பர்மா, சையாம் முதலான தேசத்தாருடைய மதமாயிற்று. கலப்பற்று, சுத்தமாயிருந்த தென் தேசத்தாரின் பௌத்தமதம் **ஹீனயானம்** அல்லது 'சிறிய வாகனம்' என்று சொல்லப்பட்டுவந்தது. ஆனால் மத்திய ஆசியா புல்தரைகளில் வசிக்கும் முரட்டு ஜாதியார்களும், எல்லைப்பிரதேசவாசிகளும், பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டபொழுது, இது இதர நம்பிக்கைகளுடனும், மூடக்கொள்கைகளுடனும் கலப்புற்று, பெரும்பாலும் தன்மையில் வேறுபாடடைந்தது. புத்தரைக் காலஞ்சென்ற மதபோதகர் என்று இனிக் கருதவில்லை; இதற்கு முன்னமேயே பூமியில் பல தடவை அவதரித்த தெய்வ புருஷராகவே நினைத்தார்கள். இவ்வவதாரங்கள் அல்லது போதி சத்துவர்கள் கௌதமரையும்விட வெகு முக்கியமானவர்களாகக் கருதப்பட்டார்கள். முற்பட்ட சுத்தமான பௌத்த மதத்தில் விக்கிரக ஆராதனை கிடையாது. ஆனால் இப்பொழுதோ புத்தர், போதிசத்துவர்கள், இவர்களுடைய உருவங்கள், கோவில்கள், பலிபீடங்கள், வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட கொடிகள், ஆடைகள், சங்கீதம், தூபங்கள், ஊர்வலங்கள் முதலான ஆடம்பரமான சடங்குகளின் உபகரணங்களுடன் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதுதான் **'பெரிய வாகனம்'** என்று சொல்லப்பட்ட மஹாயானம். இது தென்தேசத்தில் வழங்கி வந்த பௌத்த மதத்தினின்று வேறுபட்டு வடதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த பௌத்தமதம். இந்த ரூபத்தில் பௌத்த மதம் திபெத்து, சீனு, ஜப்பான் முதலிய நாடுகளில் குஷானர்களால் ஏற்பட்ட வியாபார மார்க்கங்களின் வழியாகப் பரவியது.

இதர மதங்களில் மாறுதல்கள். இந்தியாவின் இதர மதங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டுகொண்டிருந்தன. கி. மு. இரண்டாவது நூற்றாண்டில் ஆதியில் மனித வீரர்

களான இராமரும் கிருஷ்ணரும் விஷ்ணுவின் அவதாரம் என்று கருதப்பட்டார்கள். பௌத்தர்கள் எப்படி புத்தரின் முன் அவதாரங்களாகிய போதிசத்துவர்களின் ஜாபிதாவைத் தயாரித்தார்களோ, அம்மாதிரியே ஜைனர்கள் மஹாவீரருக்கு முன் இருந்தவர்களாகிய தீர்த்தங்காரர்களின் ஜாபிதாவையும் தயார்செய்தார்கள். வைஷ்ணவர்களுக்கும் விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் ஏற்பட்டன. சைவமதமும் இவைகளுக்குப் பின்னடையவில்லை. சிவன் மேன்மையான தபசியாகக் கருதப்பட்டார். அவரை லிங்கரூபமாக சைவமதத்தினர் வழிபட்டார்கள். நந்தி என்னும் இடபம் அவருடைய வாகனமும் அடையாளமுமாகும்.

கலைகளையும் இலக்கியங்களையும் ஆதரித்த கனிஷ்கர். மத்திய ஆசியா புல் பிரதேசங்களிலிருந்து வந்த நாடோடிகளை பௌத்தமதம் எவ்வாறு நாகரீகப்படுத்தி முன்னேற்ற மடையும்படி செய்தது என்பதற்குக் கனிஷ்கரே தக்க சான்ருவார். அவருடைய மதமாற்றத்திற்குப் பிறகு அவர் கலைகளையும் இலக்கியங்களையும் வெகு தாராளமாக ஆதரித்து வந்தார். பெஷாவரில் வெகு நேர்த்தியான தலைநகரை யமைத்து, அநேக பௌத்த மடங்களையும் அங்கு ஏற்படுத்தினர். புத்தருடைய மதிப்புவாய்ந்த சில ஞாபகச் சின்னங்களுக்கு கோயிலமைக்கும்பொருட்டு ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டினர். அவர் சமஸ்தானத்தில் இருந்துவந்த பௌத்த பண்டிதர்களில் மிகக் கீர்த்தி வாய்ந்தவர்கள் **நாகார்ஜ்ஜுனரும் அஸ்வகோஷரும்** ஆவார்கள். அஸ்வகோஷர் கவி; சங்கீத வித்வான்; நாடக கர்த்தா. இரு பௌத்த முனிவர்களின் மதமாற்றத்தைக் குறித்த ஆதிகாலத்திய ஹிந்து நாடகத்தை அவர் எழுதினர். புத்தரின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி சமஸ்கிருத பாஷையில் ஒரு காவியத்தையும் அவர் எழுதியிருக்கிருர். மஹாயான பௌத்த மதத்தின் பாஷை சம்ஸ்கிருதம்; பாலி யல்ல.

மாபெரும் பௌத்த மகா சபை. கனிஷ்கர் விவாதத்திற்குட்பட்ட பௌத்த மதக் கொள்கைகளின் சில அம்சங்களை நிர்ணயிக்கும் பொருட்டு காஷ்மீரத்தில் கனிஷ்க

புரத்தில் கூட்டிய மகா சபைக்கு **அஸ்வகோஷரும்** சிறந்த கல்விவானுகிய **வஸுமித்திரரும்** தலைமை வகித்தனர். இச்சபையில் பதிவுசெய்யப்பட்ட கட்டளைகள் செப்புத் தகடுகளில் செதுக்கப்பட்டு, ஒரு ஸ்தூபத்தினடியில் புதைக்கப்பட்டன. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து 500 சன்னியாசிகள் இம் மகா சபைக்கு வந்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.



கனிஷ்கரால் பக்தியுடன் அடக்கம் செய்யப்பட்ட புத்த சின்னங்கள் அடங்கிய பேழை

காந்தாரச் சிற்பக் கலை முறை. கனிஷ்கர் தன்னுடைய கட்டடங்களை அலங்கரிப்பதற்காக கிரேக்க சிற்பிகளை நியமித்தார். புத்தருடைய சாம்பல் அடங்கிய பேழை யொன்று பெஷாவாருக்கருகில் கண்டெடுக்கப்பட்டது. அதன்மேல் '**அஜீஸிலாஸ்,** கனிஷ்க விகாரத்தின் மேற்பார்வையாளர்' என்ற வார்த்தைகள் காணப்பட்டன. முதலில் புத்தரைச் சிலை ரூபமாகப் பிரதிஷ்டை செய்வது வழக்கமல்ல; பல சின்னங்களினுலேயே அவரைக் குறிப்பிட்டனர். ஆனல் இந்தோ-கிரேக்க சிற்பிகள் அவரை கிரேக்க தெய்வமாகிய அப்பெல்லோவைப் போன்ற உருவத்தில் அமைத்தனர். சைன, ஜப்பான் இந்த நாடுகளில் தற்காலத்திலும் செய்யப்படும் விக்கிரகங்கள் கனிஷ்கர் காலத்தில் சமஸ்தான சிற்பிகள் வழக்கமாகச் செய்துவந்த உருவங்களின் சில அமிசங்களுடன் கூடியிருக்கின்றன. ஜாதக நூல்களிலிருந்து அநேக

கதைகள் சித்திரரூபமாக வரையப்பட்டிருந்தன. அவை களை லாகூரிலும், இதர இடங்களிலும் உள்ள காக்ஷிசாலை களில் காணலாம். இந்த இந்தோ-கிரேக்க சிற்பமுறை **காந்தாரக் கலை** யென்று, அது பிரபலமாகக் காணப்பட்ட பிரதேசத்தின் பெயரைப் பெற்றது. (27-ம் பக்கத்தி லுள்ள படத்தைப் பார்க்கவும்.)

கனிஷ்கருடைய குணாதிசயங்கள். அன்னிய இனத் தில் பிறந்தவராயினும், கனிஷ்கர் இந்தியாவின் கீர்த்தி வாய்ந்த அரசர்களில் ஒருவராவார். அசோகருக் கடுத் தாற்போல், பௌத்த மதத்தை ஆதரித்த மன்னர்களில் சிறப்புவாய்ந்தவர் கனிஷ்கர். அசோகர் பௌத்த மதத் தைத் தெற்கே பரவச்செய்தபடியே, கனிஷ்கர் அதை வடக்கே பரவச்செய்தார். இவ்விரு அரசர்களின் பெரு முயற்சியால்தான் பௌத்தமதம் ஆசியாவின் பெரும் பாகத்தினரின் மதமாயிற்று.

குஷான் ஆதிபத்யத்தின் முடிவு. கனிஷ்கர் 40 வருஷ காலம் அரசு செலுத்தியபின் மரணமடைந்தார். அவ ருடைய உத்தியோகஸ்தர்களே அவரைக் கொன்றதாக ஒரு கதையில் காணப்படுகிறது. அவருக்குப்பின் கி. பி. 162-ல் அவருடைய குமாரர் **ஹுவிஷ்கர்** பட்டத்திற்கு வந்தார். ஹுவிஷ்கருக்குப் பின் **முதல் வாசுதேவர்** அரசரானார். இவர் காலத்தில்தான் குஷான் ஏகாதி பத்தியம் க்ஷீணிக்கத் தலைப்பட்டு, நாளடைவில் அநேக சிறிய இராஜ்யங்களாகச் சிதறுண்டது.

அத்தியாயம் 6

இந்து மதத்தின் பொற்காலம்: குப்தர்கள்: ஹர்ஷர்

சந்திரகுப்தர். கண்வ வமிசத்தை ஆந்திரர்கள் தோற் கடித்த பிறகு, மகத ராஜ்யத்தைப்பற்றி சுமார் முன் னூறு வருஷ காலத்திய விஷயங்கள் நாம் ஒன்றும் அறிய முடியாமலிருக்கிறது. இவர்களுக்குப் பிறகு நிச்சய மான விவரங்கள் ஏதேனும் கிடைப்பது சந்திரகுப்தன் என்ற பெயர் பூண்ட அரசகுமாரனைக் குறித்துதான்.

புத்தருடைய காலத்தில் நாம் ஏராளமாகக் கேள்வி யுற்றும், பழைமைவாய்ந்ததும், சரித்திரத்தில் புகழ்பெற் றதுமான லிச்சாவி என்ற வமிசத்து அரசகுமாரியை மணந்துகொண்டு அவர் புகழ்பெற்றார். ஒருகால் இந்த விவாகத்தால் பாடலிபுத்திரத்தின் சிம்மாசனத்தை யடைந்து, அதில் நிலைபெற்று, தன்னுடைய ராஜ்யத்தை கங்கையும் யமுனையும் சேரும்படியான இடமாகிய பிர யாகை வரையிலும் பரவச்செய்ய முடிந்ததுபோலும். முடிவில் மிக்க ஆடம்பரத்துடன் அவருக்கு மகுடாபி ஷேகம் ஆயிற்று. அவர் தன்னுடைய மகுடாபிஷேகத் தைக் கொண்டாடும் பொருட்டு, **குப்த ஆப்தம்** என்ற ஒரு புதிய ஆப்தத்தை ஆரம்பித்தார். இந்த ஆப்தத்தின் முதல்நாள் **பிப்ரவரி மாதம் 26-ம் தேதி, கி. பி. 320.**

சமுத்திரகுப்தர். சந்திரகுப்தருக்கு லிச்சாவி இராஜ குமாரியின் மூலமாய்ப் பிறந்த சமுத்திரகுப்தர் பத்து வருஷத்திற்குப் பிறகு, அதாவது கி. பி. 330-ல், சிம்மா சனம் ஏறினர். அவர் இந்திய அரசர்களுள் மிகவும் பராக்கிரமசாலி. ஆகையால் அவரை **'இந்திய நெப் போலியன்'** என்றும் சொல்வது வழக்கம். அவர் முத லில் இமய மலையிலிருந்து நர்மதை நதி வரையிலும் உள்ள ஹிந்துஸ்தானத்தைத் தன்னுடைய ஆட்சிக்கு உட்படுத்தினர். மாளவம், பஞ்சாப் முதலிய நாடுகளும் அவருக்குக் கப்பம் செலுத்துபவைகளாயின. அவர் விந்திய மலைகளுக்குத் தெற்கே தனது ஏகாதிபத்யத்தை வியாபிக்க முயற்சி செய்யவில்லை. ஆனல் இரண்டு வருஷகாலம் அவர் தென்னிந்தியாவின்மீது படையெடுத் துச் சூறையாடி வந்தார். விந்திய பர்வதங்களின் அடர்த்தியான காடுகளின் வழியாகச் சென்று, கலிங்க நாட்டின் (ஒரிஸ்ஸாவின்) சமுத்திரக் கரையை அடைந்து, அங்கிருந்து சமுத்திரக்கரை யோரமாயுள்ள பாதையின் வழியாக நெல்லூர்வரையிலும் சென்றார். அவர் திரும்பி வருகையில் வழியிலிருந்த நாடுகளின் அரசர்கள் எல் லோரும் அவருக்கு ஏராளமான பணத்தைக் கப்பமாகச் செலுத்திப் பணிந்தனர். ஆயினும் சமுத்திரகுப்தர் அந்த நாடுகளை நிரந்தரமாகத் தன் இராஜ்யத்துடன்

இணைக்க முயற்சி செய்யவில்லை. சமுத்திரகுப்தருடைய புகழ் எங்கும் பரவியிருந்தபடியால், வெகு தூரத்திலிருந்த சிம்மள தேசத்தரசனும் அவரிடத்தில் தன் தூதர்களை அனுப்பினர். சமுத்திரகுப்தர் அவர்களை மிக அன்புடன் வரவேற்று, புத்தர் ஞானோதயமடைந்த அரசமரமிருக்கும் புத்தகயையில் மிக நேர்த்தியான பௌத்த மடத்தை ஸ்தாபிக்க அவர்களுக்கு உத்திரவுகொடுத்தார். அவர் தென்னாட்டின்மீது படையெடுத்துத் திரும்பிய பின், மன்னர்கள் இந்தியா முழுவதையும் தங்களுடைய ஆட்சிக்குட்படுத்தியதைக் கொண்டாடும்பொருட்டு வழக்கமாகச் செய்யும் அஸ்வமேத யாகத்தை முறைப்படி வெகு ஆடம்பரத்துடன் செய்தார். அஸ்வமேதயாகக் குதிரையின் சின்னத்தோடுகூடிய தங்க நாணயங்களை அச்சிட்டு பிராம்மணர்களுக்குத் தானம் செய்தார். அவைகளில் சில கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.



சமுத்திரகுப்தரின் நாணயம்
(அசுவமேதயாகச் சின்னத்தைப் பெற்றது)

சமுத்திரகுப்தரின் தேர்ச்சி. சமுத்திரகுப்தர் மிகத் தேர்ச்சிபெற்றவர். அவர் யுத்தவீரரும், கவியும், பாடகருமாவார். அவர் வீணைவாசிப்பதிலும், கவிகள் இயற்றுவதிலும், கற்றறிந்த பண்டிதர்களுடன் மதக்கிரந்தங்களைப்பற்றி விவாதிப்பதிலும் தன்னுடைய ஓய்வு நேரங்களைக் கழித்துக் களிப்புற்றிருந்தார். உயர்ந்து, சாய்வுமானத்துடன் கூடிய நாற்காலியில் வீணையைக் கையிலேந்தி உட்கார்ந்திருக்கும் நிலையில், சக்கரவர்த்தியின் உருவம் அச்சிடப்பெற்ற சில தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.



சமுத்திரகுப்தரின் நாணயம்
(யாழ்ப்பாடகன் மாதிரி)

இந்து மதத்தைத் தழுவி யிருந்தவராயினும், அவர் பௌத்தர்களை ஆதரித்தார். **வசுபந்து** என்னும் பௌத்த முனிவர் அவருடைய ஆதரவைப் பெற்றிருந்தார். அவருடைய ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்களுக்கு முக்கிய பிரமாணமாயிருப்பது **ஹரிசேனன்** என்ற சமஸ்தான கவியால் வெகு நேர்த்தியாக எழுதப்பெற்று, பிரயாகை (அலகாபாத்) யிலிருக்கும் அசோகரின் கற்றூணின் மேல் செதுக்கப்பட்ட செய்யுளாகும். ஆறு நூற்றுண்டுகளுக்கு முன் கீர்த்திவாய்ந்த அசோகர் மிகச் சிறந்த வெற்றி 'தர்மசீலச் சட்டத்தினுல் ஏற்படும் வெற்றியே யாகும்' என்ற கொள்கையில் நம்பிக்கைகொண்டு, எளிய பாலி பாஷையில் செதுக்கிய சிலாசாஸனங்களின் பக்கத்தில், இரத்த வெள்ளத்தை யுண்டாக்கின சண்டைகள், வெற்றிகள் இவைகளைக் குறித்த விவரங்கள் வெகு நேர்த்தியான ஸம்ஸ்கிருத பாஷையில் வரையப்பெற்றுக் காணப்படுவது சரித்திரத்தில் நாம் காணும் விதியின் கூற்றுக்களில் ஒன்ருகும்.

இரண்டாவது சந்திரகுப்த விக்ரமாதித்தியர். சமுத்திரகுப்தர் கி. பி. 380-ல் இறந்தார். அவருக்குப்பின் அவருடைய குமாரர் **சந்திரகுப்த விக்ரமாதித்தியர்** (பராக்கிரமத்தில் சூரியன்) பட்டத்திற்கு வந்தார். முதன்முதலாக உஜ்ஜயனியில் ஏற்பட்டிருந்த வலிமைவாய்ந்த சாக இராஜ்யத்தை அழித்தது சந்திரகுப்தரின் செய்கைகளில் முதலாவதாகும். அந்நாட்டின் க்ஷேத்திரபதியான **ருத்ரசிம்மனைக்** கொன்று அவருடைய இராஜ்யத்தைக் கைப்பற்றினுர். **உஜ்ஜய்னி** ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருந்தமையாலும், ருத்ரசிம்மனின் இராஜ்யத்தில் மேற்கு ஆசியாவுடனும், அலெக்ஸாண்டிரியாவுடனும் வியாபாரம்செய்துவந்த **ப்ரோச், ஸூரத், கல்யாண், சொபாரா** என்ற துறைமுகங்கள் அமைந்திருந்ததாலும், இவ்வெற்றி மிக முக்கியம் வாய்ந்ததாகும். அலெக்ஸாண்டிரியா நகரத்து வியாபாரிகள் தங்கள் சரக்குகளுடன் கொண்டுவந்த ஐரோப்பிய மனுேபாவங்கள் சந்திரகுப்தருடைய சமஸ்தானத்தில் ஆட்சிபெற்றன. இரண்டாவது சந்திரகுப்தருடைய காலத்தில்,


சமுத்ர குப்தரின்
வெற்றிகள் கி. பி. 340
குப்த சாம்ராஜ்யம்
கி. பி. 400
(பாஹியன் பிரயாணங்கள்)
காபூல்
காந்தாரம்
காஷ்மீரம்
ஸ்ரீநகர்
பிஷாவா
(புருஷபுரம்)
தட்சசிலம்
பொன்னு
ராஜ்யம்
(பன்னு)
பஹவல்பூர்
சிந்து நதி
இந்திரப்பிரஸ்தம்
(டெல்லி)
ஊலிதாபட்டினம்
(காத்மாண்டு)
காமரூப
துவாரகை
சோமநாதபுரம்
சூரத்து
நாசிக்கு
தேவகிரி
சோப்பாரா
பைத்தான்
மஹா
கோசலம்
சாம்பல்பூர்
பூரி
மஹேந்திரகிரி
தேவராஷ்டிரம்
கோதாவரி நதி
வெங்கிபுரம்
கோவா
கொள்ளேறு ஏரி
வங்காளக்
குடாக்கடல்
நெல்லூர்
சென்னைப்பட்டினம்
காஞ்சிபுரம்
மங்களூர்
சந்திரகிரி
நதி
பல்லவர்கள்
பாலக்காடு
தஞ்சாவூர்
மதுரை
கோடிக்கரை
கொடுங்கோளூர்
பாண்டியர்
காயல்
கன்னியாகுமரி
சிம்மளம்
(அ)
தாமிரவர்ணி
(சிலோன்)
மைல்கள்
0 100 200 300
வ
68° 72° 76° 80° 84° 88° 92°
36° 32° 28° 24° 20° 16° 12° 8°

சாம்ராஜ்யத்தின் முக்கிய நகரம் **அயோத்தி;** பாடலி புத்திரமல்ல. சந்திரகுப்தர் கி. பி. 415-ல் இறந்தார். அவரை வெகுகாலம்வரையில் **உஜ்ஜயனி விக்கிரமன்** என்று ஜனங்கள் சொல்லிவந்தார்கள். இவரைக் குறித்து பல்வேறு கட்டுக்கதைகளும் வரலாறுகளும் பிற்காலத்தில் ஏற்பட்டன. சில நிபுணர்கள் கி. மு. 58-7-ல் ஆரம்பமான **விக்ரம ஆப்தம்** யாது காரணத்தாலோ அவர் பெயரால் வழங்கலாயிற்று என்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

குப்தர்களின் சிதைவு. சந்திரகுப்தருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர்கள் **குமாரகுப்தரும் ஸ்கந்த குப்தருமாவர்.** பின் சொன்னவருடைய காலத்தில்தான் மத்திய ஆசியாவிலிருந்து வந்த மூர்க்க ஜாதியார்களாகிய ஹூணர்கள் வடமேற்கு எல்லையில் காவலின்றி இருந்த கணவாய்களின் வழியாக இந்தியாவிற்குள் புகுந்தனர். இந்த அன்னியர்களில் அநேகர் ஸ்கந்தகுப்தரால் கொல்லப்பட்டமையால் இவர்கள் தோல்வியுற்றார்கள். ஆனால் புதிய கூட்டங்கள் அலைகள்போல் வந்துகொண்டேயிருந்தன. குப்த ஸாம்ராஜ்யம் பல தடவைகளில் இந்த அன்னியர்களால் வெகு கடுமையாகத் தாக்கப்பட்டு நாளடைவில் சீர்குலைந்துபோயிற்று.

ஹிந்துமதத்தின் பொற்காலம்: பாஹியன். குப்தர்களின் காலத்தை மிகப் பொருத்தமாக **இந்துமதத்தின் பொற்காலம்** என்று சொல்லுகிறார்கள். ஒருகால், அசோக சக்கிரவர்த்தியின் ஆட்சியாகிய சிறிதுகாலத்தைத் தவிர்த்து, கி. பி. 320 முதல் 480 வரையில் இந்தியா மேன்மையுற்று இருந்தமாதிரி எக்காலத்திலும் இருந்ததில்லை. பௌத்த மதத்தைத் தழுவி சம்ஸ்கிருத பாலி பாஷைகளை இந்தியக் கலாசாலைகளில் கற்றுக்கொள்வதற்கும், பௌத்தமதக் கிரந்தங்களின் எழுத்துப் பிரதிகள், பௌத்த விக்கிரகங்கள், சின்னங்கள் இவைகளைச் சேகரிக்கவும், புத்தர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவர் வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள் நடந்த இடங்களுக்கு யாத்திரை செல்லும்பொருட்டும், இந்நாட்டிற்கு வந்த சீனயாத்திரீகர்கள் இந்தியாவின் அக்காலத்துப்

பொது நிலைமையைக்குறித்து எழுதிய விவரங்கள் நமக்குக் கிடைத்திருப்பது நமது அதிர்ஷ்டமேயாகும். இச்சீன யாத்திரிகர்களில் எல்லோருக்கும் முன்னால் வந்தவர் பாஹியன். அவர் 15 வருஷகாலம் இந்தியாவில் யாத்திரை செய்தார் (கி. பி. 399-414). குப்த ராஜ்யத்தில் கி. பி. 405 முதல் 411 வரையில் 6 வருஷமும் இந்தியாவின் இதர பாகங்களில் 9 வருஷமும் தங்கியிருந்தார். அவர் கங்கை முகத்துவாரத்திலிருந்த 'தாமரலிப்தி' என்ற துறைமுகத்தில் கப்பலேறி இலங்கைக்குச் சென்று, பிறகு ஜாவாவின் வழியாகக் கப்பல் யாத்திரை செய்து தன் சொந்த ஊரை அடைந்தார்.

பாஹியனின் இந்தியாவைப்பற்றிய வர்ணனை. பாஹியன் இந்தியாவின் முன்னேற்றத்தைக் கண்டு வியந்தார். 'ஜனங்கள் சந்தோஷமாகவும் முன்னேற்றமடைந்தும் இருக்கிறார்கள். அரசனுடைய பண்ணைகளைக் குத்தகைக்குப் பயிரிடுபவர்கள்தான் பண்ணைகளின் மாசூலில் ஒரு பகுதியை அவனுக்கு நிலக்குத்தகையாகச் செலுத்தவேண்டும். அவர்கள் தாங்கள் விரும்பிய காலத்திற்குமேல் பண்ணைகளைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு பயிரிடவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. அரசன் சரீர சம்பந்தமான தண்டனைகளை விதிப்பது கிடையாது. ஆனால் குற்றவாளிகளுக்கு அபராதம் விதிப்பார். பல தடவைகளில் கலகம் செய்யத் தூண்டினதாக ருஜுப்படுத்தப்பட்டவர்களுக்கும் கூட, வலது கையை வெட்டும்படியான தண்டனையைத்தான் விதித்தார். முக்கியமான மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் சம்பளம் ஏற்பட்டிருந்தது. இத்தேசத்து ஜனங்கள் போதையை அளிக்கும் பானங்களைப் பருகுவதில்லை. அவர்கள் தங்கள் ஆகாரத்திற்காக மிருகங்களைக் கொல்வதில்லை. அவர்களுடைய சந்தைகளில் கசாப்புக் கடைகளும் சாராயக் கடைகளும் கிடையா' என்று அவர் கூறுகிறார். இந்த யாத்திரீகர் மனதில் மிகவும் ஆழ்ந்து பதியப்பெற்றது பொதுமக்களின் பண உதவியைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட தர்ம வைத்தியசாலைகளே. 'திக்கற்றும் ஏழையாயும் பலவித நோய்களாலும் பீடிக்

கப்பட்டு இங்கு வரும் எண்ணிறந்த நோயாளிகள் நன்கு கவனிக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு வைத்தியர்கள் சிகிச்சை செய்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உணவையும் மருந்தையும் அளிக்கிறார்கள்' என்று அவர் எழுதியிருக்கிறார். பௌத்தமதத்தினிடத்தில் ஜனங்கள் பிரியங்கொண்டிருந்தபோதிலும், இந்துமதம் தன் பழைய சக்தியைத் திரும்பிப் பெற்றுக்கொண்டுவந்த விஷயம் குறிப்பிடத் தகுந்தது. பறையர்களும் சண்டாளர்களும் நகர மதில்சுவர்களுக்கு வெளியே வசிக்க வேண்டியிருந்தது. அவர்கள் நகரத்திற்குள் நுழைந்தால் பாதையில் செல்பவர்கள் தங்களைத் தொடாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்யும்பொருட்டு சேமக்கலத்தை அடித்துக்கொண்டு வரவேண்டும் என்ற விதி இருந்தது.

பாஷையும் இலக்கியமும். சமஸ்கிருத பாஷையின் வளர்ச்சி மறுபடியும் பலப்பட்டது. இக்காலத்தின் முக்கியமான அமிசம் சக்கரவர்த்தியின் சமஸ்தானத்தில் நவரத்தினங்கள் என்று விளங்கி வந்த கல்வியறிஞர்கள் இருந்ததாகச் சொல்லப்படுவதாகும். சமஸ்தான இதிகாசம் அல்லது காவியம் எழுதுவது சக்கரவர்த்திகளின் ஆதரவைப் பெற்றிருந்தது. சக்கரவர்த்திகள் தங்கள் வீரச்செயல்களைக் குறித்துக் கவிகள் பாட **ஹரிசேனனைப்** போன்ற சமஸ்தானக் கவிகளை நியமித்திருந்தார்கள். அவர்களால் இயற்றப்பட்ட கவிகள் ஸ்தூபங்களின் மேல் வரையப்பட்டன. இலக்கியம், கலை, விஞ்ஞான சாஸ்திரம், நாடகம் முதலிய துறைகளில் ஏராளமான நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டு வந்ததால், இதை **இந்து மறுமலர்ச்சி** என்று கூறுவதல்லாமல், இங்கிலாந்தில் **டியூடர்** (*Tudors*) பரம்பரையினர்கள் அரசாண்ட காலத்திற்கும் ஒப்பிடுகிறார்கள். முக்கியமாக குப்தர்கள் நாடகத்தைப் பெரிதும் ஆதரித்து வந்தார்கள்; இரண்டாவது சந்திரகுப்தருடைய காலத்தில்தான் **இந்திய ஷேக்ஸ்பியர்** எனப்படும் புகழ்பெற்ற **காளிதாஸர்** இருந்தார். காளிதாஸர் **சாகுந்தலம், விக்ரமோர் வசீயம், மாளவிகாக்னிமித்திரம்** முதலிய நாடகங்களை எழுதினார். ஆனால் அவைகளில் மிக மேன்மையானது உலகமெங்கும் புகழ்

பெற்றிருக்கும் சாகுந்தலமே யாம். **மிருச்சகடிகையும், முத்ரா ராக்ஷஸமும்** இக்காலத்து மேன்மையான இதர நாடகங்களாம். முத்ரா ராக்ஷஸம் சந்திரகுப்த மௌரியரைப்பற்றியும், அவருடைய அமைச்சர் சாணக்கியனைக் குறித்தும் எழுதப்பெற்ற சரித்திர சம்பந்தமான நாடகமாகையால், இதற்கு விசேஷ முக்கியம் ஏற்பட்டிருக்கிறது. பாடுவதற் கிசைந்த செய்யுட் காவியங்களையும் இக்காலத்து ஜனங்கள் அதிகமாய் விரும்பினார்கள். காளிதாஸர் இவ்விதப் பாட்டுக்களை இயற்றுவதிலும் மிகுந்த சாமர்த்தியம் வாய்ந்தவர். 'மேகதூதன்', **'இருது ஸம்ஹாரம்'** அல்லது 'பருவகால சக்கரம்', என்ற காவியங்கள் மிக அழகுவாய்ந்த வர்ணனைகள் நிரம்பி இருக்கின்றன.

மதசம்பந்தமான நூல்கள். குப்தர்களுடைய காலத்தில் பிராம்மண இந்து மதத்தின் மறுமலர்ச்சியின் காரணமாக மதசம்பந்தமான நூல்கள், சட்ட சம்பந்தமான நூல்கள், இவைகளை இயற்றுவதில் விசேஷ ஊக்கம் காணப்பட்டது. நான்கு வருணத்தார்களின் கடமைகளையும் உரிமைகளையும் விபரமாகக் கூறும் **'மானவ தர்ம சாஸ்திரம்'** அல்லது மனுவின் சட்டங்கள் எனப்படும் சட்டக் கோட்பாடு எழுதப்பட்டது. தத்துவ சாஸ்திரத்தின் ஆறுமுறைகளும் தொகுக்கப்பட்டன. ராமாயணமும் மகாபாரதமும் சோதிக்கப்பட்டு தற்காலத்தில் அவைகள் இருக்கும் பிரகாரம் திருத்தப்பட்டன. மகா பாரதத்தில் **பகவத்கீதை** (கடவுளின் பாட்டு) என்ற தத்துவ காவியம் சேர்க்கப்பட்டது. இம்மேன்மையான காவியம் அநுபவ சாத்தியமான முறையில் இந்து மதக் கொள்கைகளைத் தெளிவுபடுத்தும் சிறப்புவாய்ந்த விளக்கமாகும்.

விஞ்ஞான சாஸ்திரத்தின் வளர்ச்சி. குப்தர்களுடைய காலத்தில் புஸ்தகங்களைப் பொது ஜனங்கள் உபயோகித்து வந்தார்கள். வடநாடுகளில் அவை பர்ச் மரப்பட்டையின்மீது மையினால் எழுதப்பட்டன. தென்னாடுகளில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ஓலைச் சுவடிகளில் எழுத்தாணியால் வரையப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்டு உபயோகத்திலிருந்த புஸ்தகங்

கள் விஞ்ஞான சாஸ்திரத்தின் வளர்ச்சிக்கு அதிக உதவியளித்தன. வான சாஸ்திரமும் கணித சாஸ்திரமும் மேம்பாடடைந்திருந்தன. இந்து வான சாஸ்திரிகள் அலெக்ஸாண்டிரியாவிலிருந்த கலைஞர்களிடமிருந்து வான சாஸ்திர விஷயங்கள் பலவற்றைக் கற்றுக்கொண்டார்கள். சூரியன், சந்திரன், கிரகங்கள் இவைகளின் கதியை வெகு உண்மையாக வர்ணித்தார்கள். பூமியின் குறுக்களவை மதிப்பிடவும் முயற்சித்தனர். **பாஸ்கராச்சாரியார்** என்ற வானசாஸ்திரிதான் முதன் முதலாக பூகவர்ச்சி விதியை விளக்கினார். பூமி தன் இயற்கைத் தன்மையினால் இதர வஸ்துக்களை அவைகளின் எடைக்கேற்றவாறு கவருகிறது என்று அவர் சொன்னார். கணித சாஸ்திரம் வெகு முன்னேற்ற மடைந்திருந்தது. வைசேஷிக வர்க்கத்தைச் சேர்ந்த பௌதீகக் கலைஞர்கள் அணுக்கொள்கையை வெளியிட்டார்கள். வைத்தியம், ரணசிகிச்சை இவைகளும் போதிக்கப்பட்டு வந்தன. வைத்திய அனுபவம் பெறுவதற்கு தேசமுழுவதிலும் ஏற்படுத்தப்பட்ட வைத்தியசாலைகள் உதவி வந்தன. வைத்திய சாஸ்திரத்தைக் குறித்து எழுதிய முக்கியமான நூலாசிரியர்கள் **சரகரும் ஸுஸ்ருதரும்** ஆவர். தாவர கனிவர்க்கங்களைச் சேர்ந்த மருந்துச் சரக்குகளின் விளைவுகளைப் பரிசோதிப்பதிலிருந்து தாவரநூலும், இரஸாயனநூலும் தோன்றின.

கலை. கலைஞர்கள் சிறந்த அறிவாளிகளான குப்த அரசர்களால் ஆதரிக்கப்பட்டனர். அவர்களுடைய காலத்தில் வெகு நேர்த்தியான சிற்பவேலைகள் செய்விக்கப்பட்டன. காந்தாரக் கலையில் காணப்பட்ட கிரேக்க அமிசங்கள் ஸ்வீகரிக்கப்பட்டிருந்தன; சிற்பங்கள் இப்பொழுது முற்றிலும் இந்திய மனோபாவத்தைத் தழுவியவைகளாயிருந்தன. உருவங்கள் உயரமாகவும், கம்பீரமாகவும், நாகரீகம் வாய்ந்தும் இருந்தன. மெல்லியதாகவும் தேக அங்கங்களின் வெளிக்கோட்டை வெளியில் காட்டக்கூடியதாகவும் உள்ள ஆடைகளை அணிந்திருப்பதாகச் சித்தரிக்கும் வேலைப்பாடு மிக ஆச்சரியத்தை விளைவிப்பதாயிருக்கிறது. புத்தர் இப்பொழுது ஒளியுடன்



குப்தர்கள் காலத்திய தூண்

கூடிய ஒரு தேவதையைப்போல் காட்டப்பட்டார். கோயில்களின் சுவர்களை அலங்கரிக்கும் பொருட்டு அவைகளின் பேரில் வர்ணச் சித்திரங்கள் தீட்டும் கலை சாதகம் செய்யப்பட்டு வந்தது. இக்கலை அஜந்தா குகையிலுள்ள பெயர்பெற்ற வர்ணப்படங்களில் மிக உயர்ந்து பரிபூரண நிலைமையை அடைந்தது.[1] இக்காலத்துக் கட்டடங்கள் அநேகமாய் அழிந்துபோய்விட்டன. ஆனால் சீன யாத்திரீகர்களின் வர்ணனைகளிலிருந்து அவைகள் மிகப் பெரியவைகள் என்றும், சிறந்த வேலைப்பாட்டுடன் அலங்கரிக்கப் பெற்றவைகள் என்றும் நமக்குத் தெரியவருகிறது. உலோகங்களை வேலைகளுக்கு உபயோகிக்கும் முறையை இக்காலத்தினர் நன்கு அறிந்திருந்தார்கள். டில்லிக் கருகில் **மெஹ்ரௌலி** என்ற

[1] முகப்புப் படத்தைப் பார்க்க



மெஹ்ரௌலியிலிருக்கும் இரும்புத் தூண்

இடத்தில் இரண்டாவது சந்திரகுப்தரின் சாசனத்தை வரையப்பெற்றிருக்கும் பெயர்போன இரும்புத்தூண் அக்காலத்துக் கருமானின் சாமர்த்தியம் வியக்கத்தக்கதாயிருந்தது என்பதற்குச் சிறந்த உதாரணமாயிருக்கிறது. தாமிரத்தை உருக்கி விக்கிரகங்களை வார்க்கும் கலையும் மிகமேன்மையான நிலைமையை அடைந்திருந்தது. கிரீஸ், பாரசீகம், சீனு இத்தேசங்களுடன் வட இந்தியா இக்காலத்தில் சம்பந்தம் பெற்றிருந்தது. இதன் காரணமாக எல்லாக் கலைகளும் சாஸ்திரங்களும் முன்னேற்றமடைந்து வந்தன. இத்தேசங்கள் எல்லாம் விஷயப் பரிவர்த்தனையால் பெரிதும் நன்மையடைந்தன. தரைமார்க்கமாகவும் ஜலமார்க்கமாகவும் நீண்ட பிரயாணஞ் செய்வது மிகச் சாதாரணமாயிருந்தது. ஜனங்கள் அலெக்ஸாண்டிரியா, ஜாவா இவ்விடங்களுக்கும், சீனுதேசத்துச் சமுத்திரக்கரைப் பிரதேசங்களுக்கும் சென்றூர்கள்.

ஹூணர்களின் படையெழுச்சிகள். இப்பொழுது நாம் திரும்பவும் ஹூணர்களைப்பற்றிக் கவனிக்க வேண்டும். இந்த ஹூணர்கள் முதன் முதலாக ஸ்கந்தகுப்தர் காலத்தில் இந்தியாவைத் தாக்கியதைப்பற்றி முன்னமேயே கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் குரூரமும், துஷ்ட சுபாவமுமுள்ள நாகரீகமற்ற ஜாதியார்கள். இவர்கள் சென்ற இடங்களையெல்லாம் தீய்க்கும் வாளுக்கும் இரையாக்கி அழித்தார்கள். ஹூணர்களின் படையெழுச்சி கிழக்கு நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் சரித்திரத்தின் போக்கை மாற்றி இருக்கிறது. இவர்கள் மத்திய ஆசியா புல்தரைப் பிரதேசங்களிலிருந்து வெளிக்கிளம்பி, இரு கிளைகளாகப் பிரிந்தனர். ஒரு கிளையினர் மேற்கே **வால்கா** நதியை அடைந்து **அட்டில்லாவின்** தலைமையில் ரோம் சாம்ராஜ்யத்தைச் சூறையாடினுர்கள் (கி. பி. 453). **எப்தாலைட்** அல்லது **வெள்ளை ஹூணர்கள்** என்று சொல்லப்பட்ட மற்றொரு கிளையினர் **ஸஸ்ஸேனிய** அரசனை **பிரோஜ்** என்பவனை கி. பி. 484-ல் கொன்று **பாக்டிரியா, காந்தாரம்** இந்த நாடுகளை ஜயித்தபின் இந்தியாவை மறுபடியும் தாக்கினுர்கள். காஷ்மீரத்தைக் கைப்பற்றி மாளவத்தின்மீது படையெடுத்தார்கள்.


இந்தியா
கி. பி. 640
ஹர்ஷரின் சாம்ராஜ்யம்
வங்காளக்
குடாக் கடல்
மைல்கள்
0 100 200 300
சிம்மளம்
(அ)
இலங்கை
(சிலோன்)
கலிங்கம்
கோசலம்
கன்னியாகுமாரி
கோவா
நெல்லூர்
சென்னைப்பட்டினம்
காஞ்சீபுரம்
நாகப்பட்டினம்
கோடிக்கரை
மங்களூர்
சோப்பாரா
சௌராஷ்டிரம்
காந்தாரம்
புருஷபுரம்
காபூல்
ஸ்ராவஸ்தி
காத்மாண்டு
நேபாளம்
காசி
பிரயாகை
சாம்பல்பூர்
பூரி
கொங்கோதம்
68° 72° 76° 80° 84° 88° 92°
36° 32° 28° 24° 20° 16° 12° 8°

ஹூணர்களின் தலைவனான **மிஹிரகுலன்** என்ற கொடுங்கோல் மன்னன், யசோதர்மன் தலைமையின்கீழ் ஒன்று சேர்ந்த இந்திய அரசர்களால் **கி. பி. 528-ல்** தோற்கடிக்கப்பட்டான். இதன் பிறகு ஹூணர்களும் அவர்களுடைய பந்துஜனக் கூட்டத்தினராகிய கூர்ஜ்ஜரர்கள் அல்லது குஜரர்கள் எனப்படுவோரும் ராஜபுதனத்தில் **பின்மல்** என்ற இடத்தில் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபித்து **கன்னோசியையும் ப்ரோச்சையும்** கொள்ளையிட்டார்கள். அவர்களில் சிலர் குஜர ராஷ்டிரம் அல்லது குஜரர்களின் நாடு என்று பிறகு அழைக்கப்பட்ட குஜராத்திற்குள்ளும் நுழைந்தனர். மேற்கூறிய ஹூணர்களும் குஜரக் கூட்டத்தினரும் இவ்விடங்களில் குடியேறியபின் இந்து மதத்தைத் தழுவினார்கள். கொஞ்சகாலத்திற்குப்பிறகு அவர்கள் இந்துக்களாகவே கருதப்பட்டார்கள்.

ஹர்ஷர். வட இந்தியாவில் அரசியல் இயக்கத்தின் பிரதான பட்டணம். பாடலிபுத்திரத்திலிருந்து, கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள புனித நாடாகிய குருக்ஷேத்திரத்திற்கு மறுபடியும் மாறியது. இங்கே புண்ணிய க்ஷேத்திரமான **தானேசாரில், பிரபாகரவர்த்தனன்** என்ற ஒரு அரசர் அரசாண்டு வந்தார். பிரபாகரவர்த்தனருக்கு **ராஜ்யன், ஹர்ஷன்** என்ற இரண்டு குமாரர்களும் **ராஜ்யஸ்ரீ** என்ற குமாரியும் இருந்தார்கள். பிரபாகரர் கூர்ஜ்ஜரர்கள் ஹூணர்கள் முதலிய அன்னியர்களுடன் அடிக்கடி போர்புரிந்துவந்த சிறந்த யுத்தவீரர். இவர் ஜுரத்தினால் இறந்துபோனார்; வங்காளத்தில் **கௌட** நாட்டின் அரசராக இருந்த **சசங்கன்** ராஜ்யவர்த்தனரைக் கொலைசெய்தார். ஆகையால் பிரபுக்கள் ஏற்கனவே சிறந்த யுத்தவீரரென்று புகழ்பெற்றிருந்த **ஹர்ஷரையே** கி. பி. 606-ல் அரசராகத் தெரிந்தெடுத்தார்கள். அவர் ஆறு வருஷகாலம் தொடர்போர் நடத்தி அஸ்ஸாம் முதல் கதியவார் வரையிலுள்ள வட இந்திய நாடுகளைத் தன்னுடைய ஆட்சிக்குட்படுத்திக்கொண்டார். ஆனால் அவர் நர்மதை நதியைக் கடக்க யத்தனிக்கையில் மிகக் கீர்த்தி வாய்ந்த சாளுக்கிய அரசனான இரண்டாவது புலிகேசனால் தோற்கடிக்கப்பட்டார். ராஜபுதனம், ஸிந்து, பஞ்

சாப் முதலிய நாடுகள் வெற்றியாளர்களான ஹூணர்கள், கூர்ஜ்ஜரர்கள் ஆகிய இவர்கள் வசமே இருந்தன. அவைகள் ஜெயிக்கப்படவில்லை. 'ஐந்து வருஷகாலங்களில் யானைகளின்மேலிருந்த அம்பாரிகளை இறக்கவே இல்லை. யுத்தவிரர்களும் தங்கள் கவசங்களைக் களையவே இல்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹர்ஷரின் அரசாங்க நிர்வாகம். ஹர்ஷருடைய அரசாட்சியைப்பற்றி அதிர்ஷ்ட வசமாக நமக்கு இரண்டு தெளிவான வர்ணனைகள் கிடைத்திருக்கின்றன. **பாண**ரால் இயற்றப்பட்ட **ஹர்ஷ சரிதம்** என்ற வசன காவியம் ஒன்று. மற்றொன்று **ஹ்யூன்-த்ஸாங்** என்ற சீன யாத்திரீகர் மிக அருமையாக இந்த நாட்டைப்பற்றியும் அதன் அரசரைப்பற்றியும் எழுதிவைத்திருக்கும் விவரங்களாகும். **சட்டத்தலைவர்** என்ற பட்டத்தை வகித்த ஹ்யூன்-த்ஸாங் கி. பி. 629-ல் சீனாவிலிருந்து புறப்பட்டு வந்து பதினைந்து வருஷம் எல்லா நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, ஆங்காங்கு தான் பார்த்த ஜனங்களுடைய பழக்க வழக்கங்கள், மதங்கள் முதலியவற்றைக் குறித்துக்கொண்டு போனார். இந்தியாவில் அவர் இருந்த பதினைந்து வருஷகாலத்தில் எட்டு வருஷங்களை அவர் ஹர்ஷரின் இராஜ சபையிலோ அல்லது அவருடைய இராஜ்யத்திலோ கழித்தார்.


ஹர்ஷருடைய தலைநகர் கங்கைக் கரையிலிருக்கும் சரித்திரப் பிரசித்தியடைந்துள்ள கன்னோசி நகரமாகும். இது குளங்கள், புஷ்பத்தோட்டங்கள் இவைகளுடன் நன்றாக அமைக்கப்பெற்ற ஒரு செல்வம் நிறைந்த நகரம். இந்நகரத்தில் காணப்பட்ட அநேக சந்நியாசி மடங்கள் இதன் வெகு முக்கியமான அம்சமாகும். இந்த மடங்களில் அநேகச் சந்நியாசிக் கூட்டத்தார்கள் அரசன், தனவந்தர்கள் இவர்களின் நன்கொடைகளால் போஷிக்கப்பட்டு வந்தார்கள். சாமர்த்தியமாக அரசுபுரிந்த எல்லா இந்து அரசர்களைப்போல், ஹர்ஷரும் தன் செல்வாக்கிலும் தன் முயற்சிகளிலுமே நம்பிக்கைக் கொண்டிருந்த நல்ந்தரும் சுயேச்சாதிபதியாக இருந்தார். மழைக்காலத்தைத் தவிர்த்து மற்றக் காலங்களில் சலிப்

பில்லாமல் சுற்றுப்பிரயாணம் செய்து தன்னுடைய அதிகாரிகளை மேற்பார்வையிட்டும், குடிகளின் பிராதுகளை விசாரித்தும் வந்தார். சக்கரவர்த்தியின் தணிக்கையை உத்தேசித்து அதிகாரிகள் ஜாக்கிரதையாய்க் கணக்குகளையும் தினசரி வேலைக் குறிப்புகளையும் வைக்கவேண்டியது அவசியமாயிற்று. அவர் செல்லு மிடங்கள்தோறும் தற்காலிகமாக மூங்கில்களாலும் நாணல் தட்டுகளாலும் முகாங்களை ஏற்படுத்தி, அவர் அவ்விடத்தினின்றும் போனபின் அதை எரித்துவிடுவது வழக்கம். தன்னுடைய இராஜ்யத்தின் பற்பல பாகங்களின் நடவடிக்கைகளை அறியும் வண்ணம் பாதைகளில் ஆங்காங்கு அஞ்சல்காரர்களை வைத்திருந்தார். ஆனல் தேசம் பாஹியன் காலத்திலிருந்ததுபோல் அவ்வளவு ஒழுங்காக இருக்கவில்லை. வழிப்பறிக் கொள்ளைகள் ரஸ்தாக்களிலும் ஜலமார்க்கங்களிலும் அடிக்கடி நேரிட்டன. **ஹ்யூன்-த்ஸாங்** பௌத்தமதப் பெரியார் என்று புனிதம் வாய்ந்தவராய் இருந்தபோதிலும் பல தடவைகளில் தாக்கப்பட்டு அதிர்ஷ்ட வசமாய் உயிர் தப்பினர். தண்டனைகள் கடுமையாயிருந்தன. மரண தண்டனை விதிக்கப்படாமலிருந்தபோதிலும் அங்கச்சேதனம் வழக்கத்திலிருந்தது. மேலும், கைதிகள் பட்டினி கிடந்து இறக்கும்படியும் விடப்பட்டனர். சித்திரவதையும் கடும் பரீட்சையும் குற்றவாளியின் குற்றத்தையோ அல்லது குற்றமின்மையையோ அறிந்துகொள்ள அநுமதிக்கப்பட்டன. குப்தர்களைப்போலவே ஹர்ஷரும் பிரயாணிகளுக்குச் சத்திரங்களையும், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்தியசாலைகளையும், இதர தர்ம ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தினர்.

பொது ஜனங்கள். ஹ்யூன்-த்ஸாங் தான் பார்த்தவைகளையும் இந்தியர்களின் வாழ்க்கையைப்பற்றியும் வெகு நேர்த்தியாகப் பின்கண்ட மாதிரி வர்ணித்திருக்கிறார்:—

ஜனங்கள் இயற்கையில் உறுதியற்றிருந்தபோதிலும், நேர்மையும் கௌரவமும் வாய்ந்தவர்கள். பணவிஷயங்களில் தந்திர மில்லாமலும், நியாயம் வழங்குவதில் கருணையுடனும் இருக்கிறார்கள். பரலோக வாழ்க்கையில்

தங்கள் வினைப்பயனை அநுபவிக்க வேண்டிவருமென்று பயப்படுகிறார்கள். இகலோக வாழ்க்கையைக் குறித்த விஷயங்களைத் துச்சமாக எண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் நடத்தையில் சூதில்லாமலும், துரோகமில்லாமலும், தங்கள் ஆணைக்கும் வாக்குறுதிக்கும் உண்மையாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய அரசாங்க விதிகளில் மிக ஆச்சரியமான நேர்மை காணப்படுகிறது.



நகரத்தின் தரைமட்டம் அடிக்கடி எவ்வாறு உயர்ந்து வந்திருக்கிறது என்பதைக் காண்பிக்கும் நாலாந்தாவில் வெட்டியெடுக்கப்பட்ட பல்வேறு காலத்து ஸ்தூபிகள்

அவர்களுடைய நடத்தையில் அமரிக்கையும் இனிமையும் காணப்படுகிறது. குற்றவாளிகளும் கலகக்காரர்களும் மிகக் குறைவு. அவர்கள் ஏதோ சில சந்தர்ப்பங்களில்தான் தொந்திரவளித்து வருகிறார்கள். **அரசியல் முறை** சாந்தமுள்ளதாயும், நிர்வாக முறை சுலபமாகவும் இருக்கிறது. அரசரின் நிலங்களிலிருந்து பெற்ற வருமானம் நான்கு பாகமாக்கப்படுகிறது. முதற் பாகம் இராஜ்ய காரியங்களை நிர்வகிப்பதற்கும், இரண்டாவது

பாகம் மந்திரிகளுக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், மூன்றுவது பாகம் விசேஷத் திறமை வாய்ந்தவர்களுக்கு வெகுமதி அளிப்பதற்கும், நான்காவது பாகம் மதக் கூட்டத்தார்களுக்கும் செலவழிக்கப்படுகின்றன. இவ்வாறே ஜனங்களிடம் வசூலிக்கப்பட்ட வரி இலகுவாகவும், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட சேவை மிதமாயு மிருக்கின்றன. எல்லோரும் தங்களுடைய சொத்துக்களைத் திருடர் பயமின்றி வைத்திருக்கிறுர்கள். அவரவர் தங்கள் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்



நாலாந்தாவில் புதைந்து கிடந்த மடங்களும் இதர கட்டடங்களும்

கிறுர்கள். அரசனுடைய பண்ணைகளைப் பயிரிடுகிறவர்கள் மாசூலில் ஆறில் ஒரு பங்கைக் கப்பமாகச் செலுத்துகின்றனர். வாணிபத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் தங்கள் தொழிலின் காரணமாக அங்குமிங்கும் பிரயாணம் செய்கிறுர்கள்; நதிகளும் சுங்கவாயில்களும் ஒரு சிறிய தொகையைப் பெற்று பிரயாணிகளுக்குத் திறந்துவிடப்படுகின்றன. பொதுக் கட்டட வேலைகளுக்குத் தேவையாயிருந்தால் கூலியாட்களைக் கட்டாயமாகச் சேர்க்கிறுர்

கள்; ஆனால் அவர்களுடைய வேலைக்குக் கூலி அளிக்கப் பட்டு வருகிறது.

நாலாந்தா சர்வகலாசாலை. ஆனால் இவை யெல்லா வற்றிலும் மிகச் சிறந்தது **நாலாந்தா**வில் இருந்த பௌத்த சர்வகலாசாலையின் வர்ணனையாம். ஏனென்றால், 1,300 வருடங்களுக்கு முன் இருந்த இந்தியச் சர்வ கலாசாலையின் தோற்றத்தை தத்ரூபமாகச் சித்திரப் படத்தில் காண்பதுபோல் இவர் வர்ணனையில் நாம் காண்கிறோம்.


இக்கலாசாலைக் கட்டடத்தில் ஏறக்குறைய நூறு பிரசங்க அறைகள் இருந்தன. சுமார் 1,000 மாணவர்கள் இங்கே குடியிருந்து கல்வி பயின்று வந்தனர். ஒழுக்கக் கட்டுப்பாடு கண்டிப்பாயிருந்தது.

கல்விப்பயிற்சியில், இலக்கணம், வைத்திய சாஸ்திரம், தர்க்கம், மனோதத்துவ சாஸ்திரம் இவைகள் அடங்கி இருந்தன. மாணவன் சாதாரணமாக ஏழாவது வயது முதல் முப்பதாவது வயது வரையில் கல்வி பயின்று வந்தான்.

மதச்சபைகள். மிகுந்த மதப்பற்றுள்ள ஹர்ஷர் ஐந்து வருஷத்திற்கொருமுறை **பிரயாகை**யில் மதச்சபைகளைக் கூட்டினர். **ஹ்யூன்-த்ஸாங்** அதிர்ஷ்ட வசமாக இச் சபை கூடியிருந்தபொழுது அங்கு வந்து சேர்ந்தார். காமரூபம், வல்லபி, இந்நாட்டு அரசர்களும் இவர்களைத் தவிர இதர பதினெட்டு சிற்றரசர்கள், 4,000 பௌத்த சன்னியாசிகள், 4,000 பிராம்மணர்கள், ஜைனர்கள், 300 யானைகள், இவைகள் சூழ, ஹர்ஷர் கங்கை நதிக்கரை யோரமாகக் கன்னோசிக்குப் பவனி சென்றார். தெய்வத்தைப்போல் தன்னை அலங்கரித்திருந்த ஹர்ஷரே பல்லக்கில் வைக்கப்பெற்ற புத்தர் விக்கிரகத்தைத் தன் தோளில் சுமந்துச் செல்ல முன்வந்தார். பூர்ண பரிமாணமுள்ள மற்றொரு சிலை நதிக்கரையிலிருந்த ஒரு கோபுரத்தில் பூஜைக்காக வைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய விருந்திற்குப் பிறகு பொது விவாதம் நடந்தது. ஆனால் அரசர் சன்மார்க்கச் சட்டத்தை ஏற்படுத்திய குருநாதரை நிந்தித்து யாரேனும் பேசுவார்களானால் அவர்களுடைய

நாக்கை அடியுடன் நறுக்கிவிட வேண்டுமென்று ஆஞ்ஞா பித்திருந்தமையால், ஹ்யூன்-த்ஸாங் எதிர்ப்பாளர்களை அதிகமாகக் காணவில்லை.

மற்றொரு முக்கியமான கூட்டம் பிரயாகையில் கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் உள்ள மணற்கரையில் நடந்தது. இது தற்காலத்தில் வருஷா வருஷம் கூடும் 'மேளா' என்ற விழாவைப் போலிருந்திருக்கவேண்டும். இக்கூட்டம் 25 நாட்களாக நடைபெற்றது. பௌத்தர்கள், பிராம்மணர்கள், ஜைனர்கள், பதிதர்கள் முதலான எல்லோருக்கும் தானங்கள் வழங்கப்பட்டன. இங்கு ஏராளமான ஜனங்கள் கூடி இருந்தனர். அரசர் ஐந்து வருஷத்தில் சேர்ந்திருந்த தன் சொந்தச் செல்வம், ஆபரணங்கள், ஆடைகள், குண்டலங்கள், கடகங்கள், கிரீடங்கள் எல்லாவற்றையும் மதக்கொடைகளாகத் தானம்



ஸ்வஹஸ்தோ மம மஹா ராஜாதி ராஜஸ்ரீ ஹர்ஷஸ்ய
(ஹர்ஷரின் கையெழுத்து)

செய்தார். 'எல்லாவற்றையும் தானமாக அளித்தபின், தன் சகோதரியிடம் சாதாரண பழைய வஸ்திரம் ஒன்றை யாசித்து அதை அணிந்துகொண்டு "பத்துப் பிரதேசங்களின் புத்தர்களை" வணங்கினர். தன் பொக்கிஷம் புண்ணிய வழிகளில் செலவிடப்பட்டதைக்குறித்து அவர் மிக்க சந்தோஷமடைந்தார்.'

ஹர்ஷரின் சுய குணதிசயம்—அவர் மாணம். அதிர்ஷ்டவசமாகத்தான், முகமதியர்களுக்கு முற்பட்ட காலங்களிலிருந்த ஒரு மேன்மையான ஹிந்து அரசனின் தினசரி வாழ்க்கையைப்பற்றி மனதைக் கவரக்கூடிய விஷயங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அந்நிய நாட்டினர் படையெடுக்காமல் இருந்தகாலத்தில் இந்தியா சந்தோஷமாகவும் க்ஷேமமாகவும் இருந்ததென்றும், இந்

நாட்டின் அரசர்கள் நாகரீகம் வாய்ந்த உழைப்பாளி களாயும், கலைகளையும் மதங்களையும் ஆதரிப்பவர்களா யும் இருந்தார்களென்றும் புலப்படுகிறது. ஹர்ஷரே ஒரு சிறந்த வித்வான். அவருடைய சமஸ்தானத்தில் விவா தங்கள் நடந்தன. தன் கணவன் கொல்லப்பட்டு சிதை யில் எரிப்பதற்கு வைக்கப்பட்ட சமயத்தில் ஹர்ஷரால் காப்பாற்றப்பட்ட அவர் சகோதரியும் இவ்விவாதங்களில் கலந்துகொண்டார். அவர் மூன்று நாடகங்களை எழுதி யிருக்கிறார். அவைகளில் **ரத்தினமாலை** என்ற **ரத்தினு வளி** மிக மதிப்புவாய்ந்ததென்று சொல்லப்படுகிறது. அவர் எழுத்துக்களை வெகு அழகாக எழுதுபவர். மிக ஆச்சரியமாக அவர் சாசனங்கள் ஒன்றிற்கடியில் அவ ருடைய உண்மையான கையெழுத்து காணப்படுகிறது. அவர் சமஸ்தானத்தில் இருந்த அநேக நூலாசிரியர்களில் மிகவும் புகழ்பெற்றவர் **பாணர்.** அவர் இரண்டு வசன இலக்கியங்களை இயற்றியிருக்கிறார்; ஒன்று அவர் தன்னை ஆதரித்துவந்த ஹர்ஷரின் வாழ்க்கைச் சரித்திரமாகிய **ஹர்ஷ சரித்திரம்;** மற்றொன்று **காதம்பரி** என்ற பெய ருடன் அக்காலத்திய சம்பிரதாயப்படி அலங்காரமாயும், நாகரீகமாயும், கடினமாயும் உள்ள சமஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டக் கட்டுக்கதையாகும். தன்னுடைய வாழ் நாட்களின் கடைசிக்காலத்தில் ஹர்ஷர் மதப்பற்று மிகுந்த பௌத்தரானுர். தந்நாடு முழுவதிலும் மிருகங் களைக் கொல்வதைத் தடுத்தார். அவர் கி. பி. 647-ல் இறந் தார். அவருக்குப்பின் பட்டத்திற்குவர அவர் சந்ததி யார் ஒருவரும் இல்லை. எனவே, அவருடைய ஏகாதிபத் தியம் ஒன்றுக்கொன்று சண்டையிடும் பல சிறிய இராஜ் யங்களாகச் சிதறுண்டுபோயிற்று. இச்சிறு நாடுகளில் சண்டை மிகுந்திருந்தது.

புத்தமதம் க்ஷீணமடைந்தது. பௌத்தமதம் ஹர்ஷ ரால் ஆதரிக்கப்பட்டு வந்தபோதிலும், நாளடைவில் அதன் சக்தி குறைந்துகொண்டே வந்ததென்பதற்கு அறி குறிகள் இருக்கின்றன. மஹாயன பௌத்தமதம் அநேக விஷயங்களில் இந்து மதத்தைப்போலவே இருந்தது. ஆகையால் இரண்டு மதங்களும் நாளடைவில் ஒன்றுக்

ன்று அருகே நெருங்கவே, தன்னுடன் போட்டி – பௌத்த மதத்தை இந்து மதம் ஐக்கியப்படுத்திக் கொண்டது.

அத்தியாயம் 7

வட இந்தியாவின் இராஜ புத்திர நாடுகள்

இராஜபுத்திரர்கள் தோன்றிய வரலாறு. ஹர்ஷர் கி. பி. 647-ல் இறந்தார். அதற்குப்பின் வட இந்தியா முழுவதும் குழப்பமான நிலைமையிலிருந்தது. கி. பி. 850-ல் இந்நிலைமையிலிருந்து ஒழுங்கு மறுபடியும் தலை தூக்க ஆரம்பித்தபொழுது, இந்து நாகரீகம் அநேக மாறுதல்க ளடைந்திருப்பதை நாம் காண்கிறோம். அன்னிய தேசத்துக் கூட்டத்தினர் பலர் நாட்டிற்குள் நுழைந்து இங்கே குடியேறி யிருந்தனர். அவர்கள் தங்களுடன் புதிய வழக்கங்களையும் புதிய தெய்வங்களையும் கொண்டு வந்தும், இத்தேசத்துப் பெண்களை விவாகம் செய்து கொண்டு கலப்புற்றும் இருந்தனர். இப்பொழுதுதான் நாம் **இராஜபுத்திரர்கள்** அல்லது அரசர்களின் புத்திரர்கள் என்று தம்மை யழைத்து வந்த சில குலங்களை முதன் முதலாகக் காண்கிறோம். இவர்கள் வட குஜராத், அயோத்தி, தற்காலம் இராஜபுதனம் என்றழைக்கப்படும் பிரதேசம், இவ்விடங்களில் குடியேறி ஹிந்துஸ்தானம் முழுவதிலும் பரவினர்கள். ராஜபுத்திரர்கள் முதன் முதலில் தோன்றிய வரலாறு விவாதத்திற்குட்பட்ட விஷயம். முப்பத்திரண்டு ராஜபுத்திர குலங்கள் இருக்கின்றன. அவைகள் **சூரியவமிசி, சந்திரவமிசி, அக்னி குலம்** என்று மூன்று பெரிய வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. அக்கினிகுல வகுப்பில் **பாவர்கள், பரிஹார்கள், சௌஹானர்கள், சொலாங்கிகள்** அல்லது **சாளுக்கியர்கள்** என்ற நான்கு பெரிய இராஜபுத்திர இனத்தார்கள் இருந்தார்கள். இராஜபுத்திரர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாய் இல்லாமல் இருக்கலாம். அவர்களில் சிலர் பழைய ஆரிய பிரபுக்களின் சந்ததியார்கள். மற்றவர்கள் அந்நிய நாட்டார்கள். இது எப்படியிருந்த போதி

லும் பழைய வேற்றுமைகள் வெகு சீக்கிரமாய் மறக்கப் பட்டுப்போயின. இராஜபுத்திரர்கள் குஜராத், இராஜ புதனம் ஆகிய நாடுகளில் பரவி இந்துஸ்தானம் முழு வதும் குடியேறினர்கள். **மேவார் தேசத்துச் சிசோதியா** குலத்துத் தலைவனைத் தங்களுள் முதன்மைபெற்ற தலைவ னுக அவர்கள் கருதினர்கள். அவர் சூரிய வமிசத்தைச் சேர்ந்தவர்; வீரராகவனை அயோத்தி ராமனின் மரபில் உதித்ததாக உரிமைகொண்டாடியவர்.

ஆதி ராஜபுத்திர ராஜ்யங்கள். முதன்முதல் கீர்த்தி பெற்ற ராஜபுத்திரகுலம் **பிரதிகாரர்கள்** அல்லது **பரிஹார் கள்** என்பதாகும். இவ்வமிசத்தில் மிகப் பராக்கிரமம் வாய்ந்த அரசர் **ராஜாபோஜபரிஹர்.** இவர் ஹர்ஷரின் தலைநகராயிருந்த கன்னேசியைக் கைப்பற்றி, கத்தியவா ரையும், கங்கை நதிச் சமவெளியின் மத்திய மேற்குப் பாகங்களையும் அரசாண்டார். மற்றொரு ராஜபுத்திர வமிசத்தினராகிய **சண்டேலர்கள், பண்டெல்கண்டில்** தங்களுடைய ராஜ்யத்தை நிலைநாட்டி யிருந்தனர். மாளவத்தில் **பாவர்** ராஜபுத்திரரும் **போஜன்** என்ற பெயர்பூண்டவருமான மற்றொரு அரசர் நாற்பது வருஷ காலத்திற்குமேல் (கி. பி. 1018-60) **தார்** என்னும் தன் னுடைய தலைநகரத்தில் அரசாண்டார். அவர் ஒரு புகழ் பெற்ற யுத்தவீரர்; கல்வியறிவாளர். சாஸ்திரங்கள், கலை கள், இவைகளை ஆதரித்து வந்தார். அவர் தானே வான சாஸ்திரம், கட்டடக்கலை, செய்யுள் அமைக்கும் முறை, முதலியவற்றைக் குறித்துப் பல நூல்களை எழுதியிருக் கிறர். போஜராஜன் ஒரு சமஸ்கிருத கலாசாலையை ஏற் படுத்தி, அதைக் கல்விக் கடவுளாகிய ஸரஸ்வதிக்கு அர்ப் பணம் செய்தார். போபாலுக்குத் தென்கிழக்கில் **போஜ பூர்** என்ற இடத்தில் மேன்மையான கட்டட சாமர்த் தியம் வாய்ந்த கல்லணையைக் கட்டி 250 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள ஓர் ஏரியை நிர்மாணம் செய்தார். போஜனைத் தற்காலத்திலும் பின்பற்றத்தக்க ஒரு ஹிந்து அரசனுக ஜனங்கள் கொண்டாடுகிறர்கள்.

வங்காளத்தில் பால வமிசமும் சேன வமிசமும். இடையே வங்காளத்திலும், பீஹாரிலும், **பாலர்கள்** என்ற



பாலர்களின் காலத்து சூரிய விக்கிரகம்

பராக்கிரமம் வாய்ந்த வமிசத்தினர் தோன்றினார்கள். இவ்வமிசத்தின் ஆரம்ப வரலாறு அறியக்கூடாமலிருக்கிறது. ஆனால் பாலன் (காப்பாற்றுபவன்) என்ற பின் அடைமொழி, ஹர்ஷருடைய மரணத்திற்குப்பின் ஏற்பட்ட குழப்பத்திலிருந்து அவர்கள் தங்கள் நாட்டைக் காப்பாற்றினவர்கள் என்று தெரிவிக்கிறது. இவ்வமிசத்து முதல் அரசர் **கோபாலன்**. இவர் பிரதேச சிற்றரசர்களால் கி.பி. 750-ல் தெரிந்தெடுக்கப்பட்டார். அவருக்குப்பின் வந்த **தர்மபாலன்** தன் ராஜ்யத்தைக் கன்னோசிவரையில் பரவச்செய்தார். ஆனால் இங்கு இராஷ்டிரகூடர்கள் இவரை இதற்குமேல் முன்னேற வொட்டாமல் தடுத்தார்கள். அடுத்த அரசராகிய **தேவபாலர்** வெகுகாலம் அரசாண்டு, அஸ்ஸாமையும், கலிங்க நாட்டையும் தன் இராஜ்யத்துடன் சேர்த்தார். தமிழர்கள் இராஜேந்திர சோழனின் தலைமையின்கீழ் இவ்வமிசத்து ஒன்பதாவது அரசனை **மஹிபாலனை** (கி.பி. 978-1030) தாக்கி, கங்கை நதிவரையில் முன்னேறிச் சென்றனர். பாலர்கள் புத்தமதத்தை ஆதரித்தார்கள். பௌத்தமதப் பிரசாரகர்களை இப்பொழுது முக்கியமான பௌத்த நாடாக இருக்கும் திபெத்திற்கு அனுப்பினார்கள். இந்தியாவில் மற்ற இடங்களில் பௌத்தமதம் மறைந்துபோன வெகு காலத்திற்குப்பின்னும், வங்காளத்தில் பௌத்தமதம் இருந்து வந்தது. பாலர்கள் வங்காளத்தை இந்தியாவின் முதன்மையான நாடுகளில் ஒன்றாகச் செய்தனர். அவர்கள் சித்திரம், சிற்பம், வர்ணப் படங்களை வரைதல் முதலிய கலைகளைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். வெண்கலம், இதர உலோகங்கள் இவைகளினால் வார்ப்பட சாமான்கள் செய்வதும் வெகு முன்னேற்ற மடைந்திருந்தது. அவர்கள் நீர்ப்பாசனத்திற்காகப் பெரிய ஏரிகளைக் கட்டினார்கள். சுமார் கி.பி. 1100-ல் வங்காளத்தில் **சேனர்கள்** என்று தோன்றிய மற்றொரு போட்டிவமிசத்தின் ஸ்தாபகர் தக்காணத்திலிருந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. சேனவமிசத்தின் கடைசி அரசராகிய **லக்ஷ்மணசேனன்** மிக மதிப்பு வாய்ந்த மன்னர். முதிர்ந்த பருவம்வரையில் **ஜீவித்**

திருந்தார். அவருடைய தலைநகர் கல்கத்தாவிற்கருகிலிருந்த **நூதியா (நத்தியா).** இங்கு தர்க்க சாஸ்திரத்தைப் போதிக்கும் சமஸ்கிருத கலாசாலை ஒன்று இருந்தது. அது இப்பொழுதும் இருந்துவருகிறது.

முகம்மதியர்கள். கி. பி. 1199-ல் **முகம்மத்பாக்டியார்** என்பவரின் தலைமையின்கீழ்ப் படையெடுத்து, **பால, சேன** வமிசங்களை நிர்மூலமாக்கினார்கள். பீகார் நகரத்தை இருநூறு குதிரைவீரர்கள் திடீரென்று தாக்கிக் கைப்பற்றி, பௌத்த சந்நியாசிகளை வாளுக்கிரையாக்கினார்கள். உயிர்தப்பிய துறவிகள் திபெத்திற்குச் சென்று அடைக்கலம் புகுந்தனர். தங்களுடன் அவர்கள் கொண்டுபோன எழுத்துப்பிரதிகளை அவர்கள் திபெத்துப் பாஷையில் மொழிபெயர்த்தார்கள். இப்புத்தகங்களின் பிரதிகளை லாஸா முதலிய இடங்களில் இன்றைக்கும் காணலாம். பீகாரைக் கொள்ளையிட்டுச் சூறையாடிய பிறகு, முகம்மத்பாக்டியார் நத்தியாவைத் தாக்கவே அதன் அரசர் ஓடிப்போனார். அவருடைய மனைவி மக்கள், சேவகர்கள், யானைகள், அளவிடமுடியாத கொள்ளைப் பொருள்கள், இவைகளையெல்லாம் முகம்மதியர்கள் கைப்பற்றி, **கௌர்** என்ற இடத்தில் ஒரு புதிய தலைநகரை ஸ்தாபித்தார்கள்.

ஜயபாலரும் முகம்மதிய படையெழுச்சிகளும். இது நிற்க, வடமேற்கு எல்லைப் பிரதேசத்தில் கலக்கமுண்டாக்கும் சம்பவங்கள் பல நிகழ்ந்துகொண் டிருந்தன. ஆப்கானிஸ்தானத்திய மலைப்பிரதேசங்களில் **கஜினி** என்னும் சிறிய நகரைத் தலைநகராகக்கொண்டு தோன்றிய ஒரு புதிய இராஜ்யத்தின் அரசனை **சபக்டிஜின்** செழிப்புவாய்ந்த பஞ்சாபின் மீது மோகங்கொண்டு, அந்நாட்டின்மீது படையெடுத்தார். அவர், தற்காலத்து பாடியாலாவின் சமீபத்திலிருந்த **படிண்டா**வைத் தலைநகராகக்கொண்டு அரசுபுரிந்துவந்த **ஜயபாலர்** என்னும் ராஜபுத்திர அரசரைச் சந்தித்து, அவரைத் தோற்கடித்தார் (கி. பி. 986). ஜயபாலர் கி. பி. 991-ல் முகம்மதிய படையெழுச்சியைத் தடுக்கும்பொருட்டு, **கன்னோசி**யின் **பரிஹார்** அரசர் உள்பட எல்லா இந்து அரசர்களையும்

ஒன்றுசேர்த்தார். ஆனால் சபக்டிஜின் ராஜபுத்திரர்களைத் தோற்கடித்து முக்கியமான எல்லை நகராகிய **பெஷாவரைக்** கைப்பற்றினர்.

கஜினிமாமூத். சபக்டிஜினுக்குப்பின் அவர் குமாரர் **மாமூத்** கி. பி. 997-ல் பட்டத்திற்கு வந்து, கஜினிஸுல்தான் என்ற பட்டப் பெயரையும் வகித்தார். மாமூத் சிறந்த வெற்றிவீரர்; வருஷந்தோறும் பனிக்காலத்தில் செழிப்புற்ற இந்திய நாடுகளின்மீது படையெடுத்து அவைகளைக் கொள்ளையடித்தும் அழித்தும் வந்தார். மாமூத், ஜயபாலரையும் அவர் குடும்பத்தாரையும் கி. பி. 1001-ல் சிறைப்படுத்தினர். ஜயபாலர் அவமானம் பொறுக்க மாட்டாமல் தீக்குளித்து உயிர்துறந்தார்.

பெஷாவர் சண்டை. தன்னுடைய தகப்பனரின் மரணத்திற்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்த **ஆனந்தபாலர்** (ஜயபாலரின் குமாரர்) உஜ்ஜயினி, க்வாலியர், கன்னோசி, டில்லி, அஜ்மீர் முதலிய நாடுகளின் அரசர்களை ஒன்றுசேர்த்து, அவர்களுடன் முகம்மதியப் படையை எதிர்த்தார். நாற்பது நாள் முகம்மதிய சேனையும் இந்துக்களின் சேனையும் ஒருவரையொருவர் கவனித்தவண்ணம் பெஷாவர் சமவெளியில் இருந்தன. சுல்தான் தனது முகாமைப் பலப்படுத்த வேண்டியதாயிற்று. இராஜபுத்திரர்கள் அவருடைய முகாமைக் கடுமையாகத் தாக்கி வெற்றிபெறும் சமயத்தில் அனந்தபாலரின் யானை வெருண்டு ஓடிற்று. இராஜபுத்திரர்கள் இதைத் திரும்பி ஓடுவதற்கான அறிகுறியாகக்கொண்டு பின்வாங்கினர். உடனே முகம்மதியர்கள் அவர்களைத் தாக்கித் தங்கள் தோல்வியை வெற்றியாக்கிக்கொண்டனர். மிகப் பலமுள்ள கங்ராக் கோட்டையை ஏராளமான கொள்ளைப்பொருள்களுடன் அவர்கள் கைப்பற்றினர்கள். இராஜபுத்திரர்களின் எதிர்ப்பு தற்காலிகமாக ஒருவாறு முடிவடைந்தது.

மதுரையையும் சோமனத்தையும் தாக்கி சூறையாடுதல். இதன்பிறகு மாமூத் பாதுகாப்பற்ற இந்தியாவின் மீது பலதடவை படையெடுத்து வந்தார். அவர் கி. பி. 1018-ல் கிருஷ்ண பகவான் கோயில் கொண்டிருக்கும்

புண்ணிய க்ஷேத்திரமாகிய வட மதுரையைக் கைப்பற்றி, ஒவ்வொன்று ஐந்து கஜ உயரமும், சிகப்பு தங்கத்தால் செய்யப்பட்டும், விலைமதிக்கமுடியாத இரத்தினங்களால் கண்கள் பதிக்கப்பெற்றதுமான ஐந்து விக்கிரகங்களோடு கூடியிருந்த அந்நகரின் சிறப்புவாய்ந்த கோயிலையும், இதர கோயில்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினர். பிறகு வட இந்தியாவில் முக்கிய பட்டணமாயும் பரிஹார் ராஜபுத்திரர்களின் தலைநகராயும் இருந்த கன்னோசியை நோக்கிச் சென்றார். அதன் அரசனாகிய **ராஜ்யபாலன்** பகைவனுக்குப் பணிந்தது இராஜபுத்திரர்களுக்கு ஆத்திரமூட்டியது. இதன் காரணமாக அவர்கள் அவனை ஒரு துரோகியென்று மதித்துக் கொன்றுவிட்டார்கள். அடுத்த வருஷத்தில் மாமூத் இராஜபுத்திரர்களை இச்செயலுக்காகத் தண்டிக்கவேண்டுமென்று தீர்மானித்து, **கண்டாசெண்டெல்** அரசனின் நாட்டிற்குள் புகுந்தார். அந்நாட்டார் ஒரு பெரிய சேனையைத் திரட்டி மாமூதை எதிர்த்தனர். சண்டை முடிவடையும் தருணத்தில் கண்டாசெண்டெல் தைரியத்தை இழந்து, தன்னுடைய முகாமையும், 580 யுத்த யானைகளையும் மாமூத் கைப்பற்றிக்கொள்ள விட்டுவிட்டு, இரவில் ஓடிவிட்டார். கி.பி. 1024-1025-ல் மாமூதின் மிக முக்கியம்வாய்ந்த கடைசி படையெழுச்சி நிகழ்ந்தது. இச்சமயம் அவர் கதியவார் சமுத்திரக் கரையில் இருந்த செல்வ மிகுந்த **சோமனைதபுர** ஆலயத்தைத் தாக்கினர்.

சோமனைதபுரத்தைச் சூறையாடியது. மாமூத் கோவிலை அணுகியபொழுது, அது பலமாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதையும், அதன் மதில்சுவர்களில் காவலர்கள் கூட்டமாக எதிர்த்து நிற்பதையும் பார்த்தார். மறுநாள் காலை முகம்மது நபியின் பச்சைக் கொடிகள் விரிக்கப்பட்டன. முகம்மதிய வில்லாளிகள் எதிர்த்து நின்ற இராஜபுத்திரர்களின்மீது அம்புகளைச் சரமாரியாகப் பொழிந்தார்கள். அவர்களுக்குப் பின் இருந்த யுத்தவீரர்கள் ஏணிகளை வைத்து மதில் சுவரிலேறித் தாக்கினர்கள். ஆனல் அவர்கள் எவ்வளவு துரிதமாக

சுவர்களின்பேரில் ஏறி நிலைபெற முயன்றார்களோ, அவ்வளவு சிக்கிரமாகவே கிழே தள்ளப்பட்டார்கள். கடைசியில் அவர்கள் களைப்புமேலிட்டுப் பின்சென்றார்கள். இதன் மத்தியில் குஜராத்தின் இராஜபுத்திர அரசர்கள் சோமனாதபுர ஆலயத்தைக் காப்பாற்றும்பொருட்டு ஒரு சைன்னியத்தைத் திரட்டி **அனில்வார்** அரசனின் தலைமையின்கீழ் வந்துகொண்டிருந்தார்கள். முகம்மதியர்கள் அவர்களைத் தோற்கடித்தது மல்லாமல் ஆலயத்தை மறுபடியும் தாக்கினார்கள். பிராம்மணர்கள் கர்ப்பகிருஹத்தைச் சூழ்ந்துக் கூட்டமாக நின்று, பகவானைப் பக்தர்களின் உதவிக்கு வரும்படி வேண்டினார்களாயினும், இது ஒரு சிறிதும் பயன்படாமற் போய்விட்டது. மேன்மேலும் தாக்கிய முகம்மதியர்கள் வெற்றியடைந்து, கோவிலைக் கைப்பற்றினார்கள். கோவிலைப் பாதுகாக்கச் சண்டை புரிந்தவர்களில் சிலர் தப்பி ஓடினார்களாயினும், அவர்களில் பெரும்பாலோர் வாளுக்கு இரையானார்கள். இந்துக்கள் மிகக் கொடுமையாக வதைக்கப்பட்டார்கள். லிங்கத்தை மட்டும் உடைக்காமல் விட்டுவிட்டால் ஏராளமாகப் பணம் கொடுப்பதாக அவர்கள் கூறினார்கள். ஆனால் மாமூத் தான் **விக்கிரகத்தை உடைப்பவன்** என்றும் **விக்கிரகத்தை விற்பவன் அல்ல** வென்றும் சொல்லித் தன் கையிலிருந்த குறுந்தடியால் அதை நொறுக்கிவிட்டார். சோமனாதபுரத்திலிருந்து ஏராளமான பொன்னையும் பலவிதமான நகைகளையும் முகம்மதியர்கள் கைப்பற்றினார்கள். பிறகு அவர்கள் தாங்கள் கைப்பற்றியக் கொள்ளைப் பொருள்களைச் சுமந்துகொண்டு, வழியில் பாலைவனத்தில் உஷ்ணத்தாலும், தாகத்தாலும், மிகுந்த கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு, தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்றார்கள்.

கஜினிமாமூதின் மரணம். மேற்கூறியதே கஜினி மாமூதின் மிக முக்யம் வாய்ந்த கடைசி படையெழுச்சியாகும். அவர் கி. பி. 1030-ல் இறந்தார். அவர் மிகக் கொடூரமாகவும், மதவைராக்கியங் கொண்டும் இருந்த போதிலும், கலைகளையும், இலக்கியங்களையும் ஆதரித்து வந்தார். அவர் கஜினியில் அநேக நேர்த்தியான


கட்டடங்களையும் மசூதிகளையும் கட்டினார். அவைகளில் அநேகம் அவர் சிறையாக்கிய இந்து சிற்பிகளால் கட்டப் பட்டன. பாரசிக தேசிய இதிகாசமான **ஷாநாமா** அல்லது 'அரசர்களின் புத்தகம்' என்ற நூலை இயற்றிய **பர்தூஸி** என்ற கவியும், இந்தியாவைப்பற்றி ஒரு முக்கிய மான நூலை எழுதிய **ஆல்பெரோனியும்** அவர் சமஸ்தா னத்திலிருந்த நூலாசிரியர்களில் முக்கியமானவர்கள். மாமூத் பஞ்சாபைத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். ஆனால் இந்தியாவின் இதர பாகங்களை நிலையாகத் தன்னுடைய ஆளுகைக் குட்படுத்த அவர் ஏற்பாடுகள் செய்யவில்லை.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் ராஜபுத்திர நாடுகள். கஜினிமாமூதின் படையெழுச்சிகளுக்குப்பின், இந்தியா வில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. கன்னோசியில் பரிஹார்களின் ஸ்தானத்தை **ராதோர்கள்** வகித்தார்கள். தோமார்கள் என்ற மற்றொரு ராஜபுத்திர வமிசத்தார்கள் கி. பி. 993-ல் தற்காலம் குடுப்மினார் இருக்குமிடத்தில் ஒரு புதிய தலைநகரை ஸ்தாபித்து அங்கு பல நேர்த்தி யான கோவில்களைக் கட்டினார்கள். **கேலட்** அல்லது **சிசோதிய** வமிசத்தினர்கள் மேவாரில் குடியேறி சித்தூர் கோட்டையைக் கட்டினார்கள். ஆனால் அவர்கள் பின்னே வெகுகாலம் வரையில் மேன்மை பெறவில்லை.

ராஜபுத்திர வீரனான பிருத்விராஜன். **பிருத்விராஜன்,** கி. பி 1172-ல் இந்து மதத்தைக் காக்க வந்த வீரனைத் தோன்றினார். அவருடைய பாட்டனாகிய சௌஹான் வமிசத்து **விசாலதேவன்,** டில்லியைத் தோமார்களிட மிருந்து ஜயித்துத் தன் குமாரன் **சோமேஸ்வரனுக்குத் தோமரத் தலைவனின்** புத்திரியை மணம் செய்வித்தார். எனவே, பிருத்விராஜன் இம்மணத்தால் தோன்றியவர். கன்னோசி நாட்டு அரசகுமாரியான ஸம்யுக்தையைத் தூக்கிகொண்டுவந்ததே அவருடைய முதல் தீரச்செய லாகும். அவர், தன் இராஜ்யத்தைச் சுற்றிலுமிருந்த நாடுகளுடன் பலதடவை போர் புரிந்தார். ஆனால் கஜினி மாமூதிற்குப்பின் பட்டத்திற்கு வந்த முகம்மது கோரி யின் தலைமையின் கீழ் முகம்மதியர்கள் மறுபடியும் படை

யெடுத்து வருகிறார்கள் என்ற செய்தி பரவவே, எல்லா இந்துக்களும் தங்கள் உள்நாட்டுக் குடும்பச் சண்டைகளை நிறுத்தி, அன்னியர்களை எதிர்க்க ஒன்றுசேர்ந்தனர்.

தரெயின் சண்டைகள். பிருத்விராஜன் கி. பி. 1191-ல் ஒரு பலத்த சேனைக்குத் தலைவராக விளங்கினார். இதற்கு வட இந்தியாவிலிருந்த அரசர்கள் ஒவ்வொருவரும் உதவிப்படைகளை அனுப்பியிருந்தார்கள். இந்திய சரித்திரத்தில் பல சண்டைகள் நடந்த இடமாகவும், புராணங்களில் பெயர்போனதுமான குருக்ஷேத்திர சமவெளியில் **தரெயின்** என்ற இடத்தில், இம்மாபெருஞ் சேனை சத்துருக்களை எதிர்க்கக் காத்துக்கொண்டிருந்தது. பிறகு இரு திறத்தாருக்கும் நடந்த சண்டையில் முகம்மதியர்கள் தோல்வியுற்றார்கள். கோரிஸுல்தானுக்குக் கையில் காயம் ஏற்பட்டது. அடுத்த வருஷம் அவர் தனக்கு நேர்ந்த அவமானத்திற்குப் பழிவாங்கத் துடித்த வண்ணம் திரும்பிவந்தார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக ஜயசந்திரரும் அனில்வார் அரசனும் தனியே நின்றது இராஜபுத்திரர்களின் அழிவுக்குக் காரணமா யிருந்தது. மேலும், இந்துக்கள் அலெக்ஸாண்டர் காலத்திலிருந்ததைப்போல் யானைகளின் பலத்தையே நம்பிப் போர் புரிந்தார்கள். அவர்களுடைய காலாட்படைகளும் பயிற்சியற்று இருந்தன. முகம்மதியர்களின் குதிரைப் படை ஒழுங்கற்றிருந்த இந்துப்படைகளைச் சூழ்ந்து கொண்டு அம்புகளை மழையாகப் பொழியவே, முடிவில் இந்துக்கள் மிகுந்த குழப்பமான நிலையில் சிதறுண்டு போயினர். பிறகு கவசமணிந்த முகம்மதியக் குதிரை வீரர்கள் சிதறுண்டுபோன இந்துக்களைத் தாக்கவே சண்டை முடிவுபெற்றது. முகம்மதியர்கள் பிருத்விராஜனைச் சிறைப்படுத்திச் சற்றும் இரக்கமில்லாமல் அவரைக் கொலை செய்தார்கள்; ஆஜ்மீரைக் கொள்ளையிட்டனர்; அதன் ஜனங்களை அடிமைகளாக விற்றும், வாளுக்கிரையாக்கியும் அழித்தார்கள். இதன் பிறகு அவர்கள் டில்லி, பனாரிஸ், க்வாலியர் முதலான நகரங்களைக் கைப்பற்றி வங்காளத்தின்மீதும் படையெடுத்துச் சென்றார்கள்.



காஜுராஹோவிலுள்ள விசுவநாதரின் ஆலயம்

எனவே இதன் பிறகு வட இந்தியாவில் இந்துக்களின் ஆட்சி முடிவடைந்தது.

சிற்ப கலை, இலக்கியங்கள்—இவைகளின் பொது நிலைமை. இராஜபுத்திர அரசர்கள் மதப்பற்றுள்ள இந்துக்கள். **பாலர்கள்**தான் பௌத்த மதத்தை ஆதரித்தவர்கள். அவர்கள் தோல்வியுற்றபின் பௌத்தமதம் இந்தியாவிலிருந்து முற்றிலும் மறைந்துபோயிற்று. இராஜபுத்திர அரசர்களில் பெரும்பாலோர் ஆடம்பரமான அரண்மனை வாழ்க்கையை நடத்திவந்தது மல்லாமல், வெகு நேர்த்தியான கோவில்களையும் கட்டினார்கள். இவைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தவை சுமார் கி. பி. 1000-ல் சண்டெல் அரசர்களால் மத்திய இந்தியாவில் கட்டப்பட்ட **காஜுராஹோ** கோவில்களும், ஒரிஸ்ஸாவில் **கொனாரக், புவனேஸ்வரம்** இவ்விடங்களிலுள்ள கோவில்களுமாம். அநேக அரசர்கள் இலக்கியங்களுக்கும், நாடகங்களுக்கும் ஆதரவு அளித்து வந்தார்கள். கன்னோசி அரசனாகிய **மஹேந்திரபாலன்**, அவனுக்கு பின் வந்த **மஹீபாலன்**, இவர்களுடைய சமஸ்தானத்திலிருந்த **ராஜசேகரர்** நகைச் சுவையுள்ளதாயும், ப்ராக்ருதத்தை வெகு சாமர்த்தியமாக கையாளப்பட்டும் உள்ள இன்பியல் நாடகங்கள் பலவற்றை எழுதினார். தார் நாட்டு **போஜராஜனும்**, டில்லியை ஆண்டுவந்த **விசாலதேவனும்** இலக்கியம், செய்யுள் இவைகளைப் பெரிதும் ஆதரித்து வந்தார்கள். அவர்களுடைய சமஸ்தானங்களில் வித்வான்களும் கலைஞர்களும் இருந்தார்கள். **ராஜதரங்கணி** என்னும் காஷ்மீர சரித்திர நூலைச் சுமார் கி. பி. 1150-ல் எழுதிய **கல்ஹணர்** ஸ்ரீநகரில் இருந்து வந்தார். கிருஷ்ணன், இராதை இவர்களின் காதல்களைப்பற்றிய செய்யுள் வர்ணனையான **கீதகோவிந்தம்** என்ற நூலை எழுதிய **ஜயதேவர்** கி. பி. சுமார் 1100-ல் வங்காளத்தில் லக்ஷ்மண சேனனின் சமஸ்தானத்தில் இருந்தார். ஏறக்குறைய இக்காலத்தில்தான் பராக்ருதத்திலிருந்து இந்தியத் தாய் பாஷைகள் வளர்ந்து வந்தன. இராஜபுத்திர பாடகர்கள் பாடிவந்த சிந்துக்களே பழைய ஹிந்தி பாஷையில் உள்ள மேன்மை வாய்ந்த செய்யுள்களாகும்.

முகம்மதியர்களின் வெற்றிக்குக் காரணம். முகம்மதியர்கள் முரட்டுத்தனமும் வலிமையும் பொருந்தியவர்கள். தங்கள் சொந்த நாடு வெகு தூரத்திலிருந்த காரணத்தால் புறங்காட்டி ஓடுவது முடியாத காரியமாகையால், சண்டையில் வெற்றி பெறவேண்டும், இல்லையேல் மடியவேண்டுமென்று உறுதிகொண்டிருந்தார்கள். அவர்களுடைய மதம் சுலபமாய்ப் பின்பற்றக்கூடியதாகவும், ஆண்மையும் வீரத்தன்மையும் பொருந்திய தல்லாமல், இனம், வகுப்பு, இவ்வேற்றுமைகளின்றிச் சகோதரத்வத்தைப் போதித்ததால், அவர்கள் ஒற்றுமை பெற்றிருந்தார்கள். ஆனால், முகம்மதியர்களைவிட மேம்பாடடைந்தும், அதிக நாகரீகம் வாய்ந்தும் இருந்த இந்துக்கள் அநேக நூற்றாண்டுகளாகச் சுகமாய்க் காலங்கழித்து வந்தமையால், பலக்குறைவு அடைந்திருந்தார்கள். அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றிய பௌத்த, ஜைன மதங்கள் ஜனங்களில் பெரும்பாலரைச் சமாதானத்தை நாடும்படியாகவும் சண்டைக்குத் தகுதியில்லாமலும் செய்துவிட்டதால், நாட்டைப் பாதுகாக்கும் கடமை போர்புரிவதைத் தம் தொழிலாகக்கொண்ட படைவீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்துக்கள் எண்ணிறந்த ஜாதிகளாகவும், பிரிவுகளாகவும் பிளவுபட்டிருந்தார்கள். இராஜபுத்திரர்கள் தைரியசாலிகளாய் இருந்தபோதிலும், கர்வங்கொண்டும், சோம்பேறிகளாயும் இருந்ததுமல்லாமல், தமக்குள் எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண் டிருந்தார்களாகையால், அவர்கள் எந்த உயர் தலைவனுக்கும் உட்பட சம்மதிக்கவில்லை. கடைசியாக, இந்துக்களுடைய சேனை நன்கு அமைக்கப் படாமலும், எளிதில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகக்கூடியதாக இல்லாமலும் இருந்தது. எனவே, இடப்பெயர்ச்சிக்குச் சௌகரியமாயிருந்த முகம்மதிய குதிரைப்படை இந்து சைன்னியங்களைத் தாக்கியபொழுதெல்லாம் அவை வெகு சீக்கிரம் ஒழுங்கீனமடைந்து சிதறிப்போயின.

பேரிந்தியா—ஜாவாவும், கம்போடியாவும். அசோகர் சிம்மளத்திற்கு அனுப்பிய மதத்தூதுகளைப்பற்றியும்,

பௌத்த வியாபாரிகள் மேற்கே பாரசீக வளைகுடாவிற்கும் அலெக்ஸாண்டிரியாவிற்கும் கிழக்கில் ஸ்வர்ணபூமி என்றழைக்கப்பட்ட பர்மாவுக்கும் சென்றதையும் முன்னமேயே கூறியிருக்கிறோம். இந்து குடியேற்ற மக்கள் மேன்மேலும் முன்னேறினார்கள். குடியேற்றப் படைகள் சமுத்திர மார்க்கமாகச் சென்று ஸுமத்ரா, ஜாவா, பலி முதலிய கிழக்கிந்தியத் தீவுகளிலும் ஆசியாவின் கிழக்குக் கரையிலுள்ள கம்போடியாவிலும் குடியேறினார்கள். இக்குடியேற்ற மக்கள் குஜராத்திலிருந்தும், தற்காலத்திய ஒரிஸ்ஸாவாகிய கலிங்கத்திலிருந்தும் சென்றவர்களாவர். இங்கே அநேக இந்து இராஜ்யங்கள் தோன்றி சைலேந்திர வம்சத்தின்கீழ் ஒன்றுபட்டன. **சைலேந்திரர்கள்** ஜாவாவில் **ஸ்ரீவிஜயம்** என்ற நகரைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். சுமார் கி. பி. 1250-ல் முகம்மதியர்களால் அழிவுற்ற வரையில் இந்நகரம் கிழக்குத் தீவுக்கூட்டங்களின்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்துக்கள், பௌத்தர்கள் இவர்களுடைய சின்னங்கள் ஜாவாவில் இருக்கின்றன. ஆனால் அவைகளில் மிகவும் நேர்த்தியானது **போரோபுதூர்** என்ற இடத்தில் கி. பி. 750-ல் கட்டப்பட்ட மிக விநோதமான பௌத்த ஆலயமாகும். கம்போடியாவில் இந்து குடியேற்ற மக்கள் **க்மெர்** ஏகாதிபத்யம் என்ற ஒரு ஏகாதிபத்யத்தை ஸ்தாபித்தார்கள். அது ஐந்தாவது நூற்றாண்டில் வெகு முன்னேற்றமடைந்தது. **யசோவர்மன்** என்ற அரசர் கி. பி. 900-ல் ஆங்கார் தோம் (*Angkor Thom*) அல்லது **யசோதர்மபுரம்** என்ற தலைநகரைக் கட்டினார். இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு **ஆங்கர் வாட்** (*Angkor Vat*) என்ற இடத்தில் ஒரு பெரிய சைவ ஆலயம் நிறுவப்பட்டது. இந்தியாவிலிருந்து சீனாவிற்குச் சமுத்திர மார்க்கமாக சென்ற சீன யாத்ரீகரான **ஐத்ஸிங்** (*I-Tsing*) தான் தங்கிய பல தொடர்ச்சியான துறைமுகங்களில் இந்திய குடியேற்ற மக்கள் இருந்ததாகவும் கூறுகிறார். சீன சமுத்திரக் கரைக்கு இந்தியாவிலிருந்து சமுத்திரப் பிரயாணம் செய்வது சர்வ சாதாரணமாயிருந்தது. பௌத்தமதப் பிரசாரகர்களும் வியாபாரிகளும் அடிக்கடி ஜப்பானுக்

குச் சென்று வந்தார்கள். மேல் ஜாதிகளைச் சேர்ந்த இந்துக்கள் சமுத்திரத்தைக் கடந்து அயல் நாடுகளுக்குச் செல்லக்கூடாதென மதம் தடுத்து வந்தது. ஆனால் இந்த விதி ஜைனர்களையும் பௌத்தர்களையுமாவது அல்லது வியாபார வகுப்பினர்களையாவது கட்டுப்படுத்தவில்லை. அநேக ஜனங்கள் ஹூணர்களின் படையெழுச்சிகளால் தங்கள் தாய்நாட்டை விட்டுச் செல்லும்படித் தூண்டப்பட்டு, விடாத் துயரினின்றும் விடுதலைபெறும் நோக்கத்துடன் சமுத்திரத்திற்கப்பாலுள்ள நாடுகளில் குடியேறியிருக்கலாம்.


அத்தியாயம் 8

குஜரத், தக்காணம் இவைகளிலிருந்த ராஜ்யங்கள்

தக்காணத்தின் முற்கால சரித்திரம். முற்காலத்தில் தெந்நாடு அல்லது தக்ஷிணபதம் என்று சொல்லப்பட்ட தக்காணம் வட இந்தியாவிலிருந்து கடக்கமுடியாத அடர்ந்த வனப்பிரதேசங்களால் பிரிக்கப்பட்டிருந்தது. தக்காணத்தில் தஸ்யூக்களும் அரக்கர்களும் வசித்து வந்ததாக இராமாயணத்தில் கூறியிருக்கிறது. அவர்கள் நிச்சயமாக ஆரியப் படையெழுச்சிகளால் துரத்தப்பட்டு இக்காட்டுப் பிரதேசங்களில் தஞ்சம் புகுந்து வாழ நேரிட்ட பூர்வீகக் குடிகளாவர். அவர்களுடைய சந்ததியார்களை இன்றைக்கும் இப்பிரதேசங்களில் நாம் காணலாம். தைரியம் வாய்ந்த அரச குலத்தினர் புதிய பிரதேசங்களில் குடியேற விரும்பிய மக்களை அழைத்துக் கொண்டு வந்து இங்கு குடியேறி ஆரியர்களுடைய நாகரீகத்தைப் பரப்பிய வரலாறு செய்யுள் ரூபமாக இராமாயணத்தில் காணப்படுகிறது.

ஆந்திரர்கள். தக்காணத்தை ஆண்டுவந்த மிகப் பழைய ஜாதியார்களுள் திராவிட இனத்தைச் சேர்ந்த ஆந்திரர்களைப்பற்றியே நமக்கு நிச்சயமான வரலாறு தெரியவருகிறது. சந்திரகுப்தருடைய காலத்தில் ஆந்திர அரசர்கள் மிகப் பலம் வாய்ந்தவர்களென்றும் 1,00,000 காலாட்படை, 2,000 குதிரைப்படை, 1,000 யானைகள்


இவைகளை வைத்திருந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. போஜர்கள், பிதேனிகர்கள், ரஸ்திகர்கள், புலிந்தர்கள், முதலியவர்களுடன் ஆந்திரர்களையும் சன்



சாஞ்சியிலுள்ள பிரதான ஸ்தூபியின் கிழக்குவாயிலும் கிராதியும்.—பின்னால் காணப்படுவது சிறிய ஸ்தூபி

மார்க்கச் சட்டத்தைப் பின்பற்றும்படிச் செய்ததாக அசோகர் தன் கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கிறார். ஆகையால் ஆந்திரர்கள் ஒரு காலத்தில் அசோகச் சக்கிரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்டிருந்ததாகவும் அவர் இறக்கும் சம

யத்தில் சுவாதீனம் பெற்றதாகவும் நாம் தீர்மானிக்கலாம். கி. மு. 28-ல் ஆந்திர அரசர் ஒருவர் மகத தேசத்தரசனை கண்வ வமிசத்துக் கடைசி மன்னனைக் கொன்றார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்பிறகு **சதவாஹனர்கள்** அல்லது **சாதகர்ணி வமிசத்தைச்** சேர்ந்தவர்களென்று உரிமை கொண்டாடிய ஆந்திர அரசர்கள் புண்ணிய க்ஷேத்திரமாகிய **நாசிக்** வரையிலும் தங்கள் இராஜ்யத்தைப் பரவச்செய்தார்கள். இதற்குப்பின் இருநூறு அல்லது முன்னூறு வருஷங்களில் ஆந்திரர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொண்டே வந்தார்கள். அவர்



கார்லியிலிருக்கும் குகைக் கோவில்

களுடைய மிகக் கீர்த்திவாய்ந்த அரசனை **கௌதமீ புத்ர ஸ்ரீசாதகர்ணி** சுமார் கி. பி. 120-ல் குஜராத்தை ஆண்ட சாக அரசர்களைத் துரத்திவிட்டு, கோதாவரிப் பிரதேசம் முழுவதுடன், பேரார், மாளவம், கத்தியவார், கூர்ஜ்ஜரம், கொங்கணம் முதலிய நாடுகளையும் அரசாண்டார். இதற்குச் சில வருஷங்களுக்குப்பின் அவருடைய குமாரர் **ஸ்ரீ புலுமாயி உஜ்ஜயினியில்** பலம் வாய்ந்த க்ஷேத்திரபதியான **ருத்திரதாமனுடன்** போர்புரிந்து அவனுடைய மகளை மணஞ்செய்துகொண்டார். பல அரசர்

கள் அரசுபுரிந்துவந்த ஆந்திர வமிசம் கி. பி. 225-ல் முடிவுபெற்றது.

ஆந்திரர்களின் வீழ்ச்சி. ஆந்திரர்களின் வீழ்ச்சியினுல் சீர்குலைந்த அவர்களுடைய இராஜ்யத்தின் பல பாகங்களில் அநேக ஜாதியார்கள் ஆதிக்கம் பெற்று பல்வேறு ஜயாபஜயத்துடன் இருந்து வந்தார்கள். முடிவில் அவர்கள் 6-வது நூற்றுண்டின் கடைசியில் திக்விஜயம் செய்துவந்த சாளுக்கியர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டார்கள். இக்கூட்டத்தார்களுள் முக்கியமானவர்கள் மேற்கு தக்காணத்திலிருந்த **அபிராக்**களும், **திரிகூடர்**களும், மத்திய தக்காணத்திலிருந்த **வாகடர்**களும், **கால சூரி**களும், கன்னட ஜில்லாக்களில் இருந்த **கதம்பர்**களும், **கங்கர்களு**மாவர். இவர்களில் வாகடர்கள் விசேஷ முக்கியம் வாய்ந்தவர்கள். ஏனெனில், அவர்கள் விவாக சம்பந்தத்தினுல் குப்தசக்கிரவர்த்திகளின் உறவினர்களாக இருந்ததாலும், தேசத்தின் மத்திய பாகத்தில் இருந்ததாலும், வட இந்திய ஏகாதிபத்தியத்தின் கலையும் நாகரீகமும் இவர்கள் மூலமாகத் தக்காணத்திலும், தென்னுட்டில் பல்லவர்களிடத்திலும் பரவின.

பாதாமி சாளுக்கியர்கள். தக்காணத்தில் பிற்காலத்தில் அரசுபுரிந்த வமிசங்களில் மிகப் பராக்கிரமம் வாய்ந்தவர்கள் வடமேற்கு ராஜபுதனத்திலிருந்து வந்த இராஜபுத்திரர்கள் என்று உரிமை கொண்டாடின சாளுக்கியர்கள். ஆனுல் அவர்களுடைய முன்னேர்கள் முதலில் ஈரான் தேசத்திலிருந்து பஞ்சாபிற்கு வந்த குஜரர்களாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. அக்கூட்டத்தாரின் கிளைவமிசங்கள் அநேகம் குஜராத்திலும் தக்காணத்தின் பல பாகங்களிலும் அவ்வப்பொழுது ஆண்டுவந்திருக்கின்றன. இவ்வமிசத்தில் சுவாதீனம் பெற்ற முதல் அரசனை **புலிகேசி** தக்க சமயம் பார்த்துக் கலகம்செய்து, கி. பி. 550-ல் பீஜபூர் ஜில்லாவிலுள்ள **பாதாமி** அல்லது **வாதாபி** என்ற இடத்தில் தன் தலைநகரை ஸ்தாபித்துக் கொண்டார். அவருடைய பேரன் **இரண்டாவது புலிகேசி** (கி. பி. 608-642) சிறந்த போர்வீரர். அவர் வெகு சீக்கிரமே ஆந்திர ராஜ்யம் முழுவதையும் தன் ஆட்சிக்கு

உட்படுத்தினர். அவர் வெகு சாமர்த்தியம் வாய்ந்த அரசர்; கன்னேசி அரசரான ஹர்ஷர் காலத்திலேயே வாழ்ந்துவந்தவர். ஹர்ஷர் தக்காணத்தின்மீது படையெடுக்க முயற்சி செய்தபொழுது புலிகேசி அவரை விரட்டிவிட்டார். அவ்விருவர்களுடைய இராஜ்யங்களுக்கும் இடையே நர்மதை நதி எல்லையாக இருந்தது.

தக்காணத்தில் ஹ்யூன்த்ஸாங்கின் விஜயம். சீன யாத்ரீகரான ஹ்யூன்த்ஸாங் கி. பி. 641-ல் தக்காணத்திற்கு வந்தார். அக்காலத்தில் **நாசிக்** புலிகேசியின் தலைநகரமாக இருந்தது. அடர்ந்தும், வழிபறிக் கொள்ளைக்காரர்கள் நிரம்பியிருந்ததுமான காட்டுப் பிரதேசங்களில் வழி கண்டுபிடித்துக்கொண்டு அவ்விடத்தை யடைய ஹ்யூன்த்ஸாங் பல கஷ்டங்களை அனுபவித்தார். அப்பிரதேசம் தற்காலத்தில் வழங்கும் மகாராஷ்டிரம் என்ற பெயருடனேயே விளங்கிற்று. ஹ்யூன்த்ஸாங் புலிகேசியின் நலந்தரும் ஆட்சியையும், அவருடைய சிற்றரசர்களின் இராஜபக்தியையும் கண்டு மெச்சினர். புலிகேசி மிக்க புகழ்பெற்றிருந்தமையால், அவருடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்த பாரசீக அரசனை இரண்டாவது குஸ்ரூவும் அவருடைய கீர்த்தியை உணர்ந்திருந்தார். புலிகேசி குஸ்ரூவிற்குத் தூதர்களை அனுப்பியதுமல்லாமல், அவருடன் கடிதப் போக்குவரவும் வைத்துக்கொண்டிருந்தார்.

புலிகேசியின் மரணம். புலிகேசியின் ஜென்மப் பகைவனை பல்லவ அரசன் **நரசிம்மவர்மன்**, சாளுக்கிய சைன்னியத்தின் பெரும்பாகம் வடக்கே சென்றிருந்த சமயத்தில் திடீரென்று சாளுக்கிய ராஜ்யத்தின்மீது படையெடுத்து, 'புறங்காட்டி ஓடும் புலிகேசியின் முதுகின்மீது, வெற்றி என்ற வார்த்தையைப் பலகையின்மீது எழுதுவதுபோல், வரைந்தார்.' வெற்றிபெற்றவர்கள் தெய்வங்கள், பிராம்மணர்கள், சேனையைச் சேராத பொதுமக்கள் இவர்களைக் கொல்லக்கூடாதென்ற மனுதர்ம சாஸ்திர விதிக்கு விரோதமாக, நரசிம்மவர்மன் **வாதாபி** நகரை மிகக் கொடூரமாக நாசமாக்கினர். புலிகேசி யுத்தத்தில் மடிந்துபோனதாகத் தோன்றுகிறது. உடனே தூரத்தி

லிருந்த மாகாணங்கள் சுவாதீனமடையவே, சாளுக்கிய ஏகாதிபத்தியம் சிதறுண்டுபோயிற்று. பன்னிரண்டு வருஷகாலம் தக்காணம் ராஜாங்கமற்ற நிலைமையிலிருந்து, அதன் பிறகு சற்று முன்னேற்றமடைந்தது. கி. பி. 674-ல் சாளுக்கிய அரசனை **விக்கிரமாதித்யன்** பல்லவத் தலைநகராகிய **காஞ்சி**யைக் கைப்பற்றினார். இச் சண்டை இருதிறத்தாருக்கும் ஜயாபஜயத்துடன் கி. பி. 757 வரையில் நடந்தது. அவ்வருஷத்தில் பல வமிசங்களாகப் பிரிந்திருந்த சாளுக்கியர்களை ராஷ்டிரகூடர்கள் தோற்கடித்தார்கள்.

ராஷ்டிரகூடர்கள். சாளுக்கியர்களை கி. பி. 757-ல் தோற்கடித்த ராஷ்டிரகூடர்கள், ஆந்திரர்களின் கீழ் தக்காணத்தின் ஒரு பாகத்தைக் கப்பம் செலுத்தி ஆண்டு வந்த சில பிரபுக்களின் சந்ததியார்கள். தங்களுடைய முன்னோர்களைப் போலவே அவர்களும் தங்கள் தேசத்திற்கடுத்துள்ள நாடுகளுடன் சண்டையிடுவதில் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைக் கழித்துவந்தனர். முற்காலத்து ராஷ்டிரகூட அரசர்களில் ஒருவரான **முதல் கிருஷ்ணர் எல்லோராவில்** கைலாச ஆலயத்தைக் கட்டினார். இக்கோவில், மலைச்சாரலில் ஒரு பெரிய கற்பாறையை வெட்டியெடுத்து, அதைக் கோவில் உருவமாகக் குடைந்து, சித்திரங்களால் அலங்கரித்து நிறுவப்பட்டது. இது இந்தியாவிலுள்ள கட்டட விநோதங்களில் ஒன்றாகும். ராஷ்டிரகூட அரசர்களில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர் **அமோகவர்ஷர்** (கி. பி. 815-877) அல்லது **வல்லபராய்** என்றும் சொல்லப்படுபவர். ராஷ்டிரகூட இராஜ்யம் மிகச் செல்வாக்குடன் இருந்தகாலத்தில் மேற்கு சமுத்திரக் கரையிலிருந்து கிழக்கு சமுத்திரக் கரை வரையில் வியாபித்துச் செல்வம் நிறைந்தும் முன்னேற்றமடைந்தும் இருந்தது. இதில் தற்காலத்திய பம்பாய் மாகாணத்தின் பெரும்பாகம் அடங்கியிருந்தது. அரேபிய யாத்ரீகர்களும், வர்த்தகர்களும் இந்நாட்டிற்கு விஜயம் செய்தார்கள். மேற்குக்கரைத் துறைமுகங்களிலிருந்தவர்கள் பாரஸீக வளைகுடாவையடுத்த நாடுகளிலிருந்த ஜனங்களுடனும், சிந்துபிரதேசத்து அரேபியர்




எல்லோராவில் கற்பாறையைக் குடைந்து அமைத்திருக்கும் கைலாச ஆலயம் (சுமார் கி. பி. 760)

களுடனும், லாபகரமாக வியாபாரம் செய்துவந்தார்கள். ராஷ்டிரகூடர்கள் கி. பி. 973-ல் தோற்கடிக்கப்பட்டார்கள்.


திரும்பவும் ஆதிக்கம்பெற்ற கல்யாணி சாளுக்கியர்கள். தக்காணம் கி. பி. 973 முதல் சுமார் கி. பி. 1200 வரையில் கல்யாணி என்னும் நகரைத் தலைநகராகக் கொண்ட புதிய சாளுக்கிய வமிசத்தின் ஒரு கிளையினரால் ஆளப்பட்டு வந்தது. இவ்வமிசத்தில் மிகப் புகழ்பெற்ற அரசர் கி. பி. 1076 முதல் 1126 வரையில் அரசாண்டுவந்த **விக்கிரமாதித்யன்.** அவர் சோழ பல்லவ விரோதிகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார்.

ஹோயசாலர்கள். ஹோயசாலர்கள் மைசூரில் வசித்துவந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய தலைநகரம் தற்காலத்தில் **ஹளேபீட்** என்று சொல்லப்பட்ட **துவார சமுத்திரம்.** இவ்வமிசத்தின் முதல் அரசரான **பிட்டிகர்** ஒரு பெரிய வெற்றிவீரர். அவர் ஜைனமதத்தில் மிகப் பற்றுள்ளவர். அவர் சண்டையில் நாசமாக்கப்பட்ட பல ஜைன ஆலயங்களைப் புதுப்பித்தார். ஆனால் அவருக்குப் பின்வந்த **விஷ்ணுவர்த்தன**ரோ வைஷ்ணவ மதாசாரியாரும், சிறந்த தத்வ ஞானியுமான **ராமானுஜரின்** போதனையினால் வைஷ்ணவரானார். அவர் ஹளேபீட், பேலூர் என்ற இடங்களில் புதிய கட்டடக் கலைமுறையில் மிக நேர்த்தியாயும் புகழ்வாய்ந்தும் உள்ள கோவில்களைக் கட்டினார்.

யாதவர்கள். நிஜாம் ராஜ்யத்தில் **தேவகிரி** அல்லது **தௌலதாபாத்** என்ற இடத்தில் இருந்த யாதவர்கள் ஹோயசாலர்களிடம் பகைமைகொண்டிருந்தார்கள். இவ்விரு வமிசங்கள் முகம்மதிய படையெழுச்சிகளால் சீர்குலைந்துபோயின. கி. பி. 1294-ல் டில்லி சுல்தானின் மருமகனாகிய **அல்லாஉத்தீனும்,** அவர் பட்டத்திற்கு வந்தபிறகு, கி. பி. 1310-ல் அவருடைய தளகர்த்தர் **மலிக் கபூரும்,** இந்நாட்டின்மீது படையெடுத்துச் சூறையாடி தலைநகரைக் கொள்ளையிட்டனர். கி. பி. 1318-ல் கலகம் செய்த **ஹர்பாலன்** (யாதவ அரசனாகிய இராமச்சந்திரனின் மாப்பிள்ளை) உயிருடன் தோலுரிக்கப்



ஹளேபீடில் உள்ள ஹோயசாலேசுவர ஆலயத்தின்பேரில் உள்ள
செதுக்குச் சித்திரங்கள் (12-வது நூற்றூண்டு)



ஆபூ மலையிலுள்ள விமலசகா கோவிலில் வெள்ளைப் பளிங்குக் கல்லினால் கட்டப்பட்ட மேல்தளம் (கி. பி. 1031)

பட்டான். ஹளேபீட் முகம்மத் பின் துக்ளக்கால் கி. பி. 1327-ல் அழிக்கப்பட்டது.

அத்தியாயம் 9

தென்னிந்தியாவில் தமிழ் இராஜ்யங்கள்

தமிழ் நாடு. திராவிட நாடு அல்லது தமிழ் நாடு கிருஷ்ண நதிக்குத் தெற்கே இருக்கிறது. இந்நாட்டிற்குச் சொந்தமானதும் தனிமை வாய்ந்ததுமான நாகரீகமும் இலக்கியமும் இருக்கின்றன. தக்காணத்து மலைகளாலும் காடுகளாலும் பிரிக்கப்பட்ட வட நாட்டின் ஆரிய பாஷையினின்று இந்நாட்டின் பாஷைகள் முற்றிலும் வேறுபட்டிருக்கின்றன. ஆதிகாலத்தில் இங்கே சேர சோழ பாண்டிய நாடுகள் என்ற மூன்று இராஜ்யங்கள் முதன்மை பெற்றிருந்தன. தமிழ் நாடு கடல் கடந்து வியாபாரம்செய்து வந்ததால் செல்வம் மிகுந்திருந்தது. மேற்கு தேசத்தார்கள் மிக ஆவலுடன் விரும்பிய வாசனைத் திரவியங்கள், மிளகு, பஞ்சாடைகள், உயர்ந்த கற்கள், முத்துக்கள், தங்கம் இவைகள் இங்கு கிடைக்கப்பெற்றன. ஏறக்குறைய கிருஸ்து ஆப்தத்தின் ஆரம்ப காலத்தில் அநேக தமிழ்ச் சங்கங்கள் தோன்றின. இவைகளில் முதன்மை வாய்ந்தது பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையில் இருந்ததாகும். தமிழ் பாஷையிலுள்ள மத நூல்களில் மிகப் பெயர்பெற்றது, சுமார் கி. பி. 200-ல் ஜீவித்திருந்த **திருவள்ளுவர்** என்ற எளிய நெசவுக்காரர் எழுதிய **திருக்குறள்.** தமிழ்ச் செய்யுள்களில் அநேகம் பல்வேறு மதப்பிரிவுகளின் தலைவர்கள் தங்கள் சீடர்களுக்காக இயற்றிய தோத்திரப் பாடல்களாகும். பத்தாவது நூற்றாண்டில் வாழ்ந்த **மாணிக்கவாசகர்** சிவனைக்குறித்த தோத்திரங்களாகிய **திருவாசகத்தைப்** பாடினர். பன்னிரண்டு ஆழ்வார்களும் இம்மாதிரியே விஷ்ணுவைக்குறித்து நேர்த்தியான தோத்திரங்களை எழுதியிருக்கிறார்கள். ரோம் ஏகாதிபத்தியத்துடன் செய்துவந்த வியாபாரத்தினால் தமிழர்கள் செல்வந்தர்களானார்கள். அநேக ரோம நாணயங்கள் தமிழ்

நாட்டில் கண்டெடுக்கப்பட்டிருப்பதால், மதுரை முதலிய இடங்களில் ரோமர்கள் குடியேறியிருந்ததாக நினைக்க இடமுண்டு. தமிழ் அரசர்கள் வைத்திருந்த பெரிய கப்பற்படைகள் வங்காளவிரிகுடாவைக் கடந்து, சிம்மளம், ஜாவா, சுமத்ரா, தூரகிழக்கு நாடுகள் இவைகளுடன் வியாபாரம் செய்து வந்தன.

பல்லவர்கள். பல்லவர்கள் கி. பி. 600 முதல் 750 வரையில் தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். அவர்களுடைய ராஜ்யம் தற்காலத்திய வட தென் ஆற்காடு ஜில்லாக்கள், செங்கல்பட்டு, திருச்சினுப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்கள் இவைகளில் வியாபித்திருந்தது. சுமார் கி. பி. 350-ல் இந்த அழையா விருந்தாளிகள் சோழநாட்டின் மத்தியப் பிரதேசமாகிய **காஞ்சி** எனப்படும் காஞ்சீபுரத்தில் நிலைபெற்றிருந்தார்கள். இவ்வமிசத்தில் நமக்கு நிச்சயமாகத் தெரியவரும் முதல் அரசர் **சிம்மவிஷ்ணுபல்லவர்** (கி. பி. 550). அவர் சேர சோழ பாண்டிய அரசர்களையும் சிம்மள அரசர்களையும் வென்றதாகப் பெருமைகொண்டார்.

சாளுக்கியர்களுடன் யுத்தங்கள். பல்லவர்கள் சாளுக்கியர்களுடன் கடுமையாகப் போர்புரிந்து வந்தார்கள். இச்சண்டைகளில் இருதிறத்தாரும் ஒருவர் மற்றொருவரின் தலைநகரைக் கொள்ளையிட்டார்கள். கி. பி. 610-ல் சாளுக்கிய அரசனை இரண்டாவது புலிகேசி கோதாவரி கிருஷ்ண நதிகளுக்கு மத்தியிலுள்ள வெங்கி நாட்டைப் பல்லவர்களிடமிருந்து கைப்பற்றினார். ஆனால் கி. பி. 642-ல் பல்லவ அரசனை நரசிம்மவர்மன் புலிகேசியைக் கொன்று, அவருடைய தலைநகரை இடித்துத் தகர்த்துத் தரையோடு தரையாக்கினார்.

ஹ்யூன்த்ஸாங்கின் வருகை. ஹ்யூன்த்ஸாங் பல்லவர்களின் தலைநகராகிய **காஞ்சிக்கு** கி. பி. 640-ல் வந்தார். அங்கு வழங்கிவந்த பாஷை வட இந்திய பாஷையினின்றும் வேறுபட்டிருந்ததாகவும், மக்கள் தைரியசாலிகளாயும், நம்பிக்கையுள்ளவர்களாயும், பொதுநலப் பிரியர்களாகவும், கல்வியை விரும்பியவர்களாகவும் இருந்தார்கள் என்று அவர் சொல்லுகிறார். நிலம் செழிப்பு


வாய்ந்து நன்கு பயிரிடப்பட்டு வந்தது என்றும், ஆனால் சோழ நாடோ மனிதசஞ்சாரமற்றும், காடடர்ந்தும், கொள்ளைக்கூட்டத்தாரின் இருப்பிடமாகவும் இருந்தது என்றும் கூறுகிறார்.

பல்லவர்களின் வீழ்ச்சி. இரண்டாவது புலிகேசி தோல்வியடைந்த பிறகு, சாளுக்கியர்கள் பதின்மூன்று வருஷகாலம் கீழ்ப்பட்ட நிலைமையில் இருந்தார்கள். இக்காலத்தில் பல்லவ அரசர் தன் இராஜ்யத்தைத் தக்காணத்தில் வெகுதூரம் பரவச்செய்து தென்னிந்தியாவில் முதன்மை பெற்றார். தங்கள் ஆதிக்கத்தை கி. பி. 740-ல் திரும்பவும் பெற்ற சாளுக்கியர்கள் காஞ்சியைக் கைப்பற்றி, ஏராளமான தங்கம், ரத்தினங்கள், யானைகள் இவைகளைக் கொள்ளையடித்துக் கொண்டுபோனார்கள். இதனால் பல்லவர்களுடைய பலம் மிகவும் குறைந்துபோனதல்லாமல் சிறிதுகாலத்திற்குப்பின் அவர்களுடைய வமிசமும் அழிந்துபோயிற்று.

பல்லவர்களின் நாகரீம். பல்லவர்கள் முதலில் பௌத்தமதம், ஜைனமதம் இவைகளிரண்டையும் ஆதரித்து வந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் அவர்கள் சைவமதத்தைத் தழுவினார்கள். அவர்களுடைய தலைநகராகிய காஞ்சி அநேக நேர்த்தியான கோவில்களுடன் கூடிய ஓர் புண்ணிய க்ஷேத்திரமாகவும், பெயர்பெற்ற கல்வி ஸ்தலமாகவும் இருந்தது. பல்லவச் சிற்பக் கட்டடங்களில் மிகவும் விசேஷமானவை சென்னைக்கருகில் மாமல்லபுரத்தில் காணப்படும் '**எழு கோவில்கள்.**' இவை கி. பி. 625 முதல் 645 வரையில் அரசாண்ட நரசிம்மவர்மனால் கட்டப்பட்டன. எல்லோராவில் இருக்கும் கைலாச ஆலயத்தைப் போலவே இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய குண்டுக்கல்லிலிருந்து குடையப்பட்டவை. இதர கற்களின்மேல் நேர்த்தியான கல்வெட்டுச் சித்திரங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் மிகவும் மேன்மையானது அர்ஜுனன் தபஸைக் குறிக்கும் சித்திரமாகும்.

சோழர்களின் ஆரம்ப வரலாறு. பல்லவர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு சோழர்களே தென்னிந்தியாவில்

முதன்மை பெற்றார்கள். இப்புதிய சோழ வமிசத்திய முதலாவது அரசர் பல்லவர்களை ஜயித்த **ஆத்தியன்** என்பவர். ஆனால் சோழ அரசர்களில் மிகச் சிறப்புவாய்ந்த அரசர் **ராஜராஜராவர்.** இவர் கி. பி. 985-ல் பட்டத்திற்கு வந்தார். மதுரை, திருநெல்வேலி நீங்கலாக தற்காலத்து சென்னை மாகாணம் முழுவதையும் அவர் ஜயித்தார். அவரிடத்தில் பலம் வாய்ந்த கப்பற்படை ஒன்று இருந்தது.



மஹாபலிபுரத்திலுள்ள ஏழு கோவில்களில் ஒன்றாகிய கணேச இரதம்

அதைக்கொண்டு அவர் லக்ஷத்தீவுகளையும், மாலத்தீவுகளையும் தன் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். கி. பி. 1005-ல் அவர் சண்டையை நிறுத்தி, அரசாங்கத்தை அரசகுமாரன் **ராஜேந்திர சோழதேவனிடம்** ஒப்படைத்தார். ராஜேந்திரர் தன் தகப்பனாரைப்போலவே சிறந்த வெற்றி வீரர். அவர் வங்காளத்தையும் பீகாரையும் அரசாண்ட **மஹீபாலரைத்** தோற்கடித்தார். அவர் தன் கப்பற் படையை வங்காள விரிகுடாவைக் கடந்து பர்மாவி


லுள்ள மார்டபனுக்கும், மலேயா தீபகற்பத்திற்கும் போகும்படி அனுப்பினர். கங்கைநதிக் கரையிலுள்ள நாடுகளைப் படையெடுத்து வெற்றிபெற்றதைக் குறித்துக் கொண்டாட ராஜேந்திரர் ஒரு அரண்மனை, பெரிய கோவில், அகன்ற ஏரி இவைகளால் அலங்கரிக்கப்பெற்ற **கங்கைகொண்ட சோழபுரம்** என்ற ஒரு நகரை ஸ்தாபித்தார். பல்லவர்களைப் போலவே சோழர்கள், தங்கள் நாட்டின் வடக்கெல்லையை அடுத்திருந்த தக்காணத்து சாளுக்கியர்களுடன் மிக மும்முரமாகச் சண்டையிட்டு வந்தார்கள். சாளுக்கியர்கள் சோழர்களை கிருஷ்ணாநதிக் கரையில் **கொப்பம்** என்ற இடத்தில் கி. பி. 1052-ல் நடந்த சண்டையில் தோற்கடித்தார்கள்.

சோழர்களின் அரசாட்சி—ஸ்தல சுய ஆட்சி. சோழ அரசர்கள் சட்டங்களை அனுசரித்து அரசாண்டவர்கள். மக்கள் தங்கள் வியவகாரங்களைத் தாங்களே கவனிக்குமாறு அவர்களுக்கு அரசாட்சியில் பங்கு அளித்தார்கள். பெரும்பான்மையாக ஸ்தல சுய ஆட்சி ஜனங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்தார் நிலமாகூலின் ஆறில் ஒரு பாகத்தை வரியாக விதித்தார்கள். இதைத்தவிர, இறக்குமதிகள், சுரங்கங்கள் முதலியனவற்றிற்கும் வரிகள் விதிக்கப்பட்டன. வரிகள் தங்க நாணயங்களிலாவது அல்லது பொருள்களாகவாவது செலுத்தப்பட்டன.

சோழ கலைகள். சோழ அரசர்கள் நேர்த்தியான கட்டடங்களைக் கட்டினவர்கள். அவர்கள் பெரிய ஏரிகளைக் கட்டினார்கள். நீர்பாசன வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டவும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் வெகு அழகான கோவில்களைக் கட்டினார்கள். அக்கோவில்களில் மிகவும் நேர்த்தியானது தஞ்சாவூரிலிருக்கும் பிருஹதீஸ்வரன் கோவிலாகும்.

பாண்டியர்கள்—மார்க்கோ போலோ. சோழர்கள், பல்லவர்கள் இவர்கள் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில், அவர்களுக் குட்பட்ட நிலையிலிருந்த பாண்டியர்கள், சோழர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, பதின்மூன்



மதுரையிலுள்ள ஹிந்து ஆலயம்
(பதினேழாவது நூற்றாண்டின் முற்பகுதி)

ரும் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் முதன்மைபெற்று விளங்கினார்கள். பாண்டிய அரசர்களில் மிகக் கீர்த்தி வாய்ந்தவர் **சுந்தர பாண்டியன்.** இவர் ஹோயசாலர் களைத் தோற்கடித்து தக்ஷிண தீபகல்பம் முழுவதையும் அரசாண்டார். பாண்டியர்களின் தலைநகரம் மிக அழகு வாய்ந்த கோவிலுடன்கூடிய மதுரைமாநகராகும். பெயர்போன வெனிஸ் யாத்திரீகரான **மார்க்கோ போலோ** தாம்பிரபாணி நதி முகத்துவாரத்திலிருந்த **காயல்** துறைமுகத்திற்கு கி. பி. 1288-லும் கி. பி. 1293-லும் வந்திருந்தார். அவர் அது மிகச் சிறப்பு வாய்ந்த பெரிய நகரம் என்றும், அக்காலத்தில் அரசாண்டுவந்த பாண்டிய அரசனிடம் ஏராளமான முத்துக் குவியல்களும், இரத் தினங்களும் இருந்ததாகவும், அப்பாண்டிய அரசர் நியாய மாக அரசாண்டதோடு அன்னியர்கள் தன்னுடைய நாட் டிற்கு வந்து வியாபாரம் செய்ய வசதிகளை யளித்தார் என்றும் கூறியுள்ளார்.

அத்தியாயம் 10

வட இந்தியாவை முகம்மதியர்கள் வென்றது
கி. பி. 1175–1526

முகம்மத் நபியின் வரலாறு. முகம்மதிய மதத்தின் ஆரம்பம் உலக சம்பவங்களில் மிக விசேஷம் வாய்ந்த தொன்றாகும். எவ்வாறு கிருஸ்துவ மதம் ஐரோப்பா வின் சரித்திரத்தை மாற்றியிருக்கிறதோ, அவ்வாறே முகம்மதிய மதம் ஆசியாக் கண்டத்தின் சரித்திரப் போக்கை மாறுபடுத்தியிருக்கிறது. **முகம்மத்** அரேபி யாவில் செங்கடல் கரைக்கு அருகாமையிலுள்ள மெக்கா வில் வசித்துவந்தார். கி. பி. ஏழாவது நூற்றுண்டில் அரேபியா தேசத்தில் வசித்துவந்த பல கூட்டத்தினர் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டும் சிலைகளை வணங் கியும் வந்தார்கள். அப்பொழுது முகம்மது, தான் அரேபியா ஜனங்களை ஒரே கடவுளை வழிபடும்படி திருப்பி யழைப்பதற்காகக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதர் என்று வெளியிட்டார். ஆனால் அவருடைய ஐம்பதாவது

வயது வரையிலும், அவர் குடும்பத்தார்களைத் தவிர இதர ஜனங்கள் அவரைப் பின்பற்றவில்லை. மெக்கா நகரத்து ஜனங்கள் அவர்மீது மிக்க விரோதங்கொண்டிருந்தமை யால், அவர் சமீபத்திலிருந்த **மெடினு** என்னும் நகரத் துக்குச் சென்றார். மெடினுவிற்குபோன வருஷமாகிய கி. பி. 622 **'ஓடிச்சென்ற வருஷம்'** அல்லது **'ஹிஜிரா'** என்றழைக்கப்படுகிறது. இவ்வருஷமே முகம்மதிய ஆப் தத்தின் ஆரம்பமாகும். இதன் பிறகு அரேபிய மக்க ளின் மனோபாவம் மாறுதலடைந்தது. அதன் பயனுக கி. பி. 632-ல் அவர் இறக்கும் காலத்தில் அரேபியா தேசத்து மக்கள் அனைவரும் அவரைத் தேவதூதரென் றும், கடவுளாலேயே தங்கள் இனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் என்றும் ஏற்றுக்கொண்டார்கள். அவருக்குப் பின்வந்த **கலீபாக்கள்** அல்லது **கலீப்**களின் தலைமையின்கீழ் அரேபியர்கள் சுற்றுப்புற நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று முறையே ஆசியா மைன ரிலும், பாரசிகத்திலும் இருந்த பிஸான்டைன், சஸ்ஸே னியன் ஏகாதிபத்தியங்களை அழித்தார்கள். முகம்மது நபி இறந்து நூறு வருஷங்களுக்குள் அரேபியர்கள் மேற்கே எகிப்து, வட ஆப்ரிக்கா, ஸ்பெயின் முதலான தேசங்களையும் கிழக்கே துருக்கிஸ்தானத்தையும் கைப் பற்றினார்கள்.

பாக்தாத் கலீபேட். முதல் வெற்றி வெள்ளம் தணிந்த வுடன், அரேபியர்கள் வெகு தூரத்திலிருந்த அலெக் ஸாண்டிரியா, டமாஸ்கஸ், ஸ்பெயின் தேசத்து கர்டோவா முதலிய இடங்களில் குடியேறினார்கள். இந்நாடுகளின் தலைநகரங்களில் மிக முக்கியம் வாய்ந்தது **பாக்தாத்.** இங்கு கி. பி. 781 முதல் 805 வரையில் **ஹரூன்-அல்-ரஷீத்** என்ற கலீபா அரசாண்டு வந்தார். கி. பி. 711-ல் சிந்து தேசத்து அரசன் அரேபியர்களுடைய கப்பல்களில் ஒன் றைக் கைப்பற்றியதால், அவர்களுக்குக் கோபம் உண்டா யிற்று. அவர்கள் **முகம்மத் பின் காஸீமின்** தலைமையின் கீழ் அனுப்பிய படை நாளடைவில் அந்த தேசத்தை ஜயித்தபோதிலும், அதற்கப்பால் ராஜபுதன பாலைவன மும் பலம் வாய்ந்த பரிஹர்கள் ராஜ்யமான கன்னேசியும்

இருந்ததால், அவர்கள் அந்த திசையில் முன்னேற முடியவில்லை. அவர்கள் தங்களுடன் வியாபாரம் செய்து வந்த குஜராத், தக்காணம் இந்த நாடுகளிலிருந்த இந்து அரசர்களிடம் மிகச் சிநேக பாவத்துடன் இருந்தார்கள்.

துருக்கியர்கள். சிறிது காலத்திற்குப் பிறகு முகம்மதிய மதம் மத்திய ஆசியாவில் வசித்துவந்த முரட்டு நாடோடி ஜாதியார்களான துருக்கியர்கள், மங்கோலியர்கள் இவர்களிடையே பரவியது. இவர்கள் கொடூரமாயும் சண்டையில் பிரியங்கொண்டும், கபடமில்லாமலும், மதவைராக்கியம் மிகுந்தும், எல்லா மலைவாசிகளைப்போல் திடகாத்திரர்களாகவும், சிறந்த போர்வீரர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் தங்களைவிட நாகரீகத்தில் அதிக மேம்பாடடைந்திருந்த சமவெளிப் பிரதேசவாசிகளை எளிதில் தோற்கடித்தார்கள். கி. பி. 1258-ல் மங்கோலியர்கள் பாக்தாத்தைக் கொள்ளையிட்டு கலீபாவைக் கொன்றார்கள். பத்தாவது நூற்றாண்டில் துருக்கி தேசத்து அடிமை ஒருவன் காபூலுக்கும் காண்டஹாருக்கும் மத்தியில் கஜினியில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தான். அவனுடைய பரம்பரையில் வந்த நான்காவது அரசன் **ஸபக்டிஜின்.** அவனுடைய குமாரர்தான் **கஜினி முகம்மது** (கி. பி. 967-ல் பிறந்தார். கி. பி. 997-ல் பட்டத்திற்கு வந்தார். கி. பி. 1030-ல் இறந்தார்). **முகம்மது கஜினி** இந்தியாவின்மீது பதினேழுதடவை படையெடுத்துக் கொள்ளையிட்ட விபரங்களை ஏழாவது அத்தியாயத்தில் நாம் படித்திருக்கிறோம். கஜினி வமிசம் க்ஷீணித்துப் போனபின் **கஜினிக்கும் ஹீரட்டிற்கும்** மத்தியிலுள்ள மலைப்பிரதேசத்தில் **கோர்** ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நாட்டார் கி. பி. 1150-ல் கஜினியைக் கைப்பற்றி அதை நாசமாக்கினார்கள். அதன் பின் **முகம்மத் கோரி**யும் அடிமையாயிருந்த அவர் படைத்தலைவன் **குதுப்-உத்தீனும்** பெஷாவர் முதல் வங்காளவிரிகுடா வரையில் வட இந்தியா முழுவதையும் கொள்ளையிட்டதை நாம் அறிவோம்.

டில்லி அடிமை அரசர்கள் (1206–1290)

(1) **குதுப்-உத்தின் ஐபக்** *(1206-1211).* குதுப்-உத்தின் ஐபக் முதலில் ஒரு துருக்கி அடிமையாகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர் முதலில் நிஷாபூரில் ஒரு பணக்கார வியாபாரிக்குப் பாத்தியப்பட்டிருந்தார். அவருடைய எஜமானர் சிறுவயதிலேயே அவரிடத்தில் காணப்பட்ட சாமர்த்தியங்களை உணர்ந்து அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார். இவ்வியாபாரி இறந்தவுடன் குதுப்-உத்தின் முகம்மத் கோரியின் கைவசமானார்.



டில்லியிலுள்ள குத்ப் மினார் (பதின்மூன்றாவது நூற்றாண்டின் முற்பாகம்)


ஐபக் தன் புதிய எஜமானரின் மதிப்பையும் அன்பையும் பெற்று, அவருடைய நம்பிக்கை வாய்ந்த தளகர்த்தனும் மந்திரியுமான உயர்ந்த பதவிக்கு வந்தார். ஐபக்கின் அரிய சேவைகளை மெச்சி முகம்மது கோரி அவருக்கு 'முகம்மதிய மதத்தின் துருவ நக்ஷத்திரம்' என்று பொருள்படும்படி **'குத்ப்-உத்தீன்'** என்ற பட்டப் பெயரை அளித்தார். முகம்மது கோரியை கி. பி. 1206-ல் மதவைராக்

கியம் மிகுந்த ஒருவன் கொலை செய்யவே, குத்ப் உத்தீன் ஐபக் டில்லியின் முதல் சுல்தாகை சிம்மாசனமேறினர்.

(2) **ஸுல்தான் ஷம்ஸுதின் அல்தும்ஷ் (1211-1236).** குதப்-உத்தீன் கி. பி. 1211-ல் குதிரையின்மீது சவாரி செய்கையில் கீழே விழுந்து இறக்கவே, அடிமையாக வாழ்க்கையை ஆரம்பித்தவரும் தன்னுடைய சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் பீகாரின் ராஜப்பிரதிநிதியாக உத்தியோக உயர்வு பெற்றவருமான மற்ெருரு துருக்கி சேனைத்தலைவரைப் பிரபுக்கள் ஸுல்தாகை தேர்ந்தெடுத்தார்கள். **இல் துத் மிஷ்** என்று சில சமயங்களில் அழைக்கப்பட்ட **அல்தும்ஷ்** டில்லியில் **குத்ப் மசூதி**யைப் பூர்த்தி செய்தார். இம்மசூதி பெரும்பாலும் பாழடைந்த இந்து கோயில்களின் சாமான்களைக்கொண்டு கட்டப்பட்டது. மேலும் அவர் மிக வியப்பை யளிப்பதும் விசித்திரமுமான செதுக்குச் சித்திரங்களுடன் கூடிய **குத்ப் மினரை**யும் கட்டினர். அது 238 அடி உயர்ந்தும், வெளிப்புறங்களில் பட்டை தீர்க்கப்பட்டும், வரவர உச்சிவரையில் குறுகிக்கொண்டே போவதுமாகும். அதன் கீழ் அறைகள் மணற்கற்களாலும், மேல் மாடிகள் வெள்ளைப் பளிங்குக் கற்களிலுைம் கட்டப்பட்டிருக்கின்றன. அது அநேக மைல்கள் தூரத்திலிருந்தும் காணப்படுகிறது.

அல்தும்ஷை கி. பி. 1226-ல் இந்தியாவின் ஸுல்தாகை கலீபா முறைப்படி அங்கீகாரம் செய்தார். அல்தும்ஷ் அரசாண்ட காலத்தில் **செங்கிஸ்கானின்** தலைமையின் கீழ் மங்கோலிய கூட்டத்தினர் இந்தியாவின்மீது வெள்ளம்போல் பாய இருந்தனர். ஆனல் அதிர்ஷ்டவசமாக அவர்கள் பெஷாவரை அடைந்த உடன் வந்த வழியே திரும்பி, பிறகு மேற்கு நோக்கிச் சென்றூர்கள்.

(3) **சுல்தாஞ ரஜியா உத்தீன் (1236-1240).** ஸுல்தான் அல்தும்ஷ், வழக்கத்திற்கு மாருகத் தன் மகள் ரஜியா உத்தீனைத் தனக்குப்பின் பட்டத்திற்கு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அவர் பெருமை வாய்ந்தும் புத்திகூர்மையுள்ளவராகவும், நியாயமாகவும், தர்ம சிந்தனையுள்ளவராகவும் இருந்தாரென்றும், கல்விமான்களை



அலதும்ஷின் சமாதி

ஆதரித்தும், நியாயம் வழங்கியும், பிரஜைகளின் நலத்தையே உள்ளத்தில் கொண்டும், யுத்த சாமர்த்தியம் வாய்ந்தும், அரசனுக்கு அவசியமான எல்லா யோக்யதைகளையும் அருங்குணங்களையும் பெற்றும் அரசாண்டுவந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கு உதவியாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன் துருக்கித் தலைவர் ஒருவரை அவர் மணந்தார். முழுக்கவசம் அணிந்து யானைமீது ஏறிக்கொண்டு தானே நேராகத் தலைமையை வகித்துத் தன்னுடைய படைகளை நடத்தினர். ஆனால் அவர்மீது பொறாமைகொண்டிருந்த **'நாற்பதின்மர்கள்'** என்று சொல்லப்பட்ட துருக்கித் தலைவர்களுக்கு அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை. மேலும் அவர்கள் ஒரு பெண் தங்களை அடக்கி அரசாளுவதை முற்றிலும் வெறுத்தார்கள். ஆகையால் முடிவில் அவர் ராஜ்யத்தைவிட்டு ஓட நேரிடவே, அவரும் அவர் கணவரும் சில குடியானவர்களால் கொலையுண்டனர்.

(4) **கியாஸ்-உத்தீன் பால்பன் (1266-1287).** சுல்தானு ரஜியா இறந்த பிறகு கொஞ்சகாலம் மிகுந்த குழப்பம் மேலிட்டிருந்தது. அக்காலத்தில் நாட்டில் அதிகாரம் உண்மையாக 'நாற்பதின்மர்'களிடத்திலிருந்ததாகையால், அவர்கள் பொம்மை அரசர்களை சிம்மாசனத்திலேற்றியும் பிறகு அவர்களை வீழ்த்தியும் வந்தார்கள். கடைசியில் எளிய வமிசத்தில் பிறந்தும், அடிமையாகவும், நீர் சுமப்போனாகவும் இருந்து ஒரு மாகாணத்தின் கவர்னர் பதவிக்கு உயர்த்தப்பட்ட கியாஸ்-உத்தீன் பால்பன் சுல்தானுகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் வயோதிகராயிருந்தபோதிலும், கலகத்தையும் கொடுங்கோல் ஆட்சியையும் மிகக் கடுமையுடனும் கண்டிப்புடனும் அடக்கினர். கலகக்காரர்கள் கழுவிலேற்றப்பட்டோ அல்லது யானைகளால் மிதிக்கப்பட்டோ கொல்லப்பட்டார்கள். பால்பன் கடுமையான அரசர்; ஆனால் நியாய சுபாவம் வாய்ந்தவர்.

மங்கோலியர்கள் இந்தியாவின்மீது படையெடுக்காவண்ணம், அவர் வடமேற்கு எல்லைகளைக் காவல்புரிய ஏற்பாடு செய்தார். அங்கு வசித்த மூர்க்க ஜாதியார்க

ளைப் பயப்படுத்தும் வண்ணம் காடுகளை அழித்துப் பாதை கள்போட ஏற்பாடுசெய்தார். தன் ஏகபுத்திரன் மங்கோலியப் படையாளர்களுடன் நடந்த சண்டையில் இறந்தானென்ற செய்தியைக் கேட்ட சிறிதுகாலத்திற்குள் அவர் தன்னுடைய எண்பதாவது வயதில் புத்திரசோகத்தால் உயிர்துறந்தார்.

கில்ஜீ வமிசம் (1290–1320)

ஜலால் உத்தீன் கில்ஜி (1290-1296). பால்பன் இறந்த பின் மறுபடியும் நாட்டில் குழப்பமேற்பட்டது. முடிவில் பிரபுக்கள் கில்ஜி வமிசத்தைச் சேர்ந்தவரும் எழுபது வயதிற்கு மேற்பட்டவருமான ஒரு வயோதிகருக்குப் பட்டம் கட்டினார்கள். விருத்தாப்பியரான அவர் காலத்தில் நடந்த யுத்தங்களை யெல்லாம் அவர் தமையன் மகனை **அல்லா உத்தீனே** நடத்திவந்தார். அவர் மிகப் பெரிய மங்கோலியப் படையெழுச்சியைத் தடுத்தார். இதன் பிறகு மங்கோலியர்கள் டில்லிக்கருகில் குடியேறினார்கள். ஜலாலுதீனின் அரசாட்சியின் பின் பகுதியில் அல்லா உத்தீன் தக்கணத்தின்மீது படையெடுத்து மிகப் புகழ்பெற்றார். அவர் 700 மைல் தூரம் சேனைகளை நடத்திச் சென்று பேராரை அடைந்து, அங்கு அரசாண்டு வந்த யாதவ அரசரான **ராமச்சந்திரரைப்** பணியும்படி செய்தார். 1296-ல் அவர் ஏராளமான கொள்ளைப் பொருள்களுடன் டில்லிக்குத் திரும்பிவந்தார். வயதுசென்ற அரசர் வெற்றி வாகையுடன் திரும்பிவரும் தனது தமையன் மகனை எதிர்கொண்டழைக்கச் சென்றார். அவர் அல்லா உத்தீனின் கையைப் பற்றியிருக்கையில், அல்லா உத்தீன் மிகக் கள்ளத்தனமாய் தன்னுடைய ஆட்களில் ஒருவனைக் கொண்டு அவரைக் குத்திக் கொலை செய்வித்தார்.

அல்லா உத்தீன் கில்ஜி (1296-1315). அல்லா உத்தீன் தன் சிற்றப்பனின் தலையை ஈட்டிமுனையில் சொருகிக் கொண்டு டில்லியை நோக்கி வந்தார். பிரபுக்களின் உதவியைப் பெறும்பொருட்டு, தான் கொண்டுவந்த கொள்ளைப்பொருள்களிலிருந்து அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தார். அல்லா உத்தீன் மிக சாமர்த்தியம் வாய்ந்தவர்;

ஆனால் நேர்மையில்லாதவர். அவர் ஐந்து மங்கோலியப் படையெழுச்சிகளைத் தடுத்தார். டில்லியில் குடியேறி யிருந்த எல்லா மங்கோலியர்களையும் கி. பி. 1297-ல் வாளுக் கிரையாக்கினர். **சித்தூர், ரத்னம்பர்** இவ்விரண்டு ராஜ புத்திரக் கோட்டைகளை முற்றுகையிட்டார். முகம்மதி யர்களால் பல தடவைகளில் முற்றுகையிடப்பட்ட சித்தூர் கோட்டையை முதன் முதலாக முற்றுகை யிட்டவர் அல்லா உத்தீன். அவர் கோட்டையைத் தாக் கிய சமயத்தில் ராஜபுத்திரப் பெண்கள் தீக்குளித்துத் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டார்கள். அல்லா உத் தீன் மாளவம், குஜரத் இவ்விரு நாடுகளையும் கைப்பற்றி னர். தாழ்ந்த குலத்தில் பிறந்து அல்லா உத்தீனின் அன்பைப்பெற்ற **மலிக்கபூர்** கி. பி. 1302 முதல் 1311 வரையில் தென்னிந்தியாவின் உட்பிரதேசங்களின்மீது மிக அபூர்வமான முறையில் படையெடுத்துக் கொள்ளை யிட்டார். இக்காலத்தில்தான் அவர் தேவகிரியைத் தலை நகராகக்கொண்ட **யாதவ ராஜ்யத்தை**யும், **ஹோயசால ராஜ்யமாகிய மைசூரை**யும் வென்றார். **தென் மதுரை** ஆலயத்தையும் சூறையாடி, 300 யானைகள், 20,000 குதிரை கள், 2,750 ராத்தல் தங்கம் முதலியவைகளுடனும், மூட்டை மூட்டையாக இதர கொள்ளைப்பொருள்களுட னும் டில்லிக்குத் திரும்பினர். இந்துக்களை நசுக்கும் உத்தேசங்கொண்டு அல்லா உத்தீன் பிரத்யேகமாய்ப் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்துக்கள் குதிரை மீது சவாரி செய்யக்கூடாது. யுத்த ஆயுதங்களையும் வைத்துக்கொள்ளக்கூடாது. மதுபானத்தைப் பற்றியும், குர்ரான் விதிகளை மீறிய செயல்களைக் குறித்தும், கண் டிப்பான உத்திரவுகளைப் பிறப்பித்து, கட்டுக்கடங்காத பிரபுக்களை அடக்கியாள முயற்சி செய்தார். தன் சட்ட திட்டங்களை அனுசரிக்க வற்புறுத்தும் பொருட்டு, துப் பறிவோர் பலரை அமர்த்தி யிருந்தார். உலகம் முழு வதையுமே ஜயிக்கவேண்டுமென்று மிக்க ஆர்வத்துடன் மனப்பால் குடித்துக்கொண்டும், தன்னை 'இரண்டாவது அலெக்ஸாண்டர்' என்று சொல்லிக்கொண்டும் இருந்தார். அவர் டில்லியில் வெகு நேர்த்தியான **அலெய்தர்வாஜா**


வைக் கட்டினர். 'இந்துஸ்தானத்தின் கிளி' என்றழைக் கப்பட்ட **அமீர் குஸ்ரு** என்னும் பாரசீகக் கவி அவர் சமஸ்தானத்திலிருந்தார். அவர் கி. பி. 1315-ல் இறந் தார்; ஒருகால் அவர் கொலையுண்டும் இருக்கலாம். அவ ருக்குப்பின் அவர் குமாரர் **குத்ப்-உத்தீன்-முபாரக்** சிம் மாசனமேறினர். அவர் கலகம் செய்த தேவகிரி அரச ஞன **ஹர்பாலனை** மிக்க குரூரமாக உயிருடன் தோலை உரித்துச் சித்திரவதை செய்தார். அவர் 1318-ல் கொலை யுண்டார்.

துக்ளக் வமிசம் (1321–1388)

கியாஸ் உத்தீன் துக்ளக் (1321-1325). மூன்று வருஷ கால குழப்பத்திற்குப் பிறகு, பிரபுக்கள் துக்ளக் வமிசத் தைச் சேர்ந்தவரும் துக்ளக் ஷா என்றழைக்கப்பட்ட வருமான கியாஸ் உத்தீனைச் சிம்மாசனத்தி லமர்த்தினர் கள். கியாஸ் உத்தீன் மிகுந்த சாமர்த்தியம் வாய்ந்த தளகர்த்தர். அவர் தனக்குக்கீழ் வேலைபார்த்துவந்த மாகாண கவர்னர்களை அடக்கி யாண்டுவந்தார். அவருக் குப்பின் சுல்தானுக வந்த அவருடைய குமாரர் முகம்மத் அவரைக் கொலைசெய்துவிட்டதாகக் கருதப்படுகிறது.

முகம்மத் துக்ளக் (1325-1351). சரித்திரத்தில் அபூர் வமாகக் கால் நூற்றுண்டிற்குமேல் அரசாண்டு வந்த முகம்மத் துக்ளக் சாதாரணமானவரல்ல. டில்லி சமஸ் தானத்தில் 1342 முதல் 1347 வரையில் இருந்த **இபன்-பதூதா** என்பவரால் இவரைப்பற்றி எழுதப்பட்ட விபர மான குறிப்புகள் நமக்குக் கிடைத்திருப்பது நமது அதிர்ஷ்டமேயாகும். முகம்மத் துக்ளக் மிகுந்த புத்தி கூர்மையுள்ளவர்; ஆனல் விபரீதப் போக்குடையவர். அவர் தன் பிரஜைகளின் கலகச் செய்கைகளினல் மிகுந்த ஆத்திரமடைந்து வெகு கண்டிப்பான முறைகளில் அவர் களைத் தண்டித்தார். அவர் நேருக்கு நேர்விரோதமான குணங்கள் பொருந்தியவர் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஏனெனில், இவ்வளவு குரூரமாக யிருந்தபோதி லும் அவர் தெய்வபக்தி உள்ள முஸல்மான்; மது பானத்தை அறவே ஒழித்துத் தன் சொந்த வாழ்க்கையில்

தன் மதக்கோட்பாடுகளைக் கண்டிப்பாய் பின்பற்றிவந்தவர். அவர் சிறந்த கல்விமான்; தர்க்கம், கணித சாஸ்திரம் இவைகளில் தேர்ச்சிபெற்றவர். வெகு நேர்த்தியான கடிதங்களை எழுத வல்லவர். அரசாங்க நிர்வாகத்தில் புதிய முறைகளைப் பரிக்ஷார்த்தமாகக் கையாளுவதில் மிக விருப்பங்கொண்டவர். ஆனால் அவைகளெல்லாம் அநேகமாக ஆபத்திலேயே முடிந்தன.



துக்ளக்ஷாவின் சமாதி

டில்லியைக் காலிசெய்தது. அவருடைய தற்போக்கான செயல்களில் ஒன்று 1326—27-ல் தலைநகரைக் காலிசெய்ய வேண்டுமென்று அவர் பிறப்பித்த உத்தரவாகும். இக்கட்டளை ஒருசமயம் பொருளாதாரக் காரணங்களை உத்தேசித்து விதிக்கப்பட்டதாகக் கொள்ளலாம். ஏனெனில், நாட்டில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டமையால், சுல்தான் பிரஜைகளை அதிக மையமாகவும் தக்காண அரசர்களாகிய யாதவர்களுடைய பழைய தலைநகராயும்

இருந்த தேவகிரி என்னும் தௌலதாபாத்திற்குக் கொண்டுபோவது நல்ல ஏற்பாடு என்று நினைத்தார். மற்றொரு காரணம் யாதெனில், டில்லிவாசிகள் மிகத் துணிச்சலுடன் செய்துவந்த ராஜத்துரோகச் செயல்களுக்காக அவர்களைத் தண்டிக்கவேண்டுமென்று அவர் எண்ணியதாகும். இந்த ஏற்பாடு நற்பயன்கள் ஒன்றையும் அளிக்காதது கண்டு, அவர் மறுபடியும் டில்லி நகரில் ஜனங்களைக் குடிபுகும்படி முயற்சிகள் செய்தார். ஆனால் அவைகள் அதிகமாகப் பலிக்கவில்லை. பல வருஷங்கள் வரையில் டில்லி நகரம் பழைய நிலைமைக்கு வரவில்லை. இந்த ஏற்பாடு ஒரு தடவை பயன்படாமற் போனபோதிலும், பத்து வருஷத்திற்குப் பிறகு பஞ்சம் வந்த காலத்தில் மறுபடியும் அவர் இதையே பின்பற்ற முயற்சி செய்தார்.

ராணுவச் செலவு. அவர் பாரசீகத்தின்மீதும் சைனாவின்மீதும் படையெடுப்பதற்காகப் பலத்த குதிரைப் படைகளைத் திரட்ட ஏற்பாடுகள் செய்ததின்மூலம் ஏராளமான பணத்தை வீணாகச் செலவிட்டார். மங்கோலியர்கள் படையெடுத்து டில்லிக்குச் சமீபத்தில் வருகையில் அவர்களுக்கு ஏராளமான தொகையை லஞ்சம் கொடுக்கவேண்டி நேரிட்டது. அரசாங்கத்தின் நடப்புச் செலவிற்காக சுல்தான் சுயமதிப்பு குறைவான தாமிர நாணயங்களை அச்சிட்டு வழங்கினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் கள்ள நாணயங்களைச் செய்வது மிகவும் சுலபமாக இருந்தமையால், சிறிது காலத்திற்குள் சுயமதிப்பு குன்றிய நாணயங்கள் கற்களைப்போல் உபயோகமில்லாமல் துக்ளகாபாத்தில் குவியல் குவியல்களாகக் கொட்டப்பட்டிருந்தன. நாட்டில் கலகங்கள் ஏற்பட்டன. ஸுல்தான் அவைகளை மிகக் குரூரமான முறைகளைப் பின்பற்றி அடக்கினார். அவர் அயோத்தியைச் சூறையாடவே, அந்நாட்டு மக்கள் காடுகளுக்கு ஓடிப்போய் ஒளிந்துகொண்டார்கள். அவர் அங்கேயும் சென்று அவர்களை வேட்டை மிருகங்களைப்போல் வெருட்டிக் கொன்றார். தனக்கு விரோதமாகக் கலகம் செய்த தன் மருமகனை **பாஹா உத்தீனை** மிகக் கோரமாகக் கொலை

செய்து, அவர் உடலுக்குள் வைக்கோலைத் திணித்து, அதைப் பொது இடத்தில் எல்லோரும் பார்க்கும் வண்ணம் வைத்தார். தனக்கு விரோதமாகக் கலகம் செய்த வங்காள கவர்னரும் இக்கதியையே அடைந்தார். இவ்வாறே, மிகக் கடுமையான அடக்கு முறைகளை அவர் பின்பற்றியபோதிலும், வங்காளமும் தென் இந்தியாவில் கர்நாடகம் அல்லது மலையாள மாகாணமும் சுவாதீனமடைந்தன.

முகம்மது பின் துக்ளக்கின் மரணம். அவருடைய விசாலமான சாம்ராஜ்யம் மிகக் கேவலமான நிலைமையில் இருந்தது. அநேக ஜனங்கள் பஞ்சத்திலும் கொள்ளை நோயிலும் மடிந்தார்கள். தாங்கமுடியாத வரிப்பளுவினால் அநேகர் நசித்துப்போயினர். குஜராத்திலும் சிந்து தேசத்திலும் கலகங்கள் உண்டாயின. சிந்து தேசத்தில் இருக்கையில் அவருக்கு ஏற்பட்ட கடுமையான ஜுரத்தின் காரணமாக அவர் 1351-ல் இறந்தார். தான் அரசாண்டுவந்த 26 வருஷகாலத்திற்குள் அவர் இந்நாட்டை மிக ஆபத்தான நிலைமைக்கு வருமாறு செய்துவிட்டார்.

பிரோஜ்ஷா துக்ளக் (1351-1388). காலஞ்சென்ற ஸுல்தானின் சமீப பந்து பிரோஜ்ஷா துக்ளக் உடனே அடுத்த சுல்தானைத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சிந்து பாலைவனத்தில் மிக அபாய நிலைமையில் அகப்பட்டுக்கொண்டிருந்த சேனையைக் கஷ்டப்பட்டு விடுவித்து, வேகமாக டில்லிக்குத் திரும்பிவந்தார். பிறகு அவர் முறைப்படி டில்லி சுல்தானாக முடிசூட்டப்பட்டார்.

பிரோஜ்ஷாவின் தொடர்போர்கள். முகம்மத் பின் துக்ளக்கின் தவறால் இழக்கப்பட்ட மாகாணங்களை மறுபடியும் ஜயிக்க பிரோஜ்ஷா பெரும் முயற்சி செய்தார். ஆனால் அது பயன்படாமற் போயிற்று. அவர் சிந்துவிலும் வங்காளத்திலும் மிகப் பணச்செலவுடன் பயனற்ற அநேக போர்களை நடத்தினர். முடிவில் அத்தேசங்களையும் தக்காணத்தையும் சுவாதீனம் பெற்றவைகளாக அங்கீகரிக்க வேண்டியதாயிற்று.

அவர் அரசாங்கம். பிரோஜ்ஷா நியாயமான அரசர். நாடு முன்னேற்றமடைந்து பழைய நிலைமையை அடை

வதற்கு தன்னால் கூடுமானவரையில் அவர் பாடுபட்டார். பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட இடங்களில் நீர்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தினர். கால்வாய்கள் வெட்டப் பட்டன. மராமத்து செய்யாமல் பாழடைந்திருந்த ஏரி கள் சீர்படுத்தப்பட்டன. வரிகள் மிக இலகுவாக இருந் தன. அவர் அவயவங்களை வெட்டுதல் முதலிய குரூர மான தண்டனைகளை ஒழித்தார். ஸுல்தான் நற்பயிற்சி பெற்ற சிறந்த கல்விமான். கட்டடங்களைக் கட்டுவதில் விசேஷப் பிரியங்கொண்டவர். தற்காலத்திய ஐக்கிய மாகாணத்தில் **ஹிஸ்ஸார், ஜான்பூர்** என்ற இரு நகரங் களை ஸ்தாபித்தார். ஆனால் அவர் மேற்கொண்ட முக் கியமான வேலை பழைய **இந்திரப்பிரஸ்தம்** இருந்த இடத் தில் புதிய தலைநகராகிய **பிரோஜாபாத்தை** அமைத்த தாகும். இந்த நகரில் அழகிற்காக அசோகரின் கற் தூண்கள் இரண்டை நாட்டினர். இவைகளை இருந்த இடத்தினின்றும் பெயர்த்து இந்நகரத்திற்குக் கொண்டு வந்து ஸ்தாபித்தது கட்டடக் கலையின் ஆச்சரியமான செயலாகும். பிரோஜ்ஷா தன் கட்டட திட்டங்களில் சண்டைகளில் சிறைப்படுத்தப்பட்ட அநேக அடிமை களை வேலைக்கமர்த்தி யிருந்தார். இவர்களில் அநேகர் வெகு சாமர்த்தியம் வாய்ந்த சிற்பிகள். அவர் ஹிந்துக் களின் ஆலயங்களை அழித்து அவைகளின் கட்டடப் பொருள்களைக்கொண்டு மசூதிகளைக் கட்டினர்.

அரசியல் முறை. முற்கால முகம்மதிய அரசர்களுள் பிரோஜ்ஷா காலத்தில்தான் ஒழுங்கான அரசியல் முறை களின் அறிகுறிகளை முதன் முதலாக நாம் காண்கிறோம். அரசர் ஸர்வாதிகாரம் பெற்று இருந்தார். சேனையின் தலைமையைத் தானே வகித்து வந்தார். மாகாணங் களைச் சாதாரணமாக அரச குடும்பத்தைச் சேர்ந்த இராஜகுமாரர்கள் பரிபாலித்து வந்தார்கள். அரசனின் கீழ் அமைச்சர் ஒருவர் இருந்தார். உத்தியோகஸ்தர் களுக்குச் சம்பளத்திற்குப் பதிலாக ஜாகீர் அல்லது ஒரு பிரதேசத்தின் வரிவசூல் பாத்யத்தை அளித்தார். மிக விரிவான கணக்குகள் வைக்கும் முறை கையாளப்பட்டு வந்தது. எல்லா ராஜப்பிரதிநிதிகளும் இம்முறையி

லேயே கணக்குகள் வைத்திருக்கவேண்டும். அக்கணக்கு கள் அவ்வப்பொழுது தணிக்கை செய்யப்பட்டு வந்தன. தங்க நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் உபயோ கத்திலிருந்தன. இவைகளின் மதிப்பு வெகு ஜாக்கிரதை யாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அரசாங்கத்தின் மிக முக்கியமான வருமானம் நிலவரி. மற்றொரு முக்கிய மான அம்சம் முகம்மதியரல்லாதவர்களுக்கு விதித் திருந்த **ஜிஸியா** என்ற தலைவரியாம். ஜிஸியா வரியி னின்றும் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு அநேக இந் துக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவினார்கள். எனவே, இதுதான் தற்காலத்தில் இந்தியாவில் இருக்கும் முகம்மதி யர்களுள் பெரும் பகுதியினர் தோன்றியதற்குக் காரண மாகும். பிரோஜ்ஷாவினுடைய சேனை முற்றிலும் குதி ரைப்படையாகவே இருந்தது. அவைகள், மிகக் கேவல மான முறையில் பயிற்சி செய்யப்பட்ட காலாட்படை களைக் காட்டிலும் மிகவும் மேன்மையானவை. சேனை வீரர்கள் அவரவர்கள் தத்தம் குதிரைகளைக் கொண்டு வந்தார்கள்.

பிரோஜ்ஷாவின் மரணம்—தைமூரின் படையெழுச்சி. முப்பத்தேழு வருஷகாலம் அரசாண்ட பிறகு வயோதிக ரான சுல்தான் இறந்தார். அவர் மரணத்திற்குப்பிறகு ஏற்பட்ட குழப்பமான சந்தர்ப்பத்தில் **தைமூர்-இ-லங் (தாம்பர்லேன்)** இந்தியாவின்மீது படையெடுத்தார். தைமூர் பார்லஸ் துருக்கியர். அவர் தனக்கு முன் செங் கிஸ்கான் செய்தமாதிரி மத்திய ஆசியாவைக் கொள்ளை யிட்டார். அவர் கி. பி. 1398-ல் கணவாய்களைக் கடந்து, பாலைவனத்திற்கும் இமயமலைக்கும் மத்தியிலுள்ள குறு கிய சமவெளியில் சரித்திரத்தில் பெயர்போனதாயும், இந்தியா தேசத்தின் விதி பல தடவைகளில் தீர்மானிக் கப்பட்ட இடமாயும் உள்ள பானிப்பட்டு யுத்தக்களத்தில் தன்னை எதிர்த்து நின்ற சைன்னியங்களை உமியைப் போல் சிதறுண்டு பறக்கச் செய்தார். பிறகு அவர் டில்லியை நோக்கி முன்னேறி, அந்நகரத்தை இரக்கமின் றிச் சூறையாடினார். ஐந்து நாட்களாக நகரம் கொள்ளை யிடப்பட்டது. 50,000 பேர்கள் கொல்லப்பட்டார்கள்.

1,00,000 ஜனங்கள் அடிமைகளாக்கப்பட்டனர். தைமூர் தான் கொள்ளையிட்ட நாடுகளில் பஞ்சத்தையும் கொள்ளை நோய்களையும் விளைவித்து, சாமர்க்கண்டுக்குத் திரும்பினார். "அந்நகரம் (டில்லி) முற்றிலும் பாழாக்கப்பட்டது. மிகுதியான நகர ஜனங்கள் இறந்தனர். இரண்டு மாத காலம் டில்லியில் ஒரு பறவைகூட சஞ்சரிக்கவில்லை."

சையத், லோடி பரம்பரைகள் (1413–1526)

சையத்கள். தைமூர், **கிஸிர்கான்** என்ற உத்தியோகஸ்தனிடத்தில் டில்லியை ஒப்படைத்தார். அவர் கி. பி. 1421-ல் இறந்த பிறகு, சையத்கள் அல்லது முகம்மது நபியின் வமிசத்தார்கள் என்று உரிமை கொண்டாடிய மூவர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்திற்கு வந்தார்கள். இவ்வமிசத்துக் கடைசி சுல்தான், **பலால்லோடி** என்ற ஆப்கானிய பிரபுவின் சார்பாக முடிதுறக்க வேண்டியதாயிற்று.

லோடிகள். கி. பி. 1450-ல் பட்டத்திற்கு வந்த **பலால் லோடி** நல்ல அரசர். அவர் ஆடம்பரமற்ற பழக்கவழக்கங்களுடனும், தாராள சிந்தையுடனும் கூடி, தெய்வபக்தி வாய்ந்தும் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. தைமூரின் படையெழுச்சிக்குப்பிறகு ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக டில்லி சுல்தானின் ஆட்சியினின்று விலகிப் போன ஜான்பூர் நாட்டின்பேரில் தொடுத்த போர்களிலேயே அவர் தன் காலத்தின் பெரும் பாகத்தைச் செலவழித்தார். அவருடைய குமாரர் **சிக்கந்தர் லோடியும்** ஜான்பூரின்பேரில் தொடர்போர் புரிந்து வந்தார். அவர் திறமைவாய்ந்த நிர்வாகஸ்தர். அவர் காலத்தில் உணவுப்பொருள்கள் மிகவும் மலிவாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர் மதவைராக்கியமுள்ள முஸல்மான்; அவர் சமயம் வாய்த்தபொழுது இந்து ஆலயங்களையும் விக்கிரகங்களையும் அழித்தார். ஆக்ராவைத் தன் வாசஸ்தலமாக்கிக்கொண்ட முதல் அரசர் இவரே. அவர் கி. பி. 1517-ல் இறந்தார். அவருக்குப்பின் அவர் குமாரர் **இப்ருஹீம்லோடி** பட்டத்திற்கு வந்தார். இவர்

சாமர்த்தியமற்ற கொடுங்கோல் மன்னர். இவர் தன்னுடைய நாட்டின் பிரபுக்களிடம் சண்டை இட்டுக்கொள்ள, அவர்கள் காபூல் அரசனை பாபரை வரவழைக்கத் தீர்மானித்தனர். பாபர் சிறிதும் தயக்கமின்றி அவர்களுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டார். இந்துஸ்தானத்தின் வாயிலான **பானிப்பட்டில்** மறுபடியும் இந்தியாவின் விதி தீர்மானிக்கப்பட்டது. இச்சண்டையில் இப்ருஹீம்லோடி தனது முடியையும் உயிரையும் இழந்தார். இவருடன் டில்லி சுல்தான்களின் முதல் பரம்பரை முடிவுபெற்றது.

டில்லி சுல்தான்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள். ஆதியில் படையெடுத்த முகம்மதியர்கள் ஒரு சிறு கூட்டத்தினர்; ஆனால் அவர்கள் படையெடுத்த நாடு மிகவும் விசாலமானது. போக்கு வரவு மார்க்கங்கள் சீர்கெட்டிருந்தன. பிற்காலத்தில் முகலாயர்கள் ஆங்காங்கு தபாற் சௌகரியங்களுடன் ஏற்படுத்திய நேர்த்தியான ரஸ்தாக்களைப் போல அக்காலத்தில் இல்லை. ஆகையால் டில்லியில் இருக்கும் சுல்தானுக்கு மாகாண ராஜப்பிரதிநிதிகளின் செயல்களைக் கவனித்து வருவது கஷ்டமாயிருந்தது. ஆகவே, அவர்கள் பலமற்ற அரசன் அரசாண்டுவந்த சமயம் பார்த்து சுவாதீனமடைந்தார்கள். ஸுல்தான் பிரோஜ் பிரபுக்களுக்குப் பணத்திற்குப் பதிலாக ஜாகீர்கள் அளிக்கும் முறையைக் கையாண்டதால் மத்திய அரசாங்கத்தாரின் அதிகாரம் தளர்ந்து, நிலைமை மிகக் கேவலமாயிற்று. முகம்மது துக்ளக்கின் மூடத்தனமான பரிக்ஷார்த்தச் செயல்கள் (முக்கியமாக தலைநகரை மாற்ற முயற்சி செய்தது) நாட்டைப் பாழாக்கின. இந்த நிலைமையிலிருந்து தேசம் பின்னால் முற்றிலும் சீர்ப்படவில்லை. டில்லியில் எப்பொழுதும் இரண்டு கக்ஷிகள் இருந்தன. இந்நாட்டில் ஜனித்து முகம்மதிய மதத்தைத் தழுவினவர்கள் ஒரு கக்ஷியும், வெளிதேச முகம்மதியர்கள் எதிர் கக்ஷியுமாக இருந்து, ஒருவர்க்கொருவர் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டு வந்தார்கள். முதலில் ஒரு கக்ஷியினரும் பிறகு மற்றொரு கக்ஷியினருமாக ஸுல்தான்களை சிம்மாசனத்தில் ஏற்றி

யும் அதினின்று இறக்கியும் வந்தார்களாகையால் நிலைப்பாடோ அல்லது உறுதியோ சிறிதும் இல்லாமலிருந்தது.


அத்தியாயம் 11

வங்காளம், குஜரத், தக்காணம் இவைகளின் முகம்மதிய அரசர்கள்

1340–1687

சுவாதீனமடைந்த இராஜ்யங்கள். டில்லி சுல்தான்கள் அரசாண்ட காலத்தில் தூரத்திலிருந்த மாகாணங்கள் ஸுல்தான்களின் பிரதிநிதிகளான தளகர்த்தர்களின் வசமிருந்தன. ஆனல் பொதுவாக சண்டைகளிலும் வமிசப் போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்த மத்திய அரசாங்கத்தால் வெளிமாகாணங்களை மேற்பார்வையிட முடியவில்லை. ஆகையால் சிறிது காலத்திற்குப் பிறகு அவை மத்திய அரசாங்கத்தின் பந்தத்திலிருந்து விடுபட்டு சுவாதீனம்பெற்ற நாடுகளாயின. இவ்வமிசங்கள் கி. பி. 1398-ல் தைமூரின் படையெழுச்சியிலிருந்து ஆரம்பமாயின. இப்படையெழுச்சியின் காரணமாக டில்லி சுல்தான்கள் தற்காலிகமாக உதவிபெறக்கூடாமலும், தேசத்தை அமைதியாக வைத்துக்கொள்ள முடியாதவர்களாயு மிருந்தார்கள். இவ்வாறு வட இந்தியாவில் சுவாதீனமடைந்தவைகளில் முக்கியமானவை வங்காளத்தில் கௌர், ஜான்பூர் என்ற நகரங்களைத் தலைநகராகக் கொண்ட இராஜ்யங்களும், குஜராத்துமேயாம். இவை பிற்காலத்தில் முகலாய சக்கிரவர்த்திகளால் கைப்பற்றப்பட்டு அவர்களுடைய ஏகாதிபத்தியத்தின் சுபாக்களாயின.

தக்காணத்தின் பாமினி இராஜ்யம். கி. பி. 1347-ல் **முகமத்-பின்-துக்ளக்** அரசு புரிந்துவந்த காலத்தில், யாமன் என்ற பழைய காலத்து பாரசீக அரசனுடைய மரபில் பிறந்தவராக உரிமை பாராட்டினவரும் பாமினி என்ற மறுபெயரையும் பூண்ட ஆப்கானிய உத்தியோ




கௌரிலுள்ள சிறிய தங்கமசூதியின் வாசல் (கி. பி. 1500)



ஜான்பூரிலுள்ள அதலாதேவி மசூதி (கி. பி. 1408)

கஸ்தராகிய **ஹஸன்**, தற்காலம் நிஜாம் இராஜ்யத்திலிருக்கும் **குல்பர்கா**வைத் தலைநகராகக் கொண்ட ஒரு சுவாதீனமுள்ள இராஜ்யத்தை ஸ்தாபித்தார். பாமினி இராஜ்யம் நூற்றைம்பது வருஷகாலம் நிலைத்திருந்தது. அது மிகுந்த செல்வாக்குடன் இருந்தகாலத்தில் அரபிக் கடலிலிருந்து வங்காள விரிகுடா வரையிலும் வியாபித்திருந்தது. தற்காலத்திய பம்பாய் மாகாணத்தின் பெரும் பாகம், ஹைதராபாத் சுதேச இராஜ்யம், வட சர்க்கார் முதலிய பிரதேசங்கள் இதில் அடங்கியிருந்தன. தக்



ஆமதாபாத்தில் சிதிசையித் மசூதியின் ஜன்னல் திரை (கி. பி. 1500)

காணர்கள், அன்னியர்கள் என்ற இரண்டு கக்ஷிகள் அரச சபையின் பிரபுக்களிடையே ஏற்பட்டிருந்தன. அவ்விரு கக்ஷியினரும் அடிக்கடி ஒருவருக்கு விரோதமாக மற்றொருவர் சதிசெய்து வந்தார்கள். **அல்லா உத்தீன்** என்ற முதல் அரசர் நிர்மாண சாமர்த்தியம் வாய்ந்தவர். அவர் தன் இராஜ்யத்தை நான்கு மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கவர்னரையும், உத்தியோகஸ்தர்களையும் நியமித்தார். இதர அரசர்

களில், மிகவும் முக்கியமானவர்கள் **முதலாவது முகமத் ஷாவும் (1358-1373), பிரோஜும் (1397-1422)** ஆவார்கள். அவர்கள் விஜயநகரத்து அரசர்களுடனும் அவர்களுடைய துணைவர்களாகிய வாரங்கல் அரசர்களுடனும் மும்முரமாகப் போர்புரிந்து வந்தனர். கிருஷ்ணா நதிக்கும் துங்கபத்திரா நதிக்கும் மத்தியிலுள்ள **ரெய்ச்சூர் தோஆப்,** சண்டையில் முக்கிய இலக்காக இருந்தது. முதல் ஒரு கக்ஷியினரும் பிறகு எதிர்க் கக்ஷியினரும் இப்பிரதேசத்தின்மீது படையெடுத்தார்கள். **ஆமத் ஷா** (1422-35), வாரங்கல் இராஜ்யத்தை தனது ஆளுகைக்குட்படுத்திக்கொண்டு தன்னுடைய தலைநகரை குல்பர்காவிலிருந்து பிடாருக்கு மாற்றினார். இத்தொடர் போர்களின் பயனாக இந்து விவசாயிகளுக்கு மிகுந்த துன்பமும் கஷ்டங்களும் நேரிட்டன. கி.பி. 1395-ல் மிகக் கோரமான **துர்க்கா தேவிப் பஞ்சம்** உண்டாகி பன்னிரண்டு வருஷகாலம் நிலைத்திருந்தது. பயிர் நிலங்களில் பெரும்பாகம் சாகுபடியில்லாமலிருந்தது. கி.பி. 1481-ல் மிகப் புகழ்பெற்ற இந்து நகரமாகிய **காஞ்சியின்மீது** பாமினிச் சேனைகள் படையெடுத்து, அநேக கோவில்களை அழித்தும் பிராமணர்களைக் கொன்றும் சூறையாடின.

பாமினி இராஜ்யம் க்ஷீணமடைந்தது. மூன்றாவது முகம்மத் ஷாவின் விவேகமும் பொறுமையும் வாய்ந்த அமைச்சனான **மாமூத் கவானின்**கீழ் பாமினி இராஜ்யத்தின் செல்வாக்கு மிக உன்னத நிலைமையை அடைந்தது. மகமத் ஷா இறந்தபின் தக்காணர்களுக்கும் அன்னியர்களுக்கும் இடையே நடந்த கக்ஷிச்சண்டைகள் தினசரிச் சம்பவங்களாயிருந்தன. முகம்மத் ஷாவிற்குப் பின்வந்த அரசர்கள் அவர்கள் கையிலகப்பட்ட பொம்மைகளாயிருந்தனர். இவ்வமிசத்தின் கடைசி அரசர் டில்லிச் சக்கரவர்த்தியான பாபரின் உதவியைக் கோரினார். பிறகு அவர் ஆமத் நகருக்கு ஓடவே, அங்கு கி.பி. 1527-ல் அநேகமாய் அவர் விஷமிட்டுக் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

மக்களின் நிலைமை. பாமினி அரசர்களின் அரசாட்சி கடுமையாயிருந்தது. ஆனால் ரஸ்தாக்கள் நன்கு பாது

காக்கப்பட்டு வந்தன. நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒழுங்கான நிலவரி முறையும் ஆரம்பிக்கப்பட்டது. வரிப்பளுவு அதிகமாயிருந்தது. **அதனேஷியஸ் நிதிகன்** என்ற ருஷிய யாத்திரீகர், பிரபுக்கள் வெள்ளிப் பல்லக்குகளில் ஏறிச்சென்றனரென்றும், சாதா



ரண மக்கள் மிக்க ஏழ்மையுற்று உடுக்கப் போதுமான ஆடைகளின்றி இருந்தார்களென்றும் கூறுகிறார். முகமதியர்கள்தான் உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள். முகமதியர்களின் கல்விக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மசூதிக்கும் ஒரு முல்லா இருந்தார். அவர் பையன்களுக்கு எழுதப்படிக்கவும்,

குர்ரானிலுள்ள செய்யுள்களை மனப்பாடம் செய்து ஒப்பிக்கவும் கற்றுக்கொடுத்தார். நேர்த்தியான பல கட்டடங்கள் கட்டப்பட்டன. பிடார் நன்கு நிர்மாணிக்கப்பட்ட ஒரு அழகுவாய்ந்த நகரமாக விளங்கிற்று. ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் பாமினி அரசர்கள் மிகச் சாதாரணமான கெட்ட பழக்கமாகிய மதுபானத்திற்கு அடிமைகளா யிருந்தனர். இதனால் தங்கள் உத்தியோகஸ்தர்களின்மீது அவர்கள் போதிய அளவு மேற்பார்வை செலுத்த இயலாமற்போய்விட்டது.

ஐந்து இராஜ்யங்கள். பாமினி இராஜ்யத்திலிருந்து கலகம் செய்த மாகாணங்கள் ஐந்து ஸ்வாதீனம்பெற்ற நாடுகளாக அமைந்தன. இவைகளை ஆண்டுவந்த வமிசங்கள் கீழ்க்கண்டவை: (1) **பீஜப்பூர்-அதில்ஷாகிகள்,** (2) **ஆமதநகர்-நிஜாம்ஷாகிகள்,** (3) **பேரார்-இமத்ஷாகிகள்,** (4) **பீடார்-பரித்ஷாகிகள்,** (5) **கோல்கொண்டா-குத்ப்ஷாகிகள்.**

(1) **பீஜப்பூர்-அதில்ஷாகிகள்.** இவ்வமிசம் கி. பி. 1489-ல் கலகம்செய்த பீஜப்பூர் கவர்னராகிய **யூஸப் அதில் ஷாவினால்** ஸ்தாபிக்கப்பட்டது. அவர் **இரண்டாவது மூராத்** என்ற துருக்கி சுல்தானின் குமாரரென்றும் ஷியா மதப்பிரிவைச் சேர்ந்தவரென்றும் சொல்லப்பட்டார். அவர் விவேகமும் நாகரீகமும் வாய்ந்த அரசர். அவர் கலைஞர்களையும், இலக்கியக் கர்த்தாக்களையும், பாரசிகத்திலிருந்தும், டிரான்ஸாக்ஸியானாவிலிருந்தும் வரவழைத்து ஆதரித்துவந்தார். அவர் ஒரு மகாராஷ்டிர மாதை மணந்து, இந்துக்களை அன்புடன் நடத்திவந்தார். பாரசிகப் பாஷைக்குப் பதிலாக மராத்தி பாஷையையே அரசாங்க பாஷையாக வழங்கிவரவேண்டுமென்று அவர் பிறப்பித்த உத்தரவு அவருடைய இந்துப் பிரஜைகளுக்கு மிக அனுகூலமாயிருந்தது. கி. பி. 1510-ல் போர்ச்சுகீஸியர்கள் வெகு மும்முரமாகப் போர்புரிந்து, பீஜப்பூரின் முக்கியத் துறைமுகமான கோவாவைக் கைப்பற்றினார்கள். கி. பி. 1564-ல் பீஜப்பூர், பீடார், ஆமதநகர், கோல்கொண்டா இந்த நான்கு நாடுகளின் ஸுல்தான்கள் தங்கள் பொது விரோதியான விஜயநகர ஸாம்ராஜ்யத்

தின் இந்து அரசனை எதிர்க்க ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இதன்பின் கி. பி. 1565-ல் ஜனவரி 23-ம் தேதி தலைக்கோட்டையில் நடந்த சண்டையில் இந்துக்கள் முற்றிலும் தோல்வியடைந்தனர். **ஆலி அதில்ஷா** ஆமத்நகர் அரசகுமாரியான **சாந்த் பீபீயை** மணந்தார். அவர் கி. பி. 1576-ல் கொலையுண்ட பிறகு சாந்த் பீபீ தன் மகன் **இப்ராஹீம் அதில்ஷாவிற்கு** வயது வரும்வரையில் அரசின் பதிலாளாக அரசாங்கத்தை நிர்வகித்து வந்தார்.

இரண்டாவது இப்ராஹீம் அதில்ஷாவின் அரசாட்சி (1580-1626). பீஜப்பூர் சுல்தான்களில் எல்லோரிலும் மிகச் சிறந்தவர் இப்ராஹீம் அதில்ஷா. அவருடைய அரசாட்சியில் சமாதானம் நிலவி இருந்தது. அக்பருடைய அமைச்சன் **தோடர்மாலின்** நிலவரி வசூல் ஏற்பாட்டைப் போன்ற ஒரு ஏற்பாட்டை அவர் அமுலுக்குக் கொண்டு வந்தார். இந்துக்களிடத்திலும், கிருஸ்துவர்களிடத்திலும் மதவெறுப்பில்லாமல் அன்புகொண்டிருந்தார். இந்துக்களை அரசாங்கத்தில் உத்தியோகஸ்தர்களாக நியமித்தார். போர்ச்சுகீஸியர்களைத் தன்னுடைய இராஜ்யத்தில் வியாபாரம் செய்ய ஆதரவளித்து, அவர்கள் தேவாலயங்களைக் கட்டிக்கொள்ளவும் அனுமதித்தார்.

பீஜப்பூர் க்ஷீணமடைந்தது. பீஜப்பூரில் கடைசியாகச் சிறப்புடன் ஆட்சிசெய்தவர் **ஸுல்தான் முகம்மத் அதில்ஷா** (1625-1656). அவருடைய சமஸ்தானம் வெகு மேன்மையுற்றிருந்தது. அவருடைய இராஜ்யம் மேற்கே அரபிக்கடலிலிருந்து கிழக்கே வங்காள விரிகுடாவரையில் வியாபித்திருந்தது. அதில் ஆமத்நகரின் ஒரு பகுதியும், கர்நாடகத்தின் பெரும்பாகமும் அடங்கியிருந்தது. **ஷாஜஹான் சக்கரவர்த்தி** கி. பி. 1635-ல் தக்காண இராஜ்யங்களைத் தொலைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார். பீஜப்பூர் இராஜ்யம் முழுவதும் அவரால் சற்றும் தயவில்லாமல் பாழாக்கப்பட்டது. ஆனால் தலைநகரும் அதற்குச் சுற்றுப்புறமிருந்த பிரதேசங்களும் வெள்ளத்திற்குள்ளாக்கப்பட்டதால் காப்பாற்றப்பட்டது. கி. பி. 1636-ல் சமாதானம் ஏற்பட்டது. பீஜப்பூர் சேனைகள்

கி. பி. 1655-ல் பெருந் தோல்வியடைந்தன; மகாராஷ்டிர வீரரான **சிவாஜி, அப்ஸல்கானின்** சைன்னியத்தைப் **பிரதாபகிரியில்** நாசமாக்கினர். ஔரங்ஜேப் சக்கரவர்த்தி கி. பி. 1685-ல் பீஜப்பூரைத் தாக்கினர். பதினைந்து மாத முற்றுகைக்குப்பின் அது பணிந்தது.

சித்திரக் கலையும் கட்டடக் கலையும். பீஜப்பூர் நகரம் சிறப்புற்றிருந்தது. இக்காலத்திலும் காணப்படும் அந் நகரத்தின் பாழடைந்த பாகங்கள் வெகு ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியவைகளாய் இருக்கின்றன. பீஜப்பூரி



கோல்கும்பஸ், பீஜப்பூர்: முகமத் அதில்ஷாவின் சமாதி
(பதினேழாவது நூற்றாண்டின் மத்தியபாகத்தில் கட்டப்பட்டது)

லுள்ள நேர்த்தியான மசூதிகள், அரண்மனைகள், சமாதிகள் முதலியவைகள் கணக்கிடமுடியாதவை. ஆனால் அவைகளில் மிகவும் நேர்த்தியானது விஜயநகர இராஜ்யத்தின் வீழ்ச்சியைக் கொண்டாடும் பொருட்டு ஆலி அதில்ஷா கட்டிய அழகான மசூதியும், இரண்டாவது இப்ராஹீம் அதில்ஷாவின் சமாதியுமாகும். எனினும் கி. பி. 1626 முதல் 1656 வரையில் அரசாண்ட முகம்மத் அதில்ஷாவின் கல்லறையாகிய **கோல்கும்பஸ்** என்ற மிகப் பெரிய ஞாபகச்சின்னத்துடன் ஒப்பிட்டால், மற்

றக் கட்டடங்கள் அனைத்தும் மிகச் சிறியவைகளாகவே காணப்படுகின்றன. கோல்கும்பஸின் **வில்மண்டபம்** உலகிலுள்ள மிகப் பெரியவைகளுள் ஒன்று. இவைக ளன்னியில் பீஜப்பூரில் நேர்த்தியான கம்பளங்களும், அலங்கரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் தயார் செய்யப்பட்டு வந்தன.

இதர இராஜ்யங்கள். தக்காண இராஜ்யங்களில் சரித்திரத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்தது ஆமத்நகர் இராஜ்யம். இது கி. பி. 1490-ல் மாலிக் ஆமத் அல்லது **ஆமத் நிஜாம்ஷா** என்ற உத்தியோகஸ்தரால் ஸ்தாபிக்கப் பட்டது. நிஜாம்ஷாஹி அரசர்கள் பீஜப்பூர் சுல்தான் களுடன் நெருங்கிய சிநேகம்பூண்டு, விஜயநகரத்தை எதிர்த்து அவர்கள் யுத்தம் புரிந்த காலத்தில் தாமும் சண்டையில் கலந்துகொண்டு அவருக்கு உதவிபுரிந்தார் கள். ஆமத்நகரின் சரித்திரத்தில் மிகவும் கீர்த்திவாய்ந்த வர் பீஜப்பூர் அரசனாகிய ஆலி அதில்ஷாவின் மனைவியா கிய **சாந்த் பீபி.** அவர் தன்னுடைய சொந்த நகரத்திற் குத் திரும்பிய பிறகு, முகலாய இளவரசனை மூரத்தின் தலைமையின்கீழ் படையெடுத்துவந்த முகலாய சேனை களை எதிர்க்க, தக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்த வீர மாது தன் படைகளின் தலைமையைத் தானே வகித்து அவர்களைப் போர்முனைக்கு அழைத்துச் சென்றதுமல்லா மல், முழு கவசமணிந்து முன்னணியில் சண்டை செய்து வந்தார். கேவலம் ஒரு ஸ்திரீயால் தாங்கள் ஆளப்பட்டு வருவதைக் குறித்த அவமானத்தால் வெறுப்புகொண்ட தளகர்த்தர்கள் அவரை கி. பி. 1600-ல் கொலை செய்தார் கள். அவ்வருஷத்தில் நிஜாம்ஷாகி அரசன் முகலாய அரசனால் கைப்பற்றப்பட்டு, குவாலியருக்கு அரசாங்கக் கைதியாக அனுப்பப்பட்டார். ஆனால் **மாலிக் ஆம்பர்** என்ற அபிசீனிய அமைச்சர் அந்த இராஜ்யத்திற்குப் புத்துயிர் அளித்தார். அவர்தான் முதன் முதலாக சரி தம் வாய்ந்ததும் பெயர்பெற்றதுமான மராத்தியர்களின் குதிரைப் படைக்குமுன் முகலாயர்களின் சேனைகள் நிற்கமுடியாதென்பதைக் கண்டுபிடித்தவர். அவர் தன் தலைநகரை கர்க்கிக்கு மாற்றிக்கொண்டார். இங்கு நிலத்

தீர்வை ஏற்பாடு ஒன்றையும் துவக்கினர். இந்த இடத்தில்தான் பிற்காலத்தில் ஔரங்கபாத் என்னும் நகரம் உண்டாயிற்று. மாலிக் ஆம்பர் கி. பி. 1625-ல் இறக்கவே அவருக்குப்பின் அவர் குமாரர் **பத்கான்** அவருடைய பதவியை ஏற்றார். பத்கான் மற்றொரு பொம்மை அரசனை சிம்மாசனத்தி லேற்றினர். ஆனால் தௌலதாபாத்தில் அவர் முற்றுகையிடப்பட்டபொழுது முகலாயர்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அக்கோட்டையை கி. பி. 1632-ல் அவர்களிடம் ஒப்புவித்தார். பெயர்பெற்ற மகாராஷ்டிரப் பிரபுவும் சிவாஜியின் தகப்பனருமான **ஷாஜி** சிறிதுகாலம் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திவந்தார். ஆனால் கி. பி. 1635-ல் முகலாய சக்கரவர்த்தி தக்காணத்தின்மீது படையெடுத்து வந்தபொழுது **ஷாஜி**, பீஜப்பூர் சுல்தானிடம் உத்தியோகம் வகிக்குமாறு அனுமதிக்கப்பட்டார்.

அத்தியாயம் 12

விஜயநகர இந்து சாம்ராஜ்யம்
1336–1646


விஜயநகரத்தை ஸ்தாபித்தது. சென்னை மாகாணத்தில் பெல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரா நதிக்கரையில் இருந்த **விஜயநகரம்** என்ற **'வெற்றி நகரம்'** தென்னிந்தியாவில் முகம்மதியர்களின் முன்னேற்றத்தையும் இந்து தர்மத்தின் அழிவையும் தடுக்க உறுதிகொண்ட ஐந்து சகோதரர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சகோதரர்கள் தெலுங்கர்கள். இவர்கள் இந்து இராஜாங்கமாகிய வாரங்கல்லைச் சேர்ந்தவர்கள்; மற்றும் வேறுசிலரின் அபிப்ராயப்படி, ஹோயசால இராஜ்யப் பிரஜைகள். இந்த சகோதரர்களில் பிரமுகர்கள் **ஹரிஹர்**, **புக்கர்** என்ற இருவர். சுமார் கி. பி. 1343-ல் புக்கர் போதுமான பலம் பெற்றிருந்தமையால் ஸ்வாதீனமடைந்ததை வெளியிட்டதல்லாமல், தன் சொந்த தங்க நாணயங்களையும் அச்சிட ஆரம்பித்தார். இதனால் முகம்மத்ஷா பாமினியுடன் சண்டை ஏற்பட்டது. புக்கர் கி. பி. 1373-ல்

6

இறந்தார். அவர் தான் இறக்கும் முன்னரே தன் இராஜ்யத்தைப் பலமான அஸ்திவாரத்தின்மீது ஸ்தாபித்திருந்ததை உணர்ந்து மகிழ்ச்சியடைந்தார். அவருடைய குமாரர் **ஹரிஹரர்** (1379-1404) பகிரங்கமாக அரச பட்டத்தையும் விருதுகளையும் ஏற்று, திருச்சிறுப்பள்ளி, காஞ்சிபுரம் ஜில்லாக்களில் தன்னுடைய ஆட்சியைப் பரவச்செய்தார். அடுத்த அரசரான **முதல் தேவராயர்,** (1406-1410) மிக்க அழகுவாய்ந்த தட்டான் மகளைக் கைப்பற்றிக்கொண்டு செல்ல யத்தனித்ததால் 'தட்டான் மகள் யுத்தம்' என்ற ஒரு பெயர்போன யுத்தத்தில் ஈடுபட நேரிட்டது. பாமினி சுல்தானுகிய பிரோஜ்ஷா விஜயநகரை முற்றுகையிட்டு அதை மிகக் கேவலமான நிலைமையை அடையும்படி செய்ததால், தேவராயர் தன் மகளை முகம்மதிய அரசருக்கு மணம் செய்வித்துச் சமாதானம் செய்துகொள்ள நேரிட்டது. விஜயநகரத்தின் உறுதியான நேச இராஜ்யமாகிய வாரங்கல்லை கி. பி. 1425-ல் ஜெயித்து பாமினி இராஜ்யம் பலம்பெற்றது. பாமினி ஸாம்ராஜ்யம் கி. பி. 1485-ல் முறிந்துபோயிற்று. ஆனல் விஜயநகர அரசர்கள் அவர்களுக்குப் பின்வந்த ஸுல்தான்களுடன், முக்கியமாக பீஜப்பூரில் அரசாண்ட அதில்ஷாகிகளுடன் தொடர்ந்து யுத்தம் செய்துவந்தார்கள். கி. பி. 1486-ல் ஆதி விஜயநகர வமிசம் முடிவடையவே, **நரசிங்க சாளுவன்** என்ற ஒரு தளகர்த்தன் சிம்மாசனத்தைக் கைப்பற்றினன். இவருடைய வமிசத்தைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசர்களுள் மிகவும் கீர்த்திவாய்ந்தவர்.

கிருஷ்ணதேவராயர் (1509-1529). இங்கிலாந்தில் அரசு புரிந்த **எட்டாவது ஹென்றியின்** காலத்தோரான கிருஷ்ணதேவராயரின் ஆட்சியில் விஜயநகர இராஜ்யத்தின் கீர்த்தி அதன் உன்னத நிலைமையை அடைந்தது. கிருஷ்ணதேவராயர் சிறந்த போர்வீரர். அவர் பீஜப்பூர் அரசனிடத்திலிருந்து ரெய்ச்சூர் கோட்டையையும், பழைய பாமினித் தலைநகரமாகிய குல்பர்கா நகரத்தையும் கைப்பற்றினர். பீஜப்பூர்மீதும் படையெடுத்துக் கொள்ளையிட்டார். கிருஷ்ணதேவராயர் உதாரகுணம்

வாய்ந்தவர். தன்னால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டவர்களிடம் அவர் அன்பையும் தயையும் காட்டிவந்தார். எல்லா மதப் பிரிவினர்களிடத்தும் துவேஷமில்லாமல் பக்ஷமாயிருந்தார். கோவில்களையும், மடங்களையும், நிர்மாணம் செய்து, அவைகளுக்குத் தருமநிதி ஏற்பாடு செய்யும்பொருட்டு ஏராளமான தொகைகளைச் செலவழித்தார்; சிற்பக் கலைகளையும், இலக்கியக் கலைகளையும் பெரிதும் ஆதரித்து வந்தார். அன்னிய நாட்டு யாத்ரீகர்கள் வியாபாரத்தின் பொருட்டு தன் தேசத்தைப் பார்வையிட்டுச் செல்ல சௌகரியங்கள் அளித்துவந்தார். உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் கிறிஸ்துவர்கள், முகம்மதியர்கள், ஹிந்துக்கள் முதலிய எல்லா மதத்தினர்கள் அவருடைய கொலுமண்டபத்தில் கூடினர். அவர் மிகுந்த கல்வியறிவும் சாமர்த்தியமும் வாய்ந்த அரசர்.



கிருஷ்ணதேவராயரின் உருவச்சிலை

கிருஷ்ணதேவராயருக்குப்பின் அரசாண்ட சதாசிவராயர் திறமையில்லாதவராகையால், கிருஷ்ணதேவரின் அமைச்சனின் குமாரனை ராமராஜன் கி.பி. 1542-ல் சதாசிவராயரை சிம்மாசனத்திலிருந்து நீக்கித் தானே அப்பதவியைக் கைப்பற்றிக்கொண்டார். ஆமத் நகர்

சுல்தானுக்கு விரோதமாக அவர் பீஜப்பூர் சுல்தானுடன் நட்புகொண்டார். இந்து யுத்தவீரர்கள் தங்கள் குதிரைகளை மசூதிகளில் கட்டியும், முகம்மதியர்களுக்குப் புனிதமான இடங்களில் தங்கள் மதச் சடங்குகளைச் செய்தும், கர்வமும் அநாகரீகமுமான முறையில் நடந்துகொண்டார்கள். நிஜாம் ஷாஹி அரசர் தன்னை ஜயித்த இந்து அரசனை ராமராஜனுக்குப் பணிந்ததின் அறிகுறியாக அவர் கையை முத்தமிட்டபொழுது, ராமராஜன் மலினமடைந்த தன் கையைக் கழுவ ஒரு சொம்பு ஜலம் கொண்டுவரச் சொன்னார். அவர் தன் துணைவர்களை மிகக்



விஜயநகரின் ஹிந்து ஆலயம்

கேவலமாக நடத்தினர்; தன்னெதிரில் அவர்கள் ஆசனத்திலமர்ந்திருக்க இடம்கொடுக்கவில்லை. இதனால் மிகுந்த கோபங்கொண்ட பீஜப்பூர், ஆமத்நகர், கோல்கொண்டா, பீடார் என்ற நான்கு நாடுகளின் சுல்தான்கள் ஒன்று சேர்ந்துகொண்டு அவரை எதிர்த்தார்கள். 1565-ம் வருஷம் ஜனவரி மாதம் 23-ந் தேதி நடந்த சண்டையில் இந்து சைன்னியம் பெருந் தோல்வியுற்றது. ராமராயர் கைதியாக்கப்பட்டுக் கொலையுண்டார். வெற்றிபெற்ற முகம்மதிய சேனை விஜயநகரை நோக்கிச் சென்று அதைக் கொள்ளையிட்டுப் பாழாக்கியது.

இருநூறு வருஷகாலத்திற்கு மேல் அன்னியப் படையாளர்களை எதிர்த்துநின்று அரணைப்போல் இந்துக்களைப் பாதுகாத்துவந்ததும், தென்னிந்திய இந்து ஏகாதிபத்யங்களுக்குள் கடைசியானதும், மிகக் கீர்த்திபெற்றதுமான விஜயநகர ராஜ்யம் இவ்வாறு அழிவுற்றது. எஞ்சியவர்கள் பெனுகொண்டா கோட்டைக்கு ஓடினர். விஜயநகர இராஜவம்சம் பெருமை இழந்து, சில நூற்றாண்டுகள் இருக்குமிடம் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தது. அவர்கள் நாட்டை பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் சூறையாடினார்கள். இறுதியில் கி. பி. 1686-87-ல் அவர்களும் ஔரங்ஜேப் சக்கரவர்த்தியால் தோற்கடிக்கப்பட்டார்கள். விஜயநகரம் அழிவுற்றபிறகு தோன்றிய இந்து வம்சங்களில் மிகவும் முக்கியமானது மதுரை நாயக்கர்களின் பரம்பரை. இதைச் சேர்ந்த **திருமலை நாயக்கர்** என்பவர் மதுரைமா நகரத்தை அரண்மனைகளாலும் கோவில்களாலும் அலங்கரித்தார்.

கால அட்டவணை

இந்தியா கி. மு. 322 முதல் கி. பி. 1520 வரை

கி. மு. அளவு: 1 அங்குலம் = 60 வருஷங்கள்

330 – 300 – 270 – 240 – 210 – 180 – 150 – 120 – 90 – 60 – 30

மௌரிய சாம்ராஜ்யம் (– 185)

185– சங்க வமிசம் (–73)

73– கண்வ வமிசம் (–28)

28–

–322:	சந்திரகுப்த மௌரியர் அரசரானது
–305:	ஸெல்யூகஸின் தோல்வி
–269:	அசோகரின் மகுடாபிஷேகம்
–261:	கலிங்கநாட்டுப் போர்
–232:	அசோகரின் மரணம்
–200:	ஆந்திரர்கள் ஆதிக்கம் பெற்றது
–185:	கடைசி மௌரிய அரசன் கொலையுண்டது. புஷ்யமித்திரன் அரசரானது
–165:	மினேண்டரின் படையெழுச்சி
– 73:	கண்வ வமிசம் ஆதிக்கம் பெற்றது
– 28:	கண்வ வமிசம் ஆந்திரர்களால் தோற்கடிக்கப்பட்டு முடிவுற்றது

அளவு: 1 அங்குலம் = 60 வருஷங்கள்

கி. பி.

ஆந்திரர்கள் (– 225)

குஷானர்கள் (48 – 182)

30

48: முதலாவது காட்பிஸீஸ் அரசரானது

60

78: இரண்டாவது காட்பிஸீஸ் அரசரானது
சாக ஆப்தத்தின் ஆரம்பம்

90

120: கனிஷ்கர் பட்டத்திற்கு வந்தது

150

180

182: குஷான ஏகாதிபத்தியம் முடிவுற்றது

210

225: ஆந்திரர்களின் வமிசம் முடிவுற்றது

240

270

300

அளவு: 1 அங்குலம் = 60 வருஷங்கள்

கி. பி.

Scale	Year	Event
	320:	முதலாவது சந்திரகுப்தர் அரசரானது
330	330:	சமுத்திரகுப்தர் அரசரானது
360		
	380:	இரண்டாவது சந்திரகுப்தர் சிம்மாசன மேறியது
390	395:	மேற்கு இந்தியா ஜயிக்கப்பட்டது
	405–411:	பாஹியனின் யாத்திரை
	415:	குமாரகுப்தர் பட்டத்திற்கு வந்தது
420		
450		
	455:	ஸ்கந்தகுப்தர் அரசரானது
480	480: } 490: }	குப்த ஸாம்ராஜ்யத்தின் சிதைவு
510		
	528:	மிஹிரகுலன் இந்திய அரசர்களால் தோற்கடிக்கப்பட்டது
540		
570		
600		

அளவு: 1 அங்குலம் = 60 வருஷங்கள்

கி. பி.

	606:	ஹர்ஷவர்த்தனர் அரசரானது
	612:	ஹர்ஷர் வட இந்தியாவை ஜயித்தார்
	620:	ஹர்ஷர் இரண்டாவது புலிகேசியினல் தோல்வியுற்றது
630	629:	ஹ்யூன்த்ஸாங்கின் வருகை
	642:	நரசிம்மவர்ம பல்லவனல் புலிகேசி தோல்வியுற்றது
	645:	ஹ்யூன்த்ஸாங்கின் யாத்திரை முடிவுபெற்றது
	647:	ஹர்ஷரின் மரணம்
660		
	674:	பல்லவ தலைநகராகிய காஞ்சியைச் சாளுக்கியர்கள் கைப்பற்றியது
690		
	712:	அரேபியர்கள் சிந்து மாகாணத்தை ஜயித்தது
720		
750		
	757:	ராஷ்டிரகூடர்கள் சாளுக்கியர்களை வென்றது
780		
810		
	815:	அமோகவர்ஷர் அரசரானது
840	840–890:	கன்னோசி அரசரான போஜபரிஹார் அரசாண்ட காலம்
870		
900		

அளவு: 1 அங்குலம் = 60 வருஷங்கள்

கி. பி.

–930–

–960–

–973: கல்யாணி சாளுக்கிய வம்சம் ஸ்தாபிக்கப்பட்டது

–990–

–1001: கஜினிமாமூத் ஜயபாலரை வென்றது

–1020– –1023: முதலாவது ராஜேந்திர சோழதேவர் வங்காளத்தின்மீது படையெடுத்

–1025: கஜினிமாமூத் சோமநாதபுர ஆலயத்தைச் சூறையாடியது [தது

–1030: கஜினிமாமூதின் மரணம்

–1050–

–1076: விக்கிரமாங்க சாளுக்கியர் சிம்மாசன மேறியது

–1080–

–1110– –1110:

ஹோய்சால அரசராகிய விஷ்ணுவர்த்தனர் அரசாண்ட காலம்

–1140– –1141:

–1170– –1173: மூகம்மதுகோரி அரசானது

–1191: தரெயின் சண்டை—டில்லி, காசி, இந்நகரங்கள் நாசமாக்கப்
பட்டன

–1200–

அளவு: 1 அங்குலம் = 60 வருஷங்கள்

கி. பி.

1206– அடிமை வம்சம் –1290

–1206: முகம்மதுகோரியின் மரணம்—குத்புஉத்தீன் டில்லியில் சுல்தானனது

–1230–

–1236: சுல்தானாரஜியா பட்டத்திற்கு வந்தது

–1260–

–1266: பால்பன் சுல்தானனது

–1290–

கில்ஜி வம்சம் –1320

–1296: அல்லாஉத்தீன் சுல்தானனது

–1302: }
–1311: } மாலிக்கபூரின் தென்னாட்டுத் தொடர்போர்கள்

–1320–

துக்ளக் வம்சம் 1320–1388

–1325: முகம்மத் பின் தோக்ளக் பட்டத்திற்கு வந்தது

–1336: விஜயநகரம் ஸ்தாபிக்கப்பட்டது

–1347: பாமினி ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது

–1350–

–1351: }
–1388: } பிரோஜ் துக்ளக் அரசாண்ட காலம்

1388–

–1380–

–1398: தைமூர் டில்லியை சூறையாடினது

–1410–

1414– ஸையத் பரம்பரை –1450

–1414: ஸையத் வம்சத்தினர் டில்லியில் ஆதிக்கம் பெற்றது

–1440–

1450– லோடி வம்சம் –1526

–1450: பஹ்லால்லோடி சுல்தானனது

–1470–

–1489: சிகந்தர்லோடி சுல்தானனது

–1498: வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டைக்கு வந்தது

–1500–

–1510: போர்ச்சுகீஸியர் கோவாவைக் கைப்பற்றியது

–1517: இப்ராஹீம்லோடி சுல்தானனது

–1526: முதல் பானிப்பட்டுச் சண்டை

1526–

–1530–

பரீட்சை வினக்கள்

முதற் பாகம்

அத்தியாயம் I

1. சரித்திரத்தின் போக்கை பூகோளம் வரையறுப்பதை இந்தியா எவ்வாறு விளக்குகிறது?

2. இந்தியா ஒரு தேசமல்ல; ஆனல் அது ஒரு கண்டம் என்ற கூற்றை ஆராய்க.

3. இந்தியாவின் முதற்குடிகள் யாவர்? தற்காலத்தில் காணப்படும் அவர்களுடைய சின்னங்கள் யாவை?

4. சிந்துநதிப் பிரதேசத்தின் நாகரிகத்தைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறுக.

5. இந்து தேச சரித்திரத்தில், வட இந்தியா ஏன் மிக முக்கியமான பங்கெடுத்து வந்திருக்கிறது?

அத்தியாயம் II

1. இந்தோ-ஆரியர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? இதர இனத்தார்களுடன் அவர்களுக்கிருந்த சம்பந்தத்தைக் குறித்து என்ன சாக்ஷியம் இருக்கிறது? இந்தியாவில் எப்பாகத்தில் அவர்கள் குடியேறினர்கள்?

2. வேதங்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. வேதங்களில் வருணித்திருக்கிறபடி ஆரியர்களின் (a) சமூக வாழ்க்கை (b) அரசியல் அமைப்பு இவைகளை விவரித்துக் கூறுக.

4. வேத காலத்து மதமும், பழக்க வழக்கங்களும் எவ்வாறு தற்காலத்திலிருப்பவைகளினின்றும் வித்தியாசப்படுகின்றன?

அத்தியாயம் III

1. இதிகாச காலத்தில் இந்துக்கள் இந்தியாவின் எப்பாகத்தில் குடியேறியிருந்தார்கள்? உன்னுடைய விடையை விளக்க ரேகைப்படம் ஒன்று வரைந்து அதில் முக்கியமான இராஜ்யங்களைக் குறிப்பிடுக.

2. மகாபாரதம், இராமாயணம் இவைகளின் கதையைச் சுருக்கமாய் எழுதுக.

3. "வீரர்காலத்து இந்தியா"வைக்குறித்து ஒரு வியாசம் எழுதுக. அக்காலத்தில் ஸ்திரீகள் என்ன ஸ்தானம் வகித்துவந்தார்கள்?

4. பௌத்த மதம், ஜைன மதம் இவைகள் தோன்றிய வரலாற்றைக் கூறுக. அவை எவ்வாறு ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன?

5. கௌதம புத்தரின் சரிதத்தை எழுதுக.

அத்தியாயம் IV

1. இந்தியாவின் நிலைமை கி. மு. ஏழாவது நூற்ருண்டில் எவ்வாறு இருந்தது?

2. மகத இராஜ்யம் தோன்றிய வரலாற்றைக் கூறுக.

3. மெகஸ்தனிஸ் இந்தியாவைப் பார்த்தபொழுது அது இருந்த நிலைமையைப்பற்றி அவர் யாது கூறுகிருர்?

4. சந்திரகுப்த மௌரியருடைய சாம்ராஜ்யத்தின் அரசியல் ஏற்பாடுகளைச் சுருக்கமாய் விவரி.

5. அசோகர் யாது காரணம்பற்றி பௌத்தமதத்தைத் தழுவிஞர்? அவர் தன் மத மாற்றத்திற்குப்பின் எவ்வாறு அரசாங்க முறைகளைத் திருத்தியமைத்தார்?

6. அசோகருடைய மதத் தூதுகள் ஆசியாவின் நாகரிகத்தில் விளைவித்த பயன்கள் யாவை?

7. 'இந்து தேச சரித்திரத்தில் மிகப் பெருமை வாய்ந்த அரசர்களுள் அசோகர் ஒருவராவர்' என்ற கூற்றை ஆராய்ந்து, அவரை பெருமைபெற்ற இந்திய, ஐரோப்பிய அரசர்களுடன் ஒப்பிடுக.

அத்தியாயம் V

1. மகா அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்த வரலாற்றை ஒரு ரேகைப்படத்துடன் விவரி.

2. குஷானர்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. கனிஷ்கரின் ஆட்சியைப்பற்றி விவரித்தெழுது.

4. (i) பாரசீகர்கள் (ii) கிரேக்கர்கள் (iii) ரோமர்கள் இவர்களுடைய சம்பந்தத்தால் இந்துக்களின் நாகரிகம் யாது பயன் அடைந்ததென்பதை விவரித்துக் கூறு.

5. மௌரியர்கள், குஷானர்கள் இவர்களுடைய காலத்திய முக்கியமான கட்டட, சிற்ப, ஞாபகச் சின்னங்கள் யாவை?

6. பௌத்த மதம், இந்து தேச சரித்திரத்தின் போக்கை எவ்வாறு வரையறுத்திருக்கிற தென்பதைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

அத்தியாயம் VI

1. குப்த வமிசத்தின் சரித்திரத்தைச் சுருக்கமாய்க் கூறுக.

2. குப்தர்களின் காலத்தை **'இந்து அரசாட்சியின் பொற்காலம்'** என்று போற்றப்பட்டிருக்கிறது. ஏன்?

3. ஹியூன்-த்-ஸாங் யார்? அவர் இந்தியாவைப்பற்றி யாது கூறியிருக்கிருர்? அவர் வரைந்திருக்கும் வரலாறும் பாஹியானின் வரலாறும் எவ்விஷயங்களில் வித்தியாசப்படுகின்றன?

4. ஹர்ஷருடைய ஆட்சியின் வரலாற்றைச் சுருக்கமாய் எழுதுக.

5. கௌதம புத்தர் இறந்தபின் பௌத்த மதத்தில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டுவந்தன? அம்மதம் இந்தியாவில் யாது காரணம்பற்றி க்ஷீணித்துப்போயிற்று?

6. ஹியூன்-த்-ஸாங் காலத்தில் நாலாந்தா சர்வகலாசாலையைப் பார்வையிடும் ஒருவன் காணும் காக்ஷிகளை விவரித்தெழுதுக.

அத்தியாயம் VII

1. ராஜபுத்திரர்கள் யார்? அவர்களுடைய முக்கியமான இராஜ்யங்களும் அரச பரம்பரைகளும் யாவை?

2. கஜினி மாமூதின் இந்திய படையெழுச்சிகளில் முக்கியமானவைகளின் வரலாற்றைக் கூறுக. அவர் சோமநாதபுரத்தைச் சூறையாடின விவரத்தையும் எழுதுக.

3. பிருத்வி மன்னரின் வரலாற்றைச் சுருக்கமாய் வரைக.

4. முகம்மதியர்கள் இந்துக்களை ஜயித்ததின் காரணம் யாதென நீ கருதுகிறாய்?

5. இராஜபுத்திர சமஸ்தானங்களின் வாழ்க்கை, இலக்கியங்கள் இவைகளைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

6. பாலர்கள், சேனர்கள் இவ்வமிசத்தார்களின் ஆட்சியில் வங்காளம் இருந்த நிலைமையை விவரித்து எழுதுக.

7. இந்துக்கள் கடல் கடந்து ஏற்படுத்திய குடியேற்றங்களின் வரலாற்றை எழுதுக.

அத்தியாயம் VIII

1. தக்காணத்தின் சரித்திரத்தை ஆந்திரவமிசத்தின் வீழ்ச்சி வரையில் கூறுக.

2. இரண்டாவது புலிகேசியின் ஆட்சியைக் குறித்துச் சுருக்கமாய் வரைக.

3. சாளுக்கியர்கள், இராஷ்டிரகூடர்கள் இவர்களின் வரலாற்றைச் சுருக்கமாய் எழுதுக.

4. இந்தியாவில் உள்ள குகைக்கோவில்களை வருணி.

5. இக்காலத்திய குஜராத்தின் சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுது.

அத்தியாயம் IX

1. தமிழர்கள் யார்? ஆரியர்களின் நாகரிகமும் தமிழர்களின் நாகரிகமும் எவ்வாறு மாறுபட்டிருக்கின்றன?

2. பல்லவர்கள் ஆதிக்கமடைவதற்குமுன் தென்னிந்தியாவின் சரித்திரத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் இவர்களின் வரலாற்றை எழுதுக.

4. இவர்கள் காலத்தில் தென்னிந்தியாவில் தோன்றிய பல்வேறு மத இயக்கங்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

5. தென்னிந்தியாவின் சரித்திரத்தில் கடல் ஆதிக்கம் எப்பங்கு எடுத்துவந்திருக்கிறது?

அத்தியாயம் X

1. முகம்மதிய மதத்தின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் குறித்துச் சுருக்கமாய்க் கூறுக. அம்மதம் வெகு சீக்கிரமாகப் பரவக் காரணம் என்ன?

2. முகம்மதியர்கள் வட இந்தியாவில் படிப்படியாக ஆதிக்கம் பெற்ற வரலாற்றை ஆரம்பத்திலிருந்து குறிப்பிடுக.

3. டில்லி அடிமை அரசர்களின் வரலாற்றைச் சுருக்கமாய் எழுதுக.

4. முகம்மத் பின் தோக்ளக், பிரோஜ்ஷா துக்ளக் இவர்களைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

5. இவர்கள் காலத்துச் சமய, இலக்கிய, இயக்கங்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

6. டில்லி சுல்தான்களின் ஆட்சியில் இந்துக்களின் நிலைமை எவ்வாறிருந்தது?

அத்தியாயம் XI

1. குஜராத்தில் ஏற்பட்ட முகம்மதிய இராஜ்யத்தின் வரலாற்றைச் சுருக்கமாய் எழுதுக.

2. பாமினி இராஜ்யத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? அது சிதைவுற்றதற்குக் காரணம் யாது? அது அழிந்தபின், அதினின்று தோன்றிய இராஜ்யங்கள் யாவை?

3. பீஜப்பூர் இராஜ்யத்தின் வரலாற்றை எழுதுக.

4. தென்னிந்திய சரித்திரத்தில் ஆமத்நகர் எப்பங்கு எடுத்துவந்திருக்கிறது?

5. இக்காலத்திய முகம்மதியர்களின் கட்டடக் கலையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? இந்தியாவின் பற்பல பாகங்களில் அவர்கள் கட்டுவித்த முக்கியமான கட்டடங்களைக் கூறுக.

6. டில்லி சுல்தான்களின் இராஜ்யம் இந்தியாவில் முதன்மையான வல்லரசாக நிலைபெற முடியாமற்போனதின் காரணம் யாது?

அத்தியாயம் XII

1. விஜயநகர் இராஜ்யத்தின் ஆரம்பம், அதன் ஆதிகால வரலாறு இவைகளைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

2. விஜயநகரம் மிகச் சிறப்புவாய்ந்திருந்த காலத்தில் இருந்த நிலைமையை விவரி. அதன் செல்வத்திற்குக் காரணம் யாது?

3. நீ விஜயநகர பட்டணத்தைச் சுமார் கி. பி. 1520-ல் பார்வையிடுவதாகப் பாவித்து அது இருந்த நிலைமையை வருணி.

4. விஜயநகர் இராஜ்யத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த விருத்தாந்தங்களைக் கூறுக.

1526
1530
1556
1605
1627
1654
1680
1707
1742
1748
1757
1761

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS—1941. B3122